வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1991 சித்திரை திங்கள் 12-ம் நாள் (24—4—1960) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 27 | இதழ் 42

# பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

## எதிர்க் கட்சிகளை அழைத்து கவர்ணர் ஜெனரல் நிலைமையை அறிவார்

### சுதந்திரக் கட்சிக்கு போதிய அளவு ஆதரவு இருப்பதாகக் கண்டால் அக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கலாம்

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பு ஏப்ரல் 21—

நாளை அதாவது வெள்ளிக்கிழமை சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் அப்போது யு. என். பி அரசாங்கம் தோற்றுப் போவது நிச்சயம் என்பது தெளிவாகிவிட்டது.

யு என். பி தோற்கும் பட்சத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதுத் தேர்தல் நடத்தும்படி பிரதமர் டட்லி சேனநாயகா கவர்ணர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற விருப்பதாக அவர் உறுதியாக அறிவித்துள்ளார்.

டட்லியின் ஆலோசனைப்படி கவர்ணர் ஜெனரல் பாராளுமன்றத்தைக் கலைப்பாரா? இல்லை என்ற கருத்தே விஷயமறிந்த அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

யு. என் பி அரசாங்கம் தோற்றுப்போய், பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி கவர்ணர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறும் பட்சத்தில் என்ன நடக்கும் என்பதுபற்றி மூன்றுவிதமாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

1. பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி சிபார்சு செய்தால் கவர்ணர் ஜெனரல் அப்படியே செய்ய வேண்டியதுதான்.

2. கவர்ணர் ஜெனரல் நிலைமையை அனுசரித்து விரும்பினால் பிரதமரின் சிபார்சுப்படி பாராளுமன்றத்தைக்கலைக்கலாம்; விரும்பாவிட்டால் கலைக்காமலும் இருக்கலாம்.

3. கலைக்காமல் இருக்கும் பட்சத்தில் அதிக ஆதரவுடைய எதிர்க்கட்சியிடம் அரசாங்கப் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

மேற்படி மூன்று அபிப்பிராயங்களையும் வெளியிட்டவர்கள் தாம் தாம் அறிந்த வகையில் தமது கூற்றுகளுக்கு அரசியல் சட்டத்திலிருந்து ஆதாரங்களும் எடுத்துக்காட்டினார்கள்.

#### சுதந்திரக் கட்சியிடம் அரசாங்கம்

இப்போதுள்ள நிலைமையில கவர்ணர் ஜெனரல் கடைசி வழியையே கையாளுவார் என்று நம்பப்படுகிறது. அதாவது அவர் தற்போது அரசாங்கத்தை ஏற்று நடத்தி வரும் யு. என். பி சகு அடுத்தபடியாக அதிகமான பிரதிநிதிகளைக் கொண்ட தனிக் கட்சியான சுதந்திரக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பார் என்று சொல்லப்படுகிறது.

ஆனல் அப்படி அவர் சுதந்திரக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கு முன்னர் அந்தக் கட்சிக்கு நிலையானதோர் அரசாங்கத்தை அமைத்து நடத்தப் போதிய ஆதரவு இருக்கிறதா என்பதைத் திர்க்கமாகத் தெரிந்துகொள்வார்.

(9-ம் பக்கம் பார்க்க)

## நாகநாதனுக்கு பாராட்டு

டாக்டர் நாகநாதன் பாராளுமன்றத்தில் பேசி முடிந்ததும் சபாநாயகர் திரு. டி. பி. சுபசிங்கா அவரைத் தமது அறைக்கு அழைத்துப் பாராட்டினார். முன்னுள் சபாநாயகர் திரு அல்பேட் பீரிஸும் டாக்டர் நாகநாதனை அவருடைய அருமையான பாராளுமன்றப் பேச்சுக்காகப் பாராட்டியதாகத் தெரிகிறது. 8-ம் பக்கம் பார்க்க.

## பரீட்சை இலாகாவில் மீண்டும் 'விஷமத்தனம்

## தமிழருக்கு சிங்களப் பத்திரங்கள் அனுப்பினார்கள்

(சுதந்திரன் நிருபர்)

தமிழ்ப் பரீட்சார்த்திகளின் பொறுமையைச் சோதிக்கும் செயலொன்றில் பரீட்சை இலாகா மீண்டும் ஈடு பட்டிருக்கிறது. சிங்கள விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பி வேடிக்கை பார்க்கும் இந்த அருவருக்கத்தக்க காரியம் தமிழ் மாணவர்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை உண்டாக்கியுள்ளது.

அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், விவசாயம், சைவினை, வர்த்தகம் என்பவற்றில் விசேட பயிற்சி பெறுவதற்குப் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்காய பரீட்சை அணிமையில் நடைபெற விருக்கிறது. இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் இம் மாதம் 18-ந் தேதியென்று இருந்தது.

#### சிங்களப் பத்திரம்

விண்ணப்பப் பத்திரத்துக்கு எழுதிய தமிழ் பரீட்சார்த்திகள் சிங்கள விண்ணப்பப் பத்திரங்களையே தபால் மூலம் பெற்று வந்தார்கள். பிரமாணப் பிரதிகள் கூடச் சிங்களத்தில்தான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன கொழும்பிலுள்ள தலைமைக் கந்தோருக்கு நேரில் சென்று கேட்டவர்களுக்குக் கூடச் சிங்களப் பத்திரங்களை கொடுக்கப்பட்டனவாம். ஆங்கிலப் பத்திரங்களைக் கேட்ட போது சிங்களத்தில் மட்டுமேதான் பத்திரங்கள் இருக்கின்றனவென்று தட்டிக்கழித்தார்களெனச் சொல்லப்படுகிறது

கடந்த மாதம் தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கான விண்

(9-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண வெங்காயம் அழுகிப் போகிறது

### விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம்

### அரசாங்கத்தின் போக்கு இதற்குக் காரணம்

[சுதந்திரன் நிருபர்]

யாழ்ப்பாணத்து விவசாயிகள் தம் ஒரேயொரு ஏற்றுமதிப் பொருளான வெங்காயத்தை விற்க வழியின்றி வீடுகளில் மூடக்கி வைத்துக்கொண்டு திண்டாடுகின்றனர். கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதில் அரசாங்கம் கையாளும் மாற்றுந்தாய்மனப்பான்மை இந்த வெங்காய விற்பனையை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது.

தற்போதைய போக அறுவடை மூலம் கிடைத்த வெங்காயத்தின் பெரும் பகுதி இங்கே கிடந்து அழுகி நாசமாகப் போகிறதாயினும் அரசாங்கத்தின் பிடிவாதம் தணியவேயில்லை.

ஆரம்பத்தில் இந்திய வெங்காய இறக்குமதியைச் சாட்டாக வைத்து, யாழ்ப்பாண வெங்காயத்தை எடுக்க மறுத்த விவசாயக் கமிஷனர் இலாகா இப்போது மற்றொரு சாட்டைக் கண்டு பிடித்திருக்கிறது: அதாவது தனிப்பட்ட வியாபாரிகளால் இறக்குமதிசெய்யப்பட்ட காய் கொழும்பில் அதிகமாக மார்க்கட்டில் இருப்பதுடன் மலிவாகவும் விற்கப்படுவதால் நாம் என்ன செய்வது என்று கையை விரிக்கிறாராம்.

இடையிடையே நெருக்குதலின் பேரில் கொஞ்சம் கொஞ்சமாக கொள்வனவு செய்து வந்த அரசாங்கம்

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி
ரிச்லெட்ஸ் பெக்டோரல்
(RICHELET'S PECTORAL)



★ இடைவிடாத இருமல்
★ இளைப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர்ர் புர்ர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# மூலதனமும் தொழில் நுட்ப அறிவும் போதிய அளவு இல்லாது இருப்பது ஓர் குறைபாடு

## ஊக்கமும் உழைப்பும் நிருவாக ஆற்றலும் குன்றியிருப்பது முக்கியமான காரணம் ஈழநாட்டுக் கிராமப் பொருளாதாரப் பளுவுக்கு

### ஒரு தொழில் செய்வோர் இன்னும் எத்தனையோ தொழில்கள் செய்து நிறையச் சம்பாதிக்கலாம்

அ. விஜயன்
விக்டோரியா பி. ஏ.

ஈழ நாட்டுக் கிராமங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கக் காரணம் யாது என்பதை ஆராய்வோமாயின் ஒருண்மை நமக்குப் புலப்படும். போதிய அளவு மூலதனமும் தொழில் நுட்ப அறிவும் இல்லாதது ஒருபுறமிருக்க, அன்றாடத் தொழில் துறையில் அநுட்டிக்கத்தக்க முறைகளை கிராமக் குடி மக்கள் கைக்கொள்ளா திருப்பதும் ஒரு பெரும் குறை என்பது தெரியவரும். பண்ணைத் தொழில் நடாத்தும் கமத் தொழிலாளரும் கிராமப் புறத்தவரும் தக்க ஊதியம் பெற்று உழைப்பின் பயனை நுகரவேண்டுமென்றால், பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் சில முறைகளைக் கையாள்வதவசியம். எனவே கிராம மக்கள் பொருளாதார சுதந்திரத்துடன் வாழ அவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் சில உள. அவைபற்றி இங்கு காண்போம்.

#### அறிவும் உழைப்பும்

முதலாவதாக, விவசாயிகளுக்கும் பண்ணைத் தொழிலாளருக்கும் தம் தொழில் பற்றிய சிறந்தஅறிவு இருக்க வேண்டும்; அத்துடன் இடையரு உழைப்பும் தேவை. அறிவும் உழைப்பும் ஒன்றிணையும் போது திறமையுண்டாகிறது. இத்திறமை கிராம வாசிகளுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். உதாரணமாக நிலத்துக்குச் சதா வேலை வைத்துக் காலத்துக்குக் காலம் உழுது, எருவிட்டு, மாற்றுப் பயிர் செய்கை செய்து வரவேண்டும்.

பண்ணைத் தொழில் மேற்கொள்வோர் தம் பண்ணை வேலையாட்களுக்கும் கால் நடைகளுக்கும் வேலை கொடுத்து அவர்களது உழைப்பை இலாபகரமான வழியில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். வயலில் வேலை அதிகமிராத வேளையில் கூடை முடைதல், கயிறு திரித்தல் போன்ற சிறு தொழில்களில் வேலையாட்களின் சேவையைப் பயன் படுத்த வேண்டும். அது போன்றே எருது, எருமை முதலியவைகளுக்கும் உழுதல், ஏற்றம் இறைத்தல் முதலியவற்றில் தொடர்ச்சியாக வேலை கொடுக்க வேண்டும்.

#### உழும் முறை

'அகல உழுவதை ஆடி உழு' என்பதற்கேற்ப, நிலத்தை ஆழமாக உழவேண்டும். அதிலும் நாட்டுக் கலப்பைகளைவிட இரும்புக் கலப்பைகளையே உழவுக்குப் பாவிப்பது சிறப்பு. மழை வரப்போவதை எதிர்நோக்கி, வெள்ளம் ஓடும் திசைக்கு குறுக்கே கால்கள் அமையும்படி உழுவது நல்லது. 'களை எடாதவன் விளைவு எடான்' என்பதால் களை பிடுங்குவதில் சளைத்து விடக் கூடாது. குப்பை எரு, தழை எரு, தொழு உரம் ஆகிய உரங்களைத் தம் நிலங்களிலே உற்பத்தி செய்ய வேண்டும். எருக்களை குழியில் சேமித்து வைப்பதுடன் அவை மழையிலும் வெயிலிலும் கெட்டு விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அன்றியும் விதைக்கும் விதைகள் கலப்பற்றவையாக இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளவேண்டும்.

#### விரைவில் பயன்

பருவகாலத்துக்கேற்ற பயிர்களையும் அவற்றை அவ்வப்போது பயிரிடுவதால் ஆகும் வரவு செலவினங்களை முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்கேற்றுப் போலும் விளைவிக்க வேண்டும். மேலும் விரைவில் பலன் தரக் கூடிய பயிர்கள் எவை என்பதை அறிந்து பயிர் வளர்ச்சியை துரிதப்படுத்தக் கூடிய விஞ்ஞான முறைகளைக் கையாண்டு, குறைந்த கால அளவில் நிறைந்த விளைவை எடுக்கும் வகையில் கருமமாற்ற வேண்டும். இவ்வாறெல்லாம் கிராமக் கமத் தொழிலாளர் செய்வதற்கு அவர்களுக்கு அறிவும் உழைப்பும் தேவை; திறமை தேவை. இவையிருந்தால் அம்மக்களது பொருள் வருவாய் பெருகி வாழ்க்கைத் தரம் உயரும்.

#### எதையும் வீணாக்குதல் கூடாது

கிராமப் புறங்களில் பற்பல பண்ணைத் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் தம் பொருள் பலத்தை பெருக்கிக் கொள்வதற்கு மனத்தில் வைத்திருக்க வேண்டிய மற்றொரு விடயம் எப்பொருளையும் வீணாக்காதிருத்தலாம். பண்ணையில் சில தொழில்களுக்கு வசதியிருந்தும் தொழில் செய்வோர் அவ்வசதியை நன்கு பயன்படுத்தி தொழிற் பெருக்கத்தைஉண்டாக்கிக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். நிலத்தின் சிறு பகுதியிலும் கூட ஒரு விளைபொருளை உற்பத்தி பண்ணுவதற்குத் திட்டம் தீட்டிக் கொள்ள வேண்டும் என்று சற்று முன் கூறினோம். இது தவிர உழவுக் கருவியை உபயோகிப்பதிலும், கால்நடைப் பராமரிப்பிலும், விதைகள் தூவுவதிலும், அறுவடை செய்வதிலும், எருக்குழி அமைப்பதிலும், இன்னோரன்ன பல கருமங்களிலும், குடியானவர் எதனையும் வீணாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

#### காலத்தையும் பணத்தையும் விரயமாக்கல் ஆகாது

தோட்டம் போட்டிருப்பவர் இரண்டொரு தேன் கூடுகளை வைத்துக்கொள்ளலாம். தோட்டக் கிணற்றில் ஒரு சில மீன்களை வளர்க்கலாம். கிணற்று நீர் பாயும் வாய்க்கால் மருங்குகளில் மாட்டுக்கான புல்வகைகளைப்பயிராக்கலாம். வாழைத் தோட்டத்தில் குளிர்ச்சி அதிகமாயிருப்பதால் ஆங்கு ஆங்கிலக் காய்கறிகள் சிலவற்றைப் பயிர் செய்யலாம். தென்னந் தோப்பில் தென்னையின் நிழலில் கீரை வகைகளை உற்பத்தி செய்யலாம். இப்படியாக தோட்டத்தில் ஏலவே இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தி எதனையும் வீணாக்காது, பாடுபடுபவன் தன் சக்தியைப் பழாக்காது, ஊதியந்தரும் வழியில் கவனஞ் செலுத்த வேண்டும். இது ஒருபுறமிருக்க, ஏழைக் கிராமவாசிகள் பண்டிகை என்ற பெயரால் ஆண்டு தோறும் அரும் காலத்தையும் பெரும் பணத்தையும், வீண்விரயம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். மேலும் கிராம விவசாயக் குடும்பத்தில் ஆணும் பெண்ணும் ஒத்துழைத்தால்தான் குடும்ப பொருளாதாரம் மேலோங்கும் என்பதையும் மறந்து விடலாகாது.

#### நிருவாக ஆற்றல்

பொருளாதாரத்தைப் பெருக்க கிராமப் பகுதிகளில் பண்ணைத் தொழில் புரிவோருக்கு இருக்க வேண்டிய மற்றொரு அம்சம் நிருவாக சக்தியாகும். கால்நடை வாங்கவோ, பயிரிடுவதற்கான தொடக்க வேலைகளை ஆற்றவோ பணம் தேவைப்படலாம்; கடன் வாங்கவும் நேரிடலாம். கையிலிருந்த பணத்தைச் செலவிட்டாலும் சரி, கடன் வாங்கிக் காரியஞ் செய்தாலும் சரி, போட்ட மூலதனத்தை மீட்கவும் மேற்கொண்டு வருவாயைப் பெருக்கவும் பண்ணை வைத்திருப்போர் பண்ணைக் கருமங்களைச் சிறந்த முறையில் நிருவகிக்க வேண்டும். வருமானத்திலிருந்து ஒரு பகுதியைச் சேமித்து வைக்க வேண்டும். வரவு செலவுக் கணக்குகளை ஒழுங்காக எழுதிவைக்க வேண்டும். "ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு" என்று பழமொழியொன்றுண்டு. கணக்கு விவரம் வைத்திருந்தால் அவசியமற்ற செலவைச் சுருக்கியோ உபயோகமான துறைகளில் அதிகப் பணம் செலவிட்டோ நிருவாகம் செய்யலாம்.

#### புதுமை வேண்டும்

இன்னும், பழைய, சம்பிரதாயங்களை மட்டும் விடாப்பிடியாகக் கொண்டிராமல், விஞ்ஞான காலத்திற்கேற்ப புதிய விடயங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதும் அதன் மூலம் பண்ணை வருவாயை உயர்த்துவதும் ஒரு கூறுகும். ரணமாக நாட்டுக் கோழிகளை விடச் சீமைக்கோழிகள் அதிக இலாபந் தரக் கூடியவை என்ற கருத்து கிராம மக்களிடை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது; ஆனால் பரிசோதனை செய்து பார்த்தின் பயனாக நாட்டுக் கோழிகளை வளர்ப்பது தான் கூடிய இலாபந் தரும் என்னும் உண்மை இப்போது புலனாகியுள்ளது. இவ்வாறாக பண்ணையை நிருவகிப்போர் பல புதிய பரிசோதனைகளைச் செய்து வருவாராயின் கிராம மக்களின் பொருள் வருவாய் ஓங்க வழியுண்டு.

#### தரகர் தொல்லை

ஒருவர் பொருள்களை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது; உற்பத்தியாகும் பொருள்களை நல்ல விலைக்கு விற்கவும் தெரிந்திருக்க வேண்டும். நெற்றி வியர்வை நிலத்தில் விழ நாளெல்லாம் பாடுபடும் கிராம வாசி, தன் உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவதில்லை. அவன் ஊதியத்தைத் தட்டிக் கொண்டு போகின்றவர்கள் தரகர்களே. எனவே கிராமங்களில் உற்பத்தி செய்வோர் உற்பத்திப் பொருள்களை அறிந்திருப்பது நல்லது. உதாரணமாக ஒருவர் மிளகாய்த் தோட்டம் போட்டிருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அவர் தன் தோட்டத்தில் பயிரான மிளகாயை பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை நான்கு தவணைகளாகப் பறித்து, அவை சேதமடையாது பாதுகாத்து, ஓரிடத்தில் தொகுத்து வைக்க வேண்டும். தொகுத்து வைத்த மிளகாயை தரப்படுத்த வேண்டும். உயர்ந்த ரகம் மட்ட ரகம் என்று வேறாகப் பிரித்து வைக்க வேண்டும். அப்படியாயின் உயர்ந்த ரகத்தைக் கூடிய விலைக்கு விற்க முடியும்.

#### விற்பனை ரகசியம்

மேலும் ஒரே தடவையில் "சுவீப்" கிடைத்துவிட வேண்டுமென்று நினைப்பவனைப் போன்று மிளகாய்க்கு அதிக விலைவைத்து விற்க நினைக்கக் கூடாது. யாரும் ஒத்துக் கொள்ளும் ஒரு தொகையை இலாபமாக வைத்து விற்க வேண்டும். மேலும், அவசியமானால் மிளகாய் வியாபாரத்தை விளம்பரம் செய்யலாம் வெளியிடத்துக்கு மிளகாயை அனுப்புவதானால் அதனை மூட்டைகளில் அடக்கமாகக் கட்டி ஏற்றிச் செல்வதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும். போக்குவரத்துச் செலவு அதிகம் ஏற்படாதபடி செய்வதற்காக, ஒரு தவணை குறைந்த அளவில் மிளகாய் பறிக்கப் பட்டிருந்தால் அதனை மற்றவர்களுடைய விற்பனைப் பொருள்களுடன் சேர்ந்து அனுப்ப முடியுமா என்பதைக் கவனிக்க வேண்டும். மிளகாய் யாருக்கு வழமையாய் விற்கப்படுகிறதோ அந்த வாடிக்கைக்காரரிடம் எப்போதும் போல் விற்க வேண்டும். விலை கூடி விட்டதே என்று வேறு வியாபாரிக்கு விற்று விடக் கூடாது. கூடிய விலையை அவரது வாடிக்கைக்காரரிடமே பேரம் பேசிப் பெற்றுக் கொள்ள முடியும்.

#### சந்தையாக்கல்

அன்றியும் கிராமப் புறங்களில் பொருள்களை விளைவிப்போர் சந்தை நிலவரத்தை நன்கு அறிந்து, எந்தெந்த ஊரில் என்ன என்ன பொருளுக்கு கிராக்கிஉண்டு என்பதையும், எந்தெந்த காலத்தில் எவ்வெப் பொருள் அதிக விற்பனையாகும், அதிக இலாபம் கொடுக்கும் என்பதையும் தெரிந்து தம் பொருள்களை உற்பத்தி செய்து, விற்பனையும் செய்ய வேண்டும். பொருள் விற்பனையில் மேலே கூறிய அம்சங்களைக் கிராமங்களிலுள்ள உற்பத்தியாளர் கடைப்பிடிப்பார்களானால் அவர்களது வருவாய் உயர்ந்து பொருளாதாரம் சீர்ப்படும் என்பது நிச்சயம்.

#### கூட்டுறவுச் சங்கம்

கடைசியாக, கிராம மக்கள் தம்மிடையே கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொள்வதின் மூலம் பலதுறைகளிலும் பயன் பெற்று, தம் பொருளாதார நலனைத் தேடிக் கொள்ளலாம். ஈழநாட்டுக் கிராம மக்களின் நலன் கருதியே இப்போது பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் கிராமந்தோறும் நிறுவப்படுகின்றன. அவற்றை கிராம மக்கள் நன்கு பயன்படுத்த வேண்டும். விவசாய உற்பத்திகளும் பிறபண்ணைத் தொழில்களுக்கும், உதவிகளும் ஆலோசனைகளும் அவசியமாகலாம். பொருள்களை விற்பதற்கு உதவி தேவைப்படலாம். கிராமவாசிகளுக்கு உணவு, உடைக்கான தேவைகள் பல இருக்கும். வெள்ளக் கொடுமையினாலோ, மழையின்றி வரட்சியினாலோ விளைபொருள் சேதப்பட்டு, தம் குறைகளை

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
மாதத் தவணைக் கட்டணங்களில் பெறுக் கொள்ளலாம்
இலங்கை பூராகவும் விற்பனையாகிறது
உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

க. குமாரராஜா, யாழ்ப்பாணம்

கே: சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரை நம்ப முடியாது. அவர்கள் நிலையற்றவர்கள். சொல்லுவார்கள் செய்யமாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினர் அப்படியல்லர். உறுதியானவர்கள். சொன்னால் செய்வார்கள். எனவே தமிழரசுக் கட்சியினர் யு. என். பி யுடன் தான் ஒத்துழைக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்களே இது சரியா?

ப: சரியல்ல. எல்லாருமே சந்தர்ப்பவாதிகள்தாம். சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமஅந்தஸ்து என்றுசொல்லி வந்த யு. என். பியினர் களனித் திர்மானத்துடன் 'சிங்களம் மட்டும்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையா? பரிபூரண பெரும்பான்மை கிடைக்காவிட்டால் ஆட்சியை ஏற்கமாட்டேன் என்று கூறிய திரு டட்லி சேனநாயசா 50 பேரோடு ஆட்சியை அபகரிக்க ஆசைப்படவில்லையா? சொன்னால் செய்வார்கள் என்றோ, நிலையானவர்கள், உறுதியானவர்கள் என்றோ இவர்களையும் சொல்ல முடியாது. யாரையும் நம்பிப் பின்போவதைவிடத் தமிழ் மக்கள் தங்கள் சொந்தப் பலத்தைப் பிரயோகித்தே எந்த ஒரு கட்சியினரையும் வசப்படுத்த வேண்டும்.

ஃ

ஆர். எஸ். கருணாகரன், பெல்மதுளை

கே: ஐக்கிய தேசியக் கட்சியினர் அரிசி விலையை 25 சதமாகக் குறைத்துவிட்டமையினால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் சிங்களப் பொதுமக்கள் அவர்களை ஆதரிப்பார்கள் அல்லவா?

ப: இந்தக் காலத்துப் பொதுமக்கள் நீங்கள் நினைப்பதுபோல் ஏமாளிகள் அல்லர். "நாம் ஆட்சிக்கு வந்தால் அரிசி விலையை 25 சதமாகக் குறைப்போம்" என்று இடதுசாரிகள் தேர்தலின் முன்பே கூறினார்கள். அப்போது ஜே. ஆர். ஜயவர்த்தன "அரிசி விலையை 25 சதமாகக் குறைப்பது சாத்தியமில்லை. அதனால் நாட்டுக்கு நட்டம் ஏற்படும்" என்று பேசினார். இப்போது மட்டும் எப்படிக் குறைக்க முடிந்தது? இன்று யு. என். பி. அரிசி விலையைக் குறைத்ததற்கு காரணம் இடதுசாரிகளின் பிரசாரந்தான். எனவே பெருமை அவர்களைத்தான் சார வேண்டும். அரிசி விலையைக் குறைத்து 'வோட்டு'ப் பிடிக்கப் பார்க்கிறது யு. என். பி. இது ஒரு தேர்தல் 'ஸ்டண்ட்' என்பதைப் பொதுமக்கள் ஏற்கனவே உணர்ந்துகொண்டார்கள்.

ஃ

சி. கே. சிதாராமன், நுவரேலியா

கே: சிந்தனையைத் தூண்டுவது எது?

ப: சிந்தனையைத் தூண்டுவது வறுமை, துன்பம் அல்லது தோல்வி. தேர்தலில் தான் போட்டியிட்டிருக்கக் கூடாது என்ற சிந்தனை பேரின்பநாயகன் போன்ற பெரியார்களுக்குக் கூடத் தோல்வியின் பின்புதானே ஏற்படுகிறது!

ஃ

எம். பாலசுந்தரம், ஆரப்பற்றை

கே: மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு இராசதுரையின் வெற்றியினால் நேரடியாகப் பயன்பெற்றவர் யார்?

ப: அவரோடு போட்டியிட்ட திருவாளர் மயில்வாகனந்தான். தப்போடுகூட நின்றவர்களில் உண்மையான நண்பர்கள் யார்? கழுத்தறுத்த துரோகிகள் யார் என்பதை அவர் இப்போது தெரிந்துகொண்டு பயன்பெற்றிருப்பார் என்று நம்புகிறோம். இளம் அட்வகேட்டாகத் தொழில் துறையில் உயர்ந்துவரும் திரு மயில்வாகனத்தை வழுக்குமரமான அரசியல் தேர்தல் களத்தில் குதிக்கவிட வேண்டாம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் மனைவிக்குப் புத்தி கூறியிருந்தேன். அவர் உணரத் தவறிவிட்டார். இப்போது அதன் பலாபலனை உணர்ந்துவிட்டார்.

ஃ

செல்வி பத்மவிலாசனி செல்வத்துரை, யாழ்ப்பாணம்

கே: தமிழ்நாட்டுப் பேச்சாளர்களுள் தங்களைக் கவர்ந்தவர்கள் யார் யார்?

ப: என்னைக் கவர்ந்தவர்கள் எழுவர். ஆர். பி சேதுப்பிள்ளை, கி. வ. ஜகந்நாதன்,

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த பெட்டி 1183.
> கொழும்பு-12.

சி. என். அண்ணாத்துரை, ஜி. சுப்பிரமணிய பிள்ளை, ப. ஜீவானந்தம், ம. பொ. சி., ஈ. வே. ரா.

ஃ

பெ. செந்தில்குமரன், நயினாதீவு

கே: வட பகுதியில் போட்டியிட்டவர்களுள் அதிகப்படியாகச் செலவழித்தவர் யார்?

ப: அதிகப்படியாகச் செலவு செய்தவர் ஊர்காவற்றுறைத் தொகுதிக்குப் போட்டியிட்ட திரு ஏ. எல். தம்பியையாதான் என்று பேசிக்கொள்ளப்படுகிறது. அவர் ஒரே தொகுதியில் செலவிட்ட தொகையைத் தமிழரசுக் கட்சி நிதிக்குக் கொடுத்து அவரும் யாழ்ப்பாணப் பட்டணத்தில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டிருந்தால் அந்தப் பணத்தைக்கொண்டு தமிழரசுக் கட்சி 20 தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கலாம்.

ஃ

கே. முருகேசு, ஈச்சமோட்டை

கே: குயுக்தியாரே, வைத்திய சம்பந்தமான வினாக்களுக்கும் தாங்கள் பதிலளித்தால் என்ன?

ப: என்னால் அறிவுக்கு வைத்தியம் கூற முடியுமே தவிர உடலுக்கு வைத்தியம் கூற முடியாது. வெகு விரைவில் சுதந்திரனில் ஒரு வைத்தியப் பகுதி ஆரம்பிக்கப் போகிறது. சிறந்த டாக்டர் ஒருவர் நோய்பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்லப் போகிறார். கொஞ்சம் பொறுத்திருங்கள்.

ஃ

செல்வி பாக்கியலட்சுமி, செங்கலடி.

கே: சமீபகாலமாகத் தங்களுடைய கேள்வி—பதில்கள் வழக்கப்பிரகாரம் உள்ள நகைச்சுவையை இழந்து அரசியலுக்கே அதிக இடமளிப்பனவாயிருக்கின்றன. பெண்களாகிய நாங்கள் நகைச்சுவைப் பதில்களையே அதிகம் விரும்புகிறோம். என்ன சொல்கிறீர்கள்?

ப: இயற்கையாகவே நானும் நகைச்சுவைப் பதில்கள் அளிப்பதையே பெரிதும் விரும்புகிறேன். ஆனால் பொதுத் தேர்தல் இடையில் வந்ததாலும். தொடர்ந்து அரசியல் நிலைமை சற்றுக் கொதித்துக்கொண்டிருப்பதாலும் அரசியல் கேள்விகளுக்கும் பதிலளித்து வருகிறேன். விரைவில் தாங்கள் விரும்புவதுபோல் நகைச்சுவைப் பதில்கள் பாதிக்குப் பாதியேனும் இடம்பெறும் என்று உறுதிகூறுகின்றேன். சமுதாயத்தில் பாதிப் பங்கான பெண்குலத்தின் அபிலாஷையைப் புறக்கணிக்கலாமா?

ஃ

க. கருணாகரன், திருகோணமலை

கே: சிறீலங்கா சுதந்திரக் கட்சியைவிட ஐக்கிய தேசியக் கட்சியினால்தான் ஒருபலமான அரசாங்கத்தை அமைக்க முடியும். எனவே சுதந்திரக் கட்சியை நம்பி அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவளிப்பதைவிட பலமான கட்சியான யு. என் பிக்கு ஆதரவளித்து அதை மேலும் பலப்படுத்துவதே புத்தியல்லவா?

ப: இல்லை. தமிழ் பேசும் மக்கள் இன்று தங்கள் இழந்த உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எந்த அரசாங்கமும் பலமாக அமைந்துவிட்டால் அதை எதிர்த்துப் போராடுவது சுலபமான காரியமல்ல. பலமான அரசாங்கம் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பலமாக அடக்கிவிடக் கூடும். எனவே தள்ளாடும் அரசாங்கத்தைப் பதவியில் ஏற்றி வைப்பதே நாம் அதைப் பணிய வைத்து நமது உரிமைகளைப் பெற வழியாகும். அதுவே சிறந்த அரசியல் தந்திரமுமாகும்.

திருப்பதி புவனசுந்தரி ராயல, கொழும்பு

கே: ஒரு மனிதனுக்கு கண்தான் பிரதானம் என்கிறேன். தங்கள் கருத்தென்ன?

ப: கண்ணைவிட கண்ணியம்தான் பிரதானம் என்பது என் கருத்தாகும்.

ஃ

ஆர் பரமசிவம், கரவெட்டி

கே: உடுப்பிட்டித் தொகுதிப் பிரதிநிதி திரு சிவசிதம்பரத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அவர் ஒரு பிரதிநிதியாகிவிட்ட பின்பு அவரோடு பழகுகிறவர்கள் எல்லோரும் அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயமே வெளியிடுகிறார்கள். சூதுவாதற்ற நேர்மையும் உறுதியும் அவரிடம் காணப்படுவதாகப் பட்டிருப்புப் பிரதிநிதி திரு இராசமாணிக்கம் பாராட்டுகிறார். தமிழ் காங்கிரஸ் என்ற கறைப்பிடித்த 'லேபலை' உரித்தெறிந்தால் அவர் ஒரு சிறந்த பிரதிநிதியாக உடுப்பிட்டித் தொகுதியில் தொடர்ந்து விளங்கலாம் என்பதே பலருடைய கருத்தாக இருக்கிறது.

ஃ

மு. கந்தவனம், மானிப்பாய்

கே: திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் இப்போது என்ன செய்கிறார்?

ப: இவ்வளவு காலமும் பல வழக்குகளில் நான் என்று முன்னின்ற திரு பொன்னம்பலம் இப்போது ஒரு தேர்தல் வழக்கிற்குப் பின்னால் நிற்கிறார் என்று பேசிக் கொள்ளப்படுகிறது.

ஃ

அப்துல் ஹஸன், கிண்ணியா

கே: மூதூர் தொகுதியின் செக்கண்ட் கிளாஸ் எம். பி. முகம்மது அலியின் தலைமீது திருகோணமலைக் கச்சேரியின் உத்தாரம் முறிந்து விழுந்ததாமே?

ப: பாவம் தப்பிவிட்டார்! ஆனால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதி மக்களின் உத்தாரம் அவர் தலைமீது முறிந்து விழப்போகிறது. அதிலிருந்து அவர் தப்பவே முடியாது!

ஃ

வி. கே. நாகராசன், கொக்குவில்

கே: தமிழ்ப் பிரதேசத்துக்கு ஒரு தனிப் பாராளுமன்றம் ஏற்பட்டால் அதன் "ஸ்பீக்கர்" பதவிக்கு ஏற்றவர் யார்?

ப: சந்தேகம் இல்லாமல் திருமலைப் பிரதிநிதி திரு என். ஆர். இராஜவரோதயம் தான்.

## தலை விதியோ?

போன படகையும் காணவில்லை,—அவர்
போன திசையும் தெரியவில்லை!
தேனலை வீசி மதிளமும் வேளை, என்
சிந்தை கலங்கிச் சுழன்றிடுதே!

சின்னக் குடிசைக்குள் மங்கி மங்கிச்—சிறு
"சிம்னி" விளக்கும் உயிர்விடுதே!
மன்னரும் நானும் மகிழ்ந்துபெற்றிட்ட, பொன்
வண்ணனே, தொட்டிலிற் கண்ணயர்ந்தான்!

காலையிலே, 'அவர்" முத்தமிட்டுச் சொன்ன
கன்னல் மொழிகள், என் முன்வருதே!
"வாளை, சுறு, கெண்டை மீன்களெல்லாம்—வந்து,
வந்து விழுமடி நம்வலையில்!

வண்ணக் கயல்விழிப் பெண்ணணங்கே,—இன்றுன்
வாய்விச்சைக் கைவிச்சிற் காட்டிடடி!
என்ன மணச்ருசி என்றுசொல் லிச்சொல்லி
இன்பமாய் மீன்கறி புண்ணவைப்பாய்!

பால்மணம் மாறுநம் சின்னவன் வாயிலும்
பக்குவ மானமீன் துண்டமொன்றைத்
தேழுற ஊட்டி மகிழ்வோமடி!—தொழில்
தேட்டம் அவனையும் பற்றுமன்றோ?"

இப்படிச் சொன்னஎன் அன்பர் மொழிகள்
இதயக் குகையில் ஒலித்திடுதே!
எப்படி யானதோ தோணி? அந்தோ,—பாழும்
எத்திசைப் பேய்க்காற் றிழுத்ததுவோ?

வழித்துணை யாய்ச்சென்ற காற்றினேன்—கொடும்
வன்புய லாகவும் மாறினனோ?
அழுத்த மனக்கொலை காரனைப்போல்,—பாறை
ஆருயிர் போக்குமுன் நின்றதுவோ?

சுந்தரத் தோழனும், தோணியும் பொல்லாச்
சுழலிடைப் பட்டுத் துடித்தனரோ?
நைந்து பலப்பல எண்ணித் தவிக்கும், இந்
நங்கை துயர்ப்பழு நீங்கிடுமோ?

மீனவர் வாழ்க்கையே நாள்விடிந் தால், ஒரு
வேதனைச் சோகத் தொடர்கதையோ?
வாழுநாள் முழுவதும் சாவுடன் போராடி
மாய்வதும் எங்கள் தலைவிதியோ?

[(சே. கனகசபை பிள்ளை)]


ஆஸ்த்மா என்ற தொய்வால் அவதிப்படும் அன்பர்களே

அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூரண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம்.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"

ஒரு நவீன சஞ்சீவி

"ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் ரூ. 15-00.
(மிக உபாதை தரக்கூடிய, நாள்ப்பட்ட ஆஸ்த்மாவுக்கு)
"ஆஸ்த்மடிக்கா" சாதாரணம் ரூ. 5-00.

வி. பி. பி. சதம் 85.

விபரங்களுக்கும் வி. வி. பி. ஓடர்களுக்கும்

டாக்டர்,

மொடர்ன் கிளினிக்
MODERN CLINIC

255, காலி ரோட், (பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்)
கொழும்பு—4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தி, உற்பத்தியை அதிகரிக்கும் விளைச்சலைப் பெருக்கும்

## பாலைவனத்தை பசுஞ்சோலையாக்கும்

## கொலைக் கருவி தயாரித்து மனித இனத்தை கருவறுத்தல் கூடாது—ஆக்க வேலைக்கு அது பயன்படுத்தப்பட வேண்டும்

மனிதப் பிறவி அற்புதமானது. மனிதன் பரந்த வானத்தில் பறக்கிறான். அலைமோதும் ஆழியின் கீழ் சுழியோடுகிறான் முகிற் கூட்டங்களை நிறுத்திச் சோவென மழை பெய்விக்கிறான். இரவைப் பகலாக்க மின் தெறியை அமுக்குகிறான். செயற்கைச் சந்திரனை வான வெளியில் வலம் வர விடுகிறான். மனித ஆற்றல் கற்பனைக்கெட்டா அற்புதங்களைச் சாதித்துவிட்டது. இன்னும் சாதிக்கப்போகின்றது.

ஆதியில் மனிதன் உடல் உழைப்பினால் சமுதாயத்தைக் கட்டி எழுப்பினான். மாடுகள், குதிரைகள், எருமைகள் அந்த ரீதியில் மனித அடிமைகள் — இத்தகையோரின் உழைப்பே மனித வளர்ச்சியின் ஆரம்பப் படியாயிற்று. நீர், காற்று, இவற்றின் வேகச் சக்தியின் தத்துவத்தை உணர்ந்து இரண்டாவதாக யந்திரங்களையாக்கி, இயந்திர சக்திமூலம் உழைப்பைத் தேடினான். மூன்றும் சகாப்தம் இரசாயன உழைப்பின்மூலம் சமுதாயம் வளர்ந்த காலமாகும். இது ரசாயன வகை ஒன்றுடன் ஒன்று இணையும் போது பிறக்கும் சக்திமூலம் தன் உடலை வளர்த்தான். மனித முன்னேற்றத்தின் நான்காவது படியாக அமைவது அணுசக்தி யுகமாகும்.

### அணுசக்தியின் பிறப்பு

அணுக்கள் ஒவ்வொன்றும் கொள்ளும் உறவிலிருந்து பிறக்கும் மகாசக்தியே அணுசக்தியாகும். இச்சக்தி முதன் முதல் அழிவு வேலைக்கு ஆக்கப்பட்ட அணுக் குண்டென்பதையும் அது செய்த அசுரத்தனமான அட்டூழியத்தையும் உலகம் அறிந்து மனம் நொந்தது. நாகரிக அமெரிக்க ராணுவத்தார் கிரேசியாமா நகரில் 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வீசிய அணுக்குண்டு வெடித்தது. உயிரினங்கள் மரம் தொடக்கம் மனிதன்வரை எல்லாம் துடித்தன; இறந்தன; கருகின.

மனிதனின் அவசியதேவைகளுக்கும், மனித இனப் பாதுகாப்புக்கும், அணுசக்தியை ஆக்க வேலையில் உபயோகிக்க வேண்டும் என்னும் எண்ணம் இன்று உருவாகின்றது. இரசாயன சகாப்தத்தில் நிலக்கரி, நிலநெய் போன்ற மூலப் பொருட்கள் இன்றியமையாதவை. இவற்றை மனிதன் உபயோகிக்கும் வேகத்தில் இன்னும் சில நூற்றாண்டுகளில் இம்மூலப் பொருட்கள் சூன்யமாகப்போகும் தன்மை மனிதன் சிந்தனைக்கு எட்டாமல் இல்லை. அணுசக்தியைக்கொண்டு மனிதனை நரக வேதனைக்குள்ளாக்கிக்கொள்வதும் எதிர்

**வ. ச. நாதன்**

காலச் சந்ததியை கூன், குருடு, சப்பாணியாக்கிவதைப்பதும், மனிதப் பண்புக்கு முரண்பாடானதொன்றென்பதை ஜீவகாருண்யமுடையோர் உணர்ந்தனர். பிக்னித் தீவில் வெடித்த பரீட்சைக்கான அணுக்குண்டு தொன்னூறு மைல்களுக்கப்பால் நின்ற செம்படவரின் பாசக்கயிறுகி காலனுலகிற்கு இழுத்துச் சென்றதென்றால் அதனை நல்ல வழியில் உபயோகித்தால் எத்தனை பயனைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும்?

### பயன்

இரண்டாவது உலக யுத்த ஆரம்பத்தில் அணுசக்தியைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டது அணு உலை அமைக்கப்பட்டு இதன் மூலம் வெளிக்கிளம்பும் மகா சக்தியை மின் சக்தியாய் மாற்றினர். நகரங்களின் அந்தகாரத்தை நீக்கி இரவு பகலென்ற பேதமின்றி இந்திரலோகம்போல் மிளிரவும், குறைந்த செலவில், சொற்ப நேரத்தில், கோடி ரூபாய் பெறுமதியுள்ள பொருட்களை ஆக்கி வெளியேற்றும் ஆலைகளை இயக்கவும், மிதக்கும் மாளிகைகள்போன்ற கப்பல்கள் அமிழ்ந்தி அசைந்து திரியவும் இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா முதலிய நாடுகளிலிருந்து பெறப்படும் அணு உலையிலிருந்து வெளிக்கிளம்பும் மின் சக்தி உதவுகின்றது.

### அணுசக்தி உலையை இயக்க யுரேனியம்

இம் மகாசக்தியை தரும் அணு உலையை இயக்குவதற்கு தேவைப்படும் பொருள் யுரேனியமாகும். இப்பொருள் சிறிதளவில் காணப்பட்டபோதிலும் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் போதுமானது இப்பொழுது கைவசம் உண்டெனக் கூறலாம்.

### அணுசக்தியின் ஆற்றல்

அரிசிபோன்ற தானிய உற்பத்தியை பத்து மடங்கு பெருக்கத்தக்க அபூர்வ வல்லமை அணுச் சக்திக்கு உண்டு. பாலைவனங்களையே கனிதரு சோலைகளாகமாற்ற அணுசக்தி உதவுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். புன்னகை பூத்தாப் போல் பூமியில்தாவரஇனம் பூத்துக் காய்த்து மனிதனின் சுபீட்சத்திற்கு உதவ அணுசக்தி பேருதவி புரியும். இதனால் மக்கள் வாழ்க்கைத் தரம் உயருமன்றோ.

மனிதவர்க்கத்தை பயத்திலாழ்த்தும் பயங்கரப் புற்றுநோயையும், மூளையில் தோன்றும் ரியூமர்போன்றவற்றையும் அணுசக்திமூலம் இலகுவில் மாற்றிக்கொள்ளலாம். வைத்தியப் பகுதியில் அணுசக்தி அளவிடமுடியாத உதவியை செய்யக்கூடியது. மனித இனம் வாழ வேண்டுமானால் அணுசக்தியை நாச வேலைக்குப் பயன்படுத்தாது ஆக்க வேலைக்குப் பயன்படுத்த வேண்டும்.

# வானியல் ஆராய்ச்சிக்கு உதவும் அதிசயக் கருவி

உருகிய எஃகைச் சோதிக்கும் ஒரு கருவி வின்மீன்களையும் சோதிக்க உதவுகிறது.

அலுமினியம் பூசிய கண்ணடித் துண்டு; அதில் அங்குலத்துக்கு 15 ஆயிரம் வீதம் சம தூரக் கோடுகள் வைர ஊசியினால் வரையப்பட்டுள்ளன. இதுதான் "கதிர்கோணும்கிராதி" (டிஃப்ராக்ஷன் க்ரேட்டிங்.) சின்னஞ் சிறு கருவிதான் எனினும் இதன் பயன் பெரிது.

### ரோலன்டு கண்டுபிடிப்பு

எஃகு ஆலையின் உலையில் எஃகு உற்பத்தியாகும்போது உருகிய எஃகை உற்று நோக்கிச் சரியாக உருகியிருக்கிறதா என்றறிய இதைப் பயன்படுத்துகிறார்கள். இட்லி சரியாக வெந்துவிட்டதா என்று காணச் சிறு குச்சியைப் பயன்படுத்துவது போல். நட்சத்திரங்களின் அமைப்பை ஆராயவும் இக் கருவி இன்று வானத்தில் பயன்படுகிறது அமெரிக்காவில் மேரிலாந்து ராஜ்யத்திலுள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஹென்றி ஏ. ரோலண்டு என்பவர் கண்டுபிடித்த கருவி இது.

உருகிய எஃகை உலையிலிருந்து சிறிது எடுத்து, 'நிறமாலைகாட்டி' (ஸ்பெக்டராஸ்கோப்) என்னும் கருவியில் வைத்து கதிர்கோணும் கிராதியின் உதவியால் காணும்தொழில் நுட்பசாலி எஃகு சரியாக உருகிவிட்டதா என்று கண்டு கொள்வான்.

### சோதனை

மூலகங்கள் ஒளி விடும் போது, இன்னின்ன மூலகம் இன்னின்ன வாறு தான் நிறம் காட்டும் என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டு வைத்திருக்கிறார்கள். நிற மாலை காட்டியில் வைத்த பொருளிலிருந்து வரும் ஒளி 'கதிர் கோணும் கிராதி'யில் படும்படி செய்வர். இதில் பட்ட ஒளி ஆயிரம் விதமான நிறங்களாக உடைபட்டுச் சிதறும். சிதறிய நிறங்களைத் தெளிவாகக் காட்டும் கருவியின் வழியே நோக்கி, ஆராயும் பொருளின் இரசாயனக் கலவை யாது எனக் கண்டு கொள்ளலாம். இதே போலத்தான், எஃகு சுத்தமாக அமைந்து விட்டதா என்று காணும் சோதனையும்.

### பல்துறைப் பயன்

இதே கதிர்கோணும் கிராதியை ஒரு சிறப்பான தொலைநோக்கியில் (டெலஸ்கோப்) அமைத்து வாயு மண்டலத்தில் பல மைல் தொலைக்கு மேலே அனுப்பி விண் கோள்களை ஆராய்கிறார்கள், கிரகங்களைச் சூழ்ந்துள்ள நீராவி எவ்வளவு, நட்சத்திரங்களின் இரசாயன அமைப்பு என்ன என்றெல்லாம் இதனால் ஆராய்கிறார்கள்.

கதிர்கோணும் கிராதியின் உதவியால் வேளாண்மைத் துறை விஞ்ஞானி மண்ணிலுள்ள இரசாயனப்பொருள்களை ஆராய்கிறார்; பொலீஸ் நிபுணர் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறார்; குற்றமற்றவர்களை விடுவிக்கிறார். தொல் பொருள் ஆராய்ச்சியாளர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பொருள்களின் அமைப்பைக் கண்டுபிடிக்கிறார். தங்கத்துக்கு வர்ணம் ஏற்றும் பண்டைய எகிப்திய முறை ஒன்று மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்று இந்த அற்புதக் கருவியால் மீண்டும் தெரிய வந்துள்ளது.

# 300 தமிழ்க் குடும்பங்கள் அனுபவிக்கும் கஷ்டம்

## குடியேற்றப்பகுதி அதிகாரிக்கு தமிழ் தெரியாதது காரணம்

மூன்னூறு தமிழ்க் குடும்பங்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. காரணம் குடியேற்றப் பகுதியில் கடமையாற்றும் அதிகாரிக்கு தமிழ் தெரியாமலிருப்பதுதான். அவரிடம் போகிறவர்கள் சிங்களம் தெரிந்த ஒரு தரகருடன் போகவேண்டியிருக்கிறது.

தம்பலகமம் மேற்கிலுள்ள குடியேற்றப் பகுதியில் தமிழ் பேசுபவர்கள் சுமார் முன்னூறு குடும்பங்களும் சிங்களம் பேசுபவர்கள் முப்பத்தாறு குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இங்கே குடியேற்ற மேற்பார்வை அதிகாரியாக கடமையாற்றி வருபவருக்குத் தமிழ் தெரியாது. எனவே இங்கு பெரும்பான்மையினராக வாழும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட குடியேற்றக்காரர்கள் மேற்படி குடியேற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்வதானால் சிங்களம் தெரிந்த நபர் ஒருவரையும் உடன் கூட்டிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இங்குள்ள குடியேற்றவாசிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

### விந்தை

சிங்களச் சட்டத்துக்கு [illegible] ...ட்ட நியாயமான தமிழ் உபயோக மசோதா தமிழர் தங்கள் தாய்மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வழிவகுத்துக் கொடுக்கும் என்று அரசாங்க தரப்பில் அடிக்கடி கூறப்பட்டது. எனினும் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் குடும்பங்கள் வாழும் மேற்படி குடியேற்றப் பகுதியில் தமிழ் உபயோக மொழிச் சட்டத்திற்கு இணங்க தமிழ் தெரிந்த அதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமனம் செய்யாமல் இருப்பதுதான் விந்தையாக இருக்கின்றது.

எனவே இப்பகுதியில் வதியும் தமிழ்பேசும் குடியேற்றவாசிகள் பிரஸ்தாப அதிகாரியிடம் அலுவல் பார்த்துக் கொள்வதில் தங்களுக்கேற்படும் சங்கடங்களை விளக்கி மூதூர்த் தொகுதி இரட்டை எம். பிக்களில் ஒருவரான ஜனாப் முகமதலியிடம் ஏற்கனவே முறையிட்டுள்ளதாகவும் மூதூர் முதல் எம். பி. திரு. டி. ஏகாம்பரத்திடம் விரைவில் முறையீடு செய்ய இருப்பதாகவும் தெரியவருகிறது.

# திரு ருத்திரா மறைவு

கொழும்பு முன்னாள் மேயர் திரு ருத்திரா சென்ற வாரம் காலமானார். தமது 52வது வயதில் திரு ருத்திரா அகால மரணமடைந்தார். சடுதியாக ஏற்பட்ட இருதயக் கோளாறு அவரைக் காலன் கையில் ஒப்படைத்தது.

1946ம் ஆண்டில் திரு ருத்திரா அரசியலில் பிரவேசித்தார். கொழும்பு மாநகர சபையின் மூத்த உறுப்பினராக இருந்து வந்த அவர் ராணி எலிசபெத் இலங்கைக்கு விஜயம் செய்தபோது கொழும்பு மேயராக இருந்து அவரை வரவேற்றார்.

அரசியல் தவிர விளையாட்டுகளிலும் திரு ருத்திரா அக்கறையுள்ளவராக இருந்தார். தாமே ஒரு விளையாட்டு வீரராகவும் அவர் திகழ்ந்தார்.

திரு ருத்திரா சாண்டோ என்று பெயர்பெற்றவர். இலங்கை பயில்முறை மல்யுத்த சங்கத்தின் தலைவராகவும் கொழும்பு வை. எம். ஸி. ஏ. உடற்பயிற்சிப் பகுதித் தலைவராகவும் திரு ருத்திரா பல வருடங்களாகக் கடமையாற்றியிருக்கிறார்.

திரு ருத்திரா ஒரு கைராசியுடைய வர்த்தகரும் கூட. கொழும்பில் அவருக்கு ஹோட்டல்கள் உண்டு.

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை கொடுத்தேனும் தாய் மொழி காப்போம்

## சூளுரைப்பீர்—சூழ்ந்து வாழ்வீர்

## தமிழ் உலக மொழிகளுள் எல்லாம் மூத்த முதல் மொழி—இதை உணர்வீர்

## திராவிடக் குடும்பத்தின் தாய்மொழி நந்தமிழ் மொழி—தரணி ஏற்கிறது

ஒருவர் எண்ணத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்கும் பொருட்டு இன்று மொழியினைப் பயன்படுத்தி வருகின்றனர் உலகோர். ஆயின் மொழி வளர்ந்த கதைகள் பலப்பல. இருப்பினும் வளர்ச்சியுற்ற ஆதிக் குடிமக்கள் சைகைகளின் மூலம் தங்களது கருத்தை அறிவித்தும், எதிரியின் எண்ணம் முதலியவற்றினை அறிந்தும் அதன் பின்னர் அறிவு வளர வளர ஒலிமுறைகளைக் கையாண்டனர் புள்ளினங்களைப் பார்த்து. பிற உயிரினங்களின் கூக்குரல் போல் தொடங்கிய மனித இன மொழி படிப்படியாக ஒலிப்பு முறைகள் ஏற்றமுற்று இனிமை கலந்த ஓசையாகி, இசை வடிவம் பெற்று மனித இனத்திற்கு ஓரளவு மொழி உருவாக்கத் துணை செய்த தென்க. இதன் பொருட்டே மொழிக்குத் தாய் இசைஎன்பர் கற்றுணர்ந்தோர். அறிவு கொண்டு அறிந்து ஆழ்ந்திருந்த நிலையில் மொழி பிறக்கவில்லை. ஆனால் உணர்வு கொண்டு உணர்ந்து இன்பமாய் விளையாடிய நிலையிலேயே மொழி பிறந்ததுஎன்றும் கூறுவர் முனைவர் மு. வ.

### மொழி வளர்ச்சி

இன்றைய உலகில் நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் இசை வேறுபட வழங்குவது போல மொழியும் வேறுபட்டே வழங்கப் படுகின்றது. இசையுடன் பிறந்ததே மொழி என உணர்க. இங்ஙனம் பல தோற்றங்களுடனும், குரல் வளையில் உள்ள நுண்ணிய நரம்புகளின் இயக்கத்திற்கேற்பவும் பலவாறு தோன்றி இன்று மொழி வளர்ச்சியடைந்து முன்னேற்றப் படியில் தவழ்ந்து கொண்டிருக்கிறது எனல் ஏற்புடைத்து.

### பொருத்தமற்ற கூற்று

உலக மொழிகள் எல்லாம் லாம் ஆதி மொழிகள் என்பது பொருத்தமற்ற கூற்று. கால வேறுபாடும், இடவேறுபாடும், இன வேறுபாடும் கடந்து மொழியினின்று பல கிளைகளாகப் பிரிந்திருப்பினும் மூத்த மொழி என ஒன்று இருந்திருத்தல் இயல்பு. மனிதன் தொடக்க காலத்தில் ஓரிடத்தினின்றே பரவியிருக்க வேண்டும் என்னும் கொள்கைக்கிணங்க மொழியும், ஓராதி மொழியிடமிருந்தே (ஒலி ஓசைகள் பெருவிடினும்) பேச்சு, எழுத்து முறைகள் கட்டாயம் பெற்றேயிருக்க வேண்டும் என்பது எழுந்த எண்ணமாம். ஆயினும்ஒரு மொழியிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றின எனும் விதியை இன்று உலகம் ஏற்காவிடினும் ஒருலகம் ஒருகாலத்தில் ஏற்கத் தான் போகிறது. அவ்வுலகம் திராவிடப் பேரின, தமிழ் உலகாகத் தான் திகழும். கிடக்க,

### மொழிப் பிரிவுகள்

உலகில் நூற்றுக் கணக்கான மொழிகள் வழங்கப் பட்டுவருகின்றன. அவற்றுள் இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கப்படும் பல்வின வேறுபட்ட மொழிகளை ஐந்து வகையாக ஐரோப்பிய அறிஞர் வகுத்துள்ளனர். ஆரியம், திராவிடம், முண்டா, மான்குமேர் திபேத்தோசீனம் என இப் பகுப்புமுறை பொருத்தமற்றதென மறுப்பார் முனைவர் வரதராசனார் போன்றோர். மாறாக மூன்று வகையாய்ப் பகுப்பர்: திராவிட மொழிகள், ஆரியத் திராவிட மொழிகள், ஆரிய மொழிகள் என. இம் முறையே பொருந்துவதாகவும் உளதென்போம். இவற்றுள் திராவிட மொழிகள் நமது சொத்து ஆதலின் அதுபற்றி அறிந்து கொள்வது நம் வருங்கால உலகிற்கும் நன்மை—நமது இளைஞர்களும் ஒரு விழிப்புப் பெற்று, மொழியறிவு சிறிது கற்பதற்கே என்ப.

இன்றைய உலக வழக்கில் திராவிட மொழிகள் எனின்: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐம் மொழிகளுமே நினைவில்நிற்கும். காரணம் அவை மட்டிலுமே திருந்திய பண்படுத்தப்பட்ட மொழிகள் என அறிக!

### தமிழ்

பண்டையப் புவன மொழிகளுள் தலைசிறந்ததும், இலக்கியவளமிகுந்ததும், சொல் திறன் பெற்றதும், கற்றோரும் மற்றோரும் போற்றிப் புகழும் பெருமை படைத்த மொழியும் உலகின் ஒரே மூத்த மொழியுமானஇன்பத் தமிழ் மொழியே திராவிட மொழிகளுக்குத் தாயும் தலைமொழியுமாகும். அதே வானுயர் தமிழே நமக்கு அன்றும்இன்றும் இனி என்றும் தாய் மொழி என்பதில் நாம்பெருமையுறுகின்றோம்—உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம். உலகமொழிக்கெல்லாம் மூத்த முதன் மொழி அஃதென்று நாம் விளம்புங்கால் இல்லையென்று மறுப்போர், திராவிட மொழியினத்திற்குத் தாயென்பதை மட்டிலும் மறுத்துரைக்க முன் வரார். அத்துணை வாய்ந்த மொழி நமது நாவெல்லாம் தேன்பாயும் தீந்தமிழ் மொழி.

### தாய் மொழி

இன்றைக்கு இருநூறு, முந்நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆழ்கடலாய்க் குமுறிக் கொண்டிருக்கும் குமரிமாக் கண்டமதில் உலகின் மூத்த குடியாம் தமிழ்ப் பெருங்குடியினருக்குத் தாய்மொழியாய்த் தோற்றமெடுத்த தன்னேரிலாத தண்டமிழ் இன்று திராவிட மொழிகளுக்குத் தாய். உலக மொழிக்கெலாம் அதுவே தாய் என உணருங் காலம் சேய்மையில் இருக்கிறது. அதுவரை நாம் பொறுக்கலாம். ஆனால் சங்கம் வைத்துதமிழ் வளர்த்த பாண்டிய அரசு இன்று இருக்குமாயின் தமிழுக்கு நேர்ந்த இவ்விழி நிலை போகச் 'சாவா, வாழ்வா' எனப் போர் முனையில் பதிலிறுத்திருப்பர் 'என்மொழிக்கு இழிவா? எடு வாளை! தொடு போரை! தமிழன் தொடுத்த போரில் மொழிப் போரும் அடங்கட்டும்' என விறுகொண்டெழுவர். நாம்தான் இருக்கிறோம் பொறுமைசாலி என்ற பட்டத்துடன்.

தெலுங்கு மொழியினை வடுகு என விளிப்பது பண்டையத் தமிழ் மரபு. கி. மு. வுக்கு முன் கொடுந் தமிழாய் விளங்கிய இத் திரிந்த மொழி—மக்கட் பெருக்கின் காரணமாகவும் பின்பு வட மொழித் தொடர்பும் பெற்றதால் தனி மொழியாகி வடுகு எனப்பட்டது. வடுகு என்பது தமிழரிட்ட பெயரும், அதன் முதற்பெயரும் ஆகலாம். பிறகே 'தெலுங்கு' என அவர்கள் அழைத்திருக்கலாம். தெலுங்கு [illegible] இலக்கணம் வகுத்தவர் [illegible] வட மொழிப் புலவரே. திருந்திய திராவிட மொழிகளுள் தமிழுக்கு அடுத்து, தொன்மை வாய்ந்ததும் இனிமையுடையதும் தெலுங்கு மொழியே. தமிழருக்கு அடுத்தபடி எல்லாச் சிறப்புகளும் பெற்றுத் திகழ்பவர் தெலுங்கரே என்பதும் தெரியலாம். தெலுங்கு மொழியின் எழுத்துக்கள் தேவநாகரி (வட மொழி) எழுத்தமைப்பில் இருந்து திருத்தியமைக்கப்பட்டதாகும். தெலுங்கு என்ற சொல் தமிழ் போன்று 'இனிமை' என்னும் பொருள்

பெ. புதுமைப்பிரியன்

தரும். திராவிட மொழி பேசும் மக்களுள் மிகுந்த மக்கட் தொகை கொண்டது தெலுங்கு மொழியாம்.

### கன்னடம்

தனித் தமிழ்ப் பெயர் பெற்ற மொழி கருநாடகம் என்பது. அதன் மூலப் பெயர் தெலுங்கு மொழியினைப் போல வட மொழி எழுத்தைக் கொண்டது. தெலுங்கை ஒட்டி தமிழிலிருந்து பிரிந்த மொழியாகும். தமிழோடு மிக நெருங்கிய இரண்டாவது மொழியாகும். சேரன்-செங்குட்டுவன் காலத்தில் கொடுந் தமிழாய் விளங்கி பிறகு திரிந்து ஒரு மொழி ஆகிவிட்டதென்க! கன்னட நாட்டினர், தமிழரை 'அரவர்' என்றும் 'திகழர்' என்றும் அழைப்பர். கன்னடப் பேச்சு மொழி தமிழ்த்திரிந்த பெயராக இருத்தல் கண்கூடு. கன்னடம் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாம். நம்மிடம் உள்ள பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் ஒத்திருப்பதாக நவில்கின்றனர். கன்னட மொழி ஏறக்குறைய இரண்டு கோடி மக்களால் வழங்கப் படுகின்றது.

### மலையாளம்

முச் சங்கம் நிலவிய காலத்தில் இம் மலையாளப் பகுதி செந்தமிழ் நிலமாகத் திகழ்ந்ததொன்று. சிலம்பு பாடிய இளங்கோப் பெருமகனார் வாழ்ந்த இப் பகுதி இன்று வடமொழி கலந்து வட மொழியாளரால் வழங்கப் பட்டு மலையாள மொழி எனப் பிரித்து வைத்து விட்டனர். செந்தமிழரசன் சேரன் ஆண்ட நாடு அருந்தமிழ் ஆற்றலறியாத கனக விசயரை கல் சுமக்கவைத்த செங்குட்டுவன் வாழ்ந்த சிருங்காரப் பூமி இன்று சின்னாபின்னமாகி மொழி வேறுபட்டு கேரளம் என அழைக்கப் பெறுகின்றது. இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் மலையாளமொழி என ஒன்று இருந்ததில்லை. வடவராரியர் வந்து கலப்புற்றதினால் கொடுந் தமிழாகி மூன்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மொழியானது. திராவிட மொழிகளிலேயே தாய்த் தமிழுடன் எல்லாத் துறைகளிலும் நெருங்கிய உறவுடைய மொழி மலையாளமே [illegible] வரை தமிழும்—மலையாளமும் சேர்ந்தே படித்து வந்தனர் எனவும் ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகத்தான் இந் நிலை மாறி இவ்வளவு வேறுபாடு வந்ததெனவும் கூறுகின்றனர்.

### துளு

மேற் கூறப்பட்ட நான்கு மொழிகளுக்கு அடுத்த மொழி துளு என்பதாகும். இதற்கெனத் தனி எழுத்தமைப்பு இல்லையெனினும் கன்னடமும் மலையாளமும் கலந்த எழுத்து உருவாகிக் கொண்டு வருகின்றதுதுளுவும்—குடகும் நெருங்கிய மொழிகளாகும். மற்ற திராவிட மொழிகளுக்கு உறவுடைய மொழி என்று கூறமுடியாத அளவு மிகத் திரிந்து ஏழு இலக்கம் மக்களால் பேசப்பட்டு வருகின்றது.

### பிற திராவிட மொழிகள்

இம்மொழிகளை அன்றி, துதம், கோதம், கோண்டு, கூ, இராச்கோல், ஒரொவன், பிராகுவி, மல்கர், சோலமி, மால்டோ எனப் பதினைந்து மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என மொழி நூலார் குறிக்கின்றனர். திராவிட மொழிக் குடும்பம் இன்று உலகோரால் போற்றப் படுவதற்குக் காரணம் அதில் தமிழ் இருப்பதாலேயே ஆகவே, இதுகாறும் கூறியவற்றால், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பற்றி நீங்கள் சிறிதளவேனும் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன். இவ்வையகத்து மொழிகளுள் உயர்தனிச் செம்மொழி நமது தாய்மொழியாம் தமிழ் என்பதறிந்து நாம் எல்லோரும் பெருமை கொண்டு தமிழறிவு பெறுவோமாக! உயிரினும் மேலான தமிழ் மொழிக்கு—திராவிடத் தாய்மொழிக்கு ஊறெனின் தலைகொடுத்தேனும் தாய்மொழி காப்போம் எனச் சூளுரைப்பீர்—சூழ்ந்து வாழ்வீர்.


**ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை**

(வைகாசி)

**பரீட்சைத் துணை நூல்கள்**

இலங்கையின் எல்லா ஆசிரிய கலாசாலைகளிலும் எமது மாணவர்கள்பயிற்சி பெறுவது எமது பாடங்களின் தரத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நீங்களும் எமது பரீட்சைத் துணை நூல்களைப் பெற்று சித்தியை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

- தமிழ்ப் பாஷை ரூ 12-50
- எண் கணிதம் ரூ 12-50
- பொது விவேகம் ரூ 12-50
- பூமிசாஸ்திரம் ரூ 12-50
- சரித்திரம் ரூ 12-50
- 101 நவீன கட்டுரைகள் ரூ. 5-00
- கடந்தகால வினாவிடைகள்

ஒவ்வொரு பாடத்துக்கும் விலை ரூபா 3/-

தபாற் செலவு 35 சதம்.

வி. பி. பி. கிடையாது.

இலவச விபரங்கட்கு:

**அற்லஸ் ஹோல்**

723, மருதானை ரோட்,

தபாற் பெட்டி :649

கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவரின் கண்களை ஓராண்டு வரைக்கும் பாதுகாத்து வைத்திருக்கலாம்

## அமெரிக்க டாக்டரின் புதிய கண்டுபிடிப்பு

## பார்வை இழந்து அதனுல் இருண்ட வாழ்வு பெற்றவர்களுக்கு இது வரப்பிரசாதம்

### கண் ரண சிகிச்சை முறையில் புது அபிவிருத்தி

இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் 1760-ல் பெஞ்சமின் பிராங்கிலின் இரட்டைச் சில் மூக்குச் கண்ணுடியைக் கண்டு பிடித்தார்: அவர் அதற்கு முன் எப்போதும் இரண்டு கண்ணுடிகளை உபயோகித்து வந்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் பாதிக் கண்ணுடியை அறுத்தெடுத்து, இரு பாதிக் கண்ணுடிகளையும் இணைத்து ஒட்டி, இரட்டைச் சில் கண்ணுடி அமைத்து விட்டார்.

மனித உடலின் மற்ற உறுப்புகளைப் போலவே, நுட்பமாகவும் மென்மையாகவும் அமைந்துள்ள கண்ணுக்கும் பலவகைக் கடுமையான நோய்கள் வருகின்றன. அவற்றுல் பார்வை குறையலாம், முற்றும் கெடலாம். பிராங்கிலின் காலத்துக் கண் மருத்துவரைவிட இக்காலத்து மருத்துவருக்குக் கண் நோய்களைப் பற்றியும், அவற்றைத் தீர்ப்பது பற்றியும் நன்கு தெரியும்.

கண் படலம், கண் துடிப்பு, விழி வெண்படல நோய்கள் முதலியவை பார்வையைக் கெடுக்கின்றன.

#### நோயும் சிகிச்சையும்

கண் படலத்துக்கு ரண சிகிச்சை செய்யப்படுகிறது; இச்சிகிச்சையால் 95 சத விகிதத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் கிட்டத்தட்டச் சரியான பார்வை பெறுகிருர்கள்.

கண்ணில் அளவு கடந்த திரவம் சேர்ந்து விடுவதால் கண் துடிப்பு ஏற்படுகிறது. அது விழித்திரைக்கும், கண் நரம்புக்கும் ஊறு விளைக்கிறது. இந் நோயைத் தணிக்க ரண சிகிச்சை செய்கிருர்கள்; மருந்தும் கொடுக்கிருர்கள். அமெரிக்க தேசிய சுகாதார நிலையங்கள் இது பற்றி ஐந்தாண்டு ஆராய்ச்சி ஒன்றை அணிமையில் தொடங்கியுள்ளன.

#### விழி வெண்படலம்

ஒருவரது விழி வெண்படலத்தை வேருெருவரது கண்ணில் பதித்துப் பார்வை அளிப்பதே கண் ரண சிகிச்சையில் மிகவும் முக்கியமானது.

விழி வெண்படலம் கண்ணின் முன்புறத்தைப் பாதுகாக்கும் கவசமாக அமைந்துள்ளது. 80 சத விகிதத்துக்கு மேற்பட்ட ஒளிக்கதிர்களை அது ஒருங்கு குவியச் செய்கிறது. விழி வெண்படல நோய் பரம்பரை நோயாகவும் இருக்கலாம்; கண்ணுக்கு நேரும் ஊறுகளாலும் ஏற்படலாம். அந்த நோய்களால் பார்வை குறைகிறது இறுதியாக முற்றும் மறைகிறது.

நோய் கொண்ட விழி வெண்படலத்துக்குப் பதிலாக வேறு வெண்படலத்தைப் பதித்தால் தான் நோயாளி பார்வை பெற முடியும். எனவே ஒருவரது விழி வெண்படலத்தை எடுத்து நோய் கொண்டவரது கண்ணில் பதித்துப் பார்வை அளிக்கிருர்கள்.

#### கண் பாங்கிகள்

அதற்கென்று செய்யப்பட்டுள்ள மிக மென்மையான கத்தியைக் கொண்டு நோயாளியின் விழி வெண்படலத்தை எடுத்துவிடுகிருர்கள். அதற்குப் பதிலாகச் சிறிது நேரத்துக்கு முன் இறந்துபோன ஆளின் கண்ணிலிருந்து எடுத்த விழி வெண்படலத்தைப் பதித்து விடுகிருர்கள்.

அமெரிக்காவில் விழி வெண்படலத்தைச் சேமித்து வைக்கும் கண் பாங்கிகள் உள்ளன. ஜான்ஸ் ஹாப்கின்ஸின் மருத்துவ இல்லம் போன்ற பெரிய மருத்துவ இல்லங்கள் இந்த ரண சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கின்றன.

#### கண் நன்கொடை

கண்ணை நன்கொடையாக வழங்கி இறந்து போவோரின் கண்ணை அவரது உயிர் பிரிந்தவுடன் தாமதமின்றி எடுத்து, 24 மணி நேரத்திற்குள் அதனை நோயாளியின் கண்ணில் பொருத்தி விட வேண்டும். விரைவாகச் செய்ய வேண்டிய ரண சிகிச்சை இது.

அதனை எவ்வாறு செய்கிருர்கள்? கண்ணை நன்கொடையாக அளித்துள்ள ஒருவர் இறந்தவுடன், அச்செய்தி "கண் பாங்கிக்கு" அறிவிக்கப்படுகிறது. உடனே ஒரு டாக்டர் இறந்தவர் இருக்கும் இடத்துக்கு விரைந்து செல்கிருர். அங்கு அவர் இறந்தவர் கண்களை எடுக்கிருர் பனிக்கட்டியால் குளிரவைத்து வெப்பம் புக முடியாததாக அமைக்கப்பட்டுள்ள பெட்டியில் அவற்றை வைத்து அடைக்கிருர்கள். கண் பெறக் காத்திருக்கும் நோயாளிக்கு வைத்தியம் செய்யும் டாக்டருக்கு அந்தப் பெட்டி அனுப்பப் படுகிறது. அவசியமானுல், விமானக் கம்பெனிகள் கட்டணமின்றிக் கண்களை எந்த இடத்துக்கும் விமானத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. விமான நிலையங்களில் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்கின்றது.

#### சமீப கால ஏற்பாடு

சென்ற பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத் தான் இறந்தவர்களின் கண்களை இவ்வாறு எடுத்து, பார்வை இல்லாதவர்களுக்குப் பார்வை அளிக்கும் பணி நடைபெறுகின்றது. இம்முறை வெற்றி பெற்றுள்ளது. அணிமையில் புதிய முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்த ரண சிகிச்சை முறையில் அது புரட்சி நிகழ்த்தக் கூடும். இறந்தவரின் கண்களை ஓர் ஆண்டு வரைக்கும் அதற்கு மேலும் வைத்திருக்கும் முறை ஒன்றை வாஷிங்டன் டாக்டர் ஒருவர் கண்டுபிடித்தார்.

—

## கல்வியின்....

(14-ம் பக்கத் தொடர்ச்சி)
தார் முகத்திற் காண்பன புண்ணையன்றிக் கண்ணேயல்ல" என்றும் கூறுகிருர். ஆகவே கல்வியின் பெருமை இம்மட்டா...........

மாணவர்களே! நாம் இளமையில் கல்வியைத் துள்ளிக் கொண்டு படிக்க வேண்டும். கல்வியே வாழ்க்கையின் வழி காட்டியென நினைக்க வேண்டும். படிப்பை அதன் வழியே ஒழுக வேண்டும்.

—சரவணையூர் மணிசேகரன்




நீங்கள் இல்லாவிட்டால்?

கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா,

சீ டபிள்யூ. ஈ. இன் ஸ்தாபனம்

CWE

103, சதாம் வீதி, கொழும்பு 1.
போன்: 5266, 5267.

ஒரு சாதாரண வருமானம் உள்ள மனிதனின் கவலைக்கு முக்கிய காரணம் பணத் தட்டுப்பாடுதான. நீங்கள் இல்லாத காலத்தில் உங்கள் குழந்தைகளின் கல்வியை யார் கவனிப்பார்கள், உங்கள் குடும்பம் எப்படிக் காலந் தள்ளும்—என்னுங் கேள்விகள் உங்களுக்கு மனக் கவலையாக இருக்கும். அந்தப் பாதுகாப்பும், மன நிம்மதியும் கூட்டுறவு இன்சூரன்ஸ் பொலிசியை எடுத்தவுடன் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

வாழ்க்கை, நெருப்பு, கப்பற் பகுதி, மோட்டார், பொது விபத்துகள.

கூட்டுறவு இன்சூரன்ஸ் ... சேவை ...றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழகத்து அகத்துறை நிகழ்ச்சிகள்

## களவுக் காதலுக்குப்பின் கற்பு மணம்—அதில் தோழியின் பங்கு

### நற்றிணை வழங்கும் நல்விருந்து

கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றி நினைப்பது மக்கள இயற்கை. குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நம் மூளையிலே ஒட்டிக் கொள்ளும்; புகுந்து கொண்டிருக்கும். சமயம் வரும்போது, கனவிலும் நனவிலும் நம் மனக் கண்முன் காட்சியளிக்கும்.

ஒருவனும் ஒருத்தியும் களவு மண வாழ்வு நடத்தி வருகின்றனர். அவர்களுடைய கள்ளக் காதல் வாழ்வு பற்றிப் பிறர் அறிவதற்கு முன்பே, கற்பு மணம் நடைபெற வேண்டும்; இருவரும் சேர்ந்து பலர் காண இல்லறம் நடத்த வேண்டும் என்பது அந்தப் பெண்ணின் ஆவல். அவளுடைய தோழியின் ஆவலும் இதுவே தான். தலைவனும் தலைவியும் நாள் தவருமல் கண்டுகளிக்க முடியவில்லை. சில நாட்களில் தலைவி, தன் காதலனைக் காணுமையால் வருந்தியிருப்பதும உண்டு ஆதலால் எப்படியாவது அத் தலைவன் உள்ளத்திலே, கற்பு மணம் புரிந்துகொள்ளுவதற்குக் காலந் தாழ்த்தக் கூடாது என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்பது தோழியின் துணிவு அத்தலைவன் ஒரு நாள் தலைவியைக் காண வழக்கம் போல் வந்து நிற்கும் மறைவிடத்திலே வந்து நின்ருன். அதை உணர்ந்த தோழி, தலைவன் காதிலே விழும்படி, தலைவியை நோக்கிப் பேசினுள். தலைவன் இல்லாத போது, தலைவி அடையும் வேதனையை அவரிடமே எடுத்துரைத்தாள். இதைக் கேட்டவுடன் தலைவன் காலந் தாழ்த்த மாட்டான் கற்பு மணம் புரிந்துகொள்ள முயலுவான் என்ற கருத்துடனேயே இவ்வாறு உரைத்தாள். அந்த நிகழ்ச்சியை எடுத்துரைப்பதே இச் செய்யுள்.

இதுவே, நறுவீ ஞாழல்
  மாமலர் தாஅய்,
புன்னை ததைந்த
  வெண்மணல் ஒரு சிறை,
புதுவது புணர்ந்த
  பொழிலே; உதுவே,
பொம்மல் படுதிரை
  நம்மோடு ஆடி,
புறம்தாழ்பு இருளிய
  பிறங்கு குரல் ஐம்பால்
துவரினர் அருளிய
  துறையே; அதுவே,
கொடுங்கழி நிவந்த
  நெடும்கால் நெய்தல்
அம் பகை நெறித்தழை
  அணிபெறத் தைஇ,
தமியர் சென்ற
  கானல் என்று ஆங்கு
உள்ளதோறு
  உள்ளுதோறு உருகிப்,
பைஇப் பையப்
  பசந்தனை பசப்பே.

'தோழியே; தலைவனைக் காணுதபோது நீ மிகுந்த காதலாக வருந்தினை. நல்ல ஞாழல் மலர்களும், புன்னை மலர்களும் உதிர்ந்து நிறைந்து கிடக்கின்ற இடத்திலே, வெண்மையான மணல் பரந்த ஒரு பக்கத்திலே, என்னை முதலிலே கண்டு காதல் கொண்டு கலந்த இடம் இந்தச் சோலைதான். பொலிவு பெற்று விளங்குகின்ற அலை நிறைந்த நீரிலே நம்மோடு சேர்ந்து விளையாடினுர். ஐந்து பகுதியாக அலங்கரிக்கக் கூடிய நமது கூந்தலின் ஈரத்தைத் துவட்டி நம்மிடம் அன்பு காட்டினுர்; அத்தகையவர் துறை இதுதான். வளைந்து செல்லும் நீர்க்கழியிலே, உயர்ந்து வளர்ந்திருக்கின்ற நெய்தல் செடியின் தழைகளை வைத்து அழகாக நெருக்கமாகத் தொடுத்த தழைஉடை எனக்கு அழகு மிகுதியாகும் படி உடுத்தினுர்; அதன்பின் என்னை விட்டு அவர் தனியாகப் பிரிந்து சென்ருர். அத்தகைய கால்கரைச் சோலை

இதுதான். என்று இவ்வாறு நீ கடந்த கால நிகழ்ச்சிகளை நினைக்கின்ருய். அவற்றை நீ நினைக்கும் போதெல்லாம், உன் உள்ளம் உருகுகின்றது. மெதுவாகப் பசலை நிறம் உன்னை மூடிக்கொள்ளுகின்றது அதனுல் நீ பசலை நிறம் பெற்று விட்டாய்.'

●

தலைவியின் போக்கிலே அவளுடைய பெற்ருேர்க்கு ஐயம் ஏற்பட்டது. ஆதலால் அவளை வெளியிலே போகவிடாமல் வீட்டிலேயே வைத்துவிட்டனர். அவள் வெளியில் போகாதபடி இரவிலும் பகலிலும் அவளைக் கண்காணித்து வந்தனர். இதனுல், அவள் காதலன், இரவுக் குறியிலே வந்தாலும் அவனை அவளால் சந்திக்க முடியவில்லை. இந்த நிலைமையால், தலைவி மிகவும் வருந்தியிருந்தாள். தலைவியின் இந்தத் துன்பத்தை எண்ணி வருந்திய தோழி, தலைவி சொல்வது போல, தலைவியைப் பார்த்துக் கூறத் தொடங்கினுள். 'ஊரில் உள்ளோர் எல்லோரும் உறங்குகின்றனர். விழித்திருப்போர் ஒருவரும் இல்லை. இக்காலத்தில், அவரைக் காண முடியாதபடியும், வீட்டில் அடைபட்டேன். வெளியிலும், காவலர்களால் காக்கப்படுகின்றேன். ஊர்க் காவலர்களும் மணியடித்துக் கொண்டு காவல் காக்கின்றனர். இவ்வாறு சிறைப்பட்டிருக்கும் நான் எப்படி உயிர் வாழ்வேன்; நான் இறந்து மடியும் நாள் இன்றுதானே? அறியேன்' என்று கூறினுள். தலைவி தன் துன்பத்தை எப்படிக் கூறுவாளோ, அவ்வாறே தோழி கூறினுள். இச் செய்தியை உரைப்பதே இப் பாடல்.

பேர் ஊர் துஞ்சும்;
  யாரும் இல்லை;
திருந்து வாய்ச் சுறவம்
  நீர் கான்று ஒய் எனப்
பெருந்தெரு உதிர்தரு
  பெயல் உறு தண்வளி
போர் அமை கதவப்
  புரைதொறும் தூவக்
கூர்எயிற்று எகினம்
  நடுங்கும் நன்னகர்ப்,
பயில்பட நிவந்த
  பல்பூம் சேக்கை
அயலும மாண்சிறை
  அதுவே; அதன் தலைக்
'காப்புடை வாயில்
  போற்றுே' என்னும்
யாமம் கொள்பவர்
  நெடுநா ஒண்மணி
ஒன்று எறி பாணியின்
  இரட்டும்;
இனறு கொல் அறியேன்
  யொன்றும் நாளே.

'பெரிய இவ் ஊரில் உள்ளார் அனைவரும் உறங்குகின்றனர். விழித்துக்கொண்டு நடமாடுவோர் ஒருவருமே இல்லை. இப்படியிருந்தும், நாம் நம் காதலரை அடைய முடியாத நிலையைத் தான் காண்கின்ருேம். திருந்திய வாயையுடைய சுருமீன், தான் உண்ட நீரைக் கக்குகின்றது. அது ஒய் என்றஒலியுடன் பெரிய தெருவிலே மழைபோலப் பெய்து உதிர்கின்றது. அந்த மழைத் துளியுடன் கூடிய குளிர்ந்த காற்று, பொருந்தி இருக்கின்ற கதவுகளின் துளை வழியாக வீட்டுக்குள் வீசுகின்றது. இந்தக் குளிரால் கூர்மையான பற்களையுடைய நாய்களும் ந[illegible] இந்த நள்ளிரவிலே [illegible] மாளிகையிலே தூங்குவதற்காக உயர்வாக அமைத்திருக்கின்ற பல மலர்களும் நிறைந்த படுக்கையிலே சிறைப்பட்டுக் கிடக்கின்றேன். வெளியிலும் சிறந்த காவலுடையதாக இருக்கின்றது எனது படுக்கையறை. அதற்கு மேலும் காவல் உண்டு. 'காவல் பொருந்திய முன் வாயில், பின் வாயில் களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று நள்ளிரவில் நகர் காப்போர் கூவுகின்றனர். அவர்கள் அடிக்கின்ற நீண்ட நாவையுடைய ஒளி பொருந்திய மணி, ஒன்று படும் தாளத்தில் மோதி

சாமி சிதம்பரனுர்

எழும் ஓசைபோல ஒலிக்கின்றது. ஆதலால் எல்லோருடைய இரக்கத்திற்கும் உரிய நான், உயிர் வாழ்வது எப்படி? இன்று தான் நான் இறந்து மடியும் நாளோ என்று ஐயுறுகின்றேன்.'

●

தலைவன், தன் கடமையை செய்யும் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்து சென்ருன். அவன், போகும் போது, திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் வந்து விட்டது ஆனுல் தலைவன் வரவில்லை. காலம் கடந்து கொண்டிருந்தது. கார்கால நிகழ்ச்சிகளைக் கண்டு தலைவி வருந்தினுள். அவளுக்குத் தோழி ஆறுதல் உரைகள் பல கூறினுள்! அவள் துன்பத்தைத் தணிக்க முயன்ருள். அப்பொழுது தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்ருள்: 'குயில் கூவுகின்றது, அது என் காமத்தை மிகுதிப்படுத்துகின்றது. மழை மிகுதியாகப் பெய்ததினுல் ஆற்றிலே வெள்ளம் பெருகி வருகின்றது; இது அந்தக் குயிலை விட எனக்கு இன்னும் மிகுந்த வேதனையை உண்டாக்குகின்றது. இதை விட, குருக்கத்தி மலரையும், சண்பக மலரையும் விலை கூறி விற்றுக்கொண்டு வரும் அந்த உழவர் குடிப் பெண்ணின் குரல் என் காம வேதனையை வளர்த்து விடுகின்றது. ஆதலால், நான் என்ன தான் செய்வேன்?' என்று கூறினுள் தலைவி. இச் செய்தியைக் கூறுவதே இச் செய்யுள்.

அழுந்துபடு விழுப்புண்
  வழும்பு வாய் புலரா
எவ்வ நெஞ்சத்து
  எஃகு எறிந்தாங்கு
பிரிவில புலம்பி
  நுவலும் குயிலினும்,
தேறு நீர் கெழீஇய
  யாறுநனி கொடிதே;
அதனினும் கொடியள்
  தானே, மதனின்
துய்த்தலை இதழ
  பைம் குருக்கத்தியொடு
பித்திகை விரவுமலர்
  கொள்ளீரோ, என
வண்டு சூழ் வட்டியள்
  திரிதரும்
தண்டலை உழவர்
  தனிமட மகளே.

தோழியே கார்காலத்தின் கொடுமையை நான் எவ்வாறு எடுத்துரைப்பேன். குயில் என் அருகிலேயே இருந்து கொண்டு வருந்திக் கூவுகின்றது. மார்பிலே நெடுங் காலமாக காயாமல் இருக்கும் அழமான புண் [illegible] இருக்குமோ—எவ்வளவு துன்பத்தைத் தருமோ—அதை விட மிகுந்த துன்பத்தைத் தருகின்றது இக்குயிலின் கூவுதல். இக் குயிலின் கூவுதலைக் காட்டினும், தெளிந்த நீர் மிகுந்து, கரைபுரண்டு வெள்ளமாக ஓடிவருகின்ற இந்த ஆற்று நீர் மிகவும் கொடுமையான துன்பத்தைத் தருகின்றது. இச் சோலையில் வாழ்கின்ற உழவர்கள் குடியிலே பிறந்த இளமகள் பூ விற்கப் புறப்பட்டு விட்டாள். அவள் பூ வட்டிலிலே, அழகான பஞ்சு போன்ற புறவிதழ் பொருந்திய குருக்கத்தி மலரையும், சண்பக மலரையும் கலந்து வைத்திருக்கின்ருள். அவற்றைச் சுற்றி வண்டுகள் மொய்க்கின்றன. 'பூ வாங்கலையோ பூ' என்று அவள் கூவிக்கொண்டு திரிகின்ருள். இவள் குரலோசை, அந்த ஆற்று நீரைக் காட்டிலும் என்னைக் கொடுமைப்படுத்துகின்றது. இவ்வாறு என் அருகில் இருக்கும் குயில், என் எதிரில் காணப்படும் ஆற்று வெள்ளத்தால் ஏற்படும் குளிர், உழவர் மகளின் குரல் ஒலி இம் மூன்றும் சேர்ந்து என்னைக் கொடுமைப்படுத்துகின்றன; இக் கொடுமையை நான் எப்படித் தாங்குவேன்? என்னுல் தாங்க முடியுமா?'

கார்காலம் வந்து விட்டது. குயில், ஆறு, பூவிற்கும் பெண் குரல் மூன்றும் என்னைத் துன்புறுத்துகின்றன.

இது மாறன் வழுதி என்னும் புலவர் பாட்டு கார்காலம் வந்ததும், பிரிந்து போன காதலன் வரவில்லை. ஆதலால் வருந்திய தலைவி, தன் துன்பத்தைத் தோழியிடம் கூறினுள். தலைவி கூற்று முல்லைத்திணை.

இச் செய்யுளில் கார்காலக் காட்சியைக் காணலாம். 'குயில் கூவிக்கொண்டிருக்கிறது. ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடி வருகின்றது. உழவர் வீட்டுச் சிறுமி, பூத்தட்டிலே குருக்கத்தி, சண்பகம் முதலிய மலர்களைக் கலந்து வைத்துக் கொண்டு கடந்து திரிந்து கூவி விற்கின்ருள். இவை கார்காலக் காட்சி.

புண்ணிலே வேல் பாய்ந்தால் உண்டாகும் துன்பத்தை விட, குயிலின் குரல் தலைவியின் உள்ளத்திலே மிகுந்த துன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. குயில் குரல், குளிர், மலர் மணம், இவை காதலரைப் பிரித்திருப்போரைத் துன்புறுத்துவன. இதை உணர்த்தவே குயிலோசை, ஆற்று வெள்ளம், பூ விற்பனை இம் மூன்றையும் இப் பாடலில் குறித்தார் இப் பாடலை இயற்றிய புலவர்.


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.
சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஏப்ரல் மாதம் 24-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த பெ. 1183


## ஸ்திரமான அரசாங்கம்

இலங்கை நாட்டுக்கு இன்று வேண்டப்படுவது ஒரு ஸ்திரமான அரசாங்கமாகும். எந்த நாட்டிலும் ஒரு ஸ்திரமான அரசாங்கம் அமையாவிட்டால் அந்த நாடு சீர்குலைந்து நலிவுறுமே தவிர, சிறப்புற்று வளர்ந்தோங்க முடியாது.

இனவெறியும், வகுப்புவாதமும், நடுநிலை தவறிய பாரபட்சமான கொள்கைகளும் தலைதூக்கியதால் கடந்த பல வருடங்களாக இந்த நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட முடியவில்லை. 1956ம் ஆண்டிலிருந்து இந்த நிலை படுமோசமான கட்டத்தை அடைந்தது நாட்டில் பலாத்காரச் செயல்களும், வகுப்புக் கலவரங்களும் மலிந்தன.

மேற்கூறிய நிலை காரணமாக சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் சௌஜன்னிய உறவு பாதிக்கப்பட்டது. ஐக்கியமும் ஒற்றுமையும் ஒழிந்தன! வேற்றுமையும் விரோதமும் வளர்ந்தன!

பிரஜைகளிடையே நல்லுறவும், ஐக்கியபாவமும் நிலவாத நாட்டில் பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற பலம்பொருந்திய ஒரு அரசாங்கம் எப்படித்தான் உருப்பெற முடியும்? கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் ஸ்திரமான அரசியல் நிலைமை ஏற்படாத காரணத்தால் பொருளாதாரம் முடங்கிவிட்டதையும், முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டதையும் நாம் காண்கிறோம்.

நாட்டின் பொருளாதார மந்தநிலை நீங்கி, நாடு சுபீட்ச பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டுமாயின் முதற்கண் தேவைப்படுவது பலமும் ஸ்திரமும்வாய்ந்த ஒரு நல்லரசாங்கமாகும்.

ஏதாவது ஒரு அரசியல் கட்சி பாராளுமன்றத்தில் அதிகப்படியான பெரும்பான்மை பலம் பெற்றுவிட்டால் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைத்துவிடலாம் என்று சிலர் கருதுகிறார்கள். ஒத்த நோக்கும், ஒத்த கலாச்சாரமும், ஒத்த மொழியும், ஒத்த சமய பண்பாடுகளும் உள்ள ஓரின மக்கள் வாழும் ஒரு நாட்டில் இந்தக் கருத்து சரிப்பட்டுப்போகலாம். ஆனால் மாறுபட்ட இலட்சியங்களும், வேறுபட்ட மொழி, கலை, கலாச்சார, சமயப் பண்பாடுகளும் கொண்ட பல இன மக்கள் வாழும் ஒரு நாட்டில் இக்கருத்து ஒருபோதும் பொருந்தி வராது.

1956ம் ஆண்டில் எம். ஈ. பி. பாராளுமன்றத்தில் கணிசமான பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுத்தான் அரசாங்கம் அமைத்தது. ஆயினும் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அதனால் ஏற்படுத்த முடியவில்லை. காரணம் என்ன?

இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அது பெற முடியாமல் போனதுதான் காரணம். சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கி, நசித்து நெரித்து, ஆட்சி நடத்தலாம் என்று திட்டமிட்டது. ஆனால் சிறுபான்மை மக்கள் காட்டிய எதிர்ப்பு எம். ஈ. பி அரசாங்கத்தின் அத்திவாரத்தையே சுட்டெரித்தது. ஆட்சி ஆட்டங் கண்டது; வீழ்ச்சியடைந்தது!

1960ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் எந்த ஒரு கட்சிக்கும் பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தைத் தரவில்லை. அரசாங்கத்தை அமைக்கக்கூடிய அளவு குறைப்பலம் பெற்ற கட்சிகள் சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து அரசாங்கம் அமைக்கப் பின்நிற்கின்றன.

பாராளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தல் நடத்தினால் பெரும்பான்மை மக்களுடைய ஏதாவது ஒரு கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கலாம் என்றும் அதைக்கொண்டு ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்கலாம் என்றும் கனவு காண்கின்றன.

அப்படித்தான் பெரும்பான்மை பலம் கிட்டினாலும் சிறுபான்மை மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் அமைதியும், நிம்மதியும் தரக்கூடிய ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை ஒருபோதும் அமைக்கவே முடியாது என்று நாம் வலியுறுத்திக் கூறக்கூடியவர்களாயிருக்கிறோம்.

இலங்கையில் சிங்கள மக்கள் தமிழ் மக்கள் என்ற ஈரின மக்கள் வாழ்கின்றார்கள். இந்த ஈரின மக்களையும் கணவன் மனைவியாகக்கொண்ட ஒரு குடும்பமாக விளங்குகின்றது இலங்கை நாடு. கணவனும் மனைவியும் ஒருமைப்பட்டு ஒத்துழைத்து வாழ்க்கை நடத்தினால்தான் குடும்பமாகிய இலங்கை இன்பமும் நிம்மதியும் பெற்று முன்னேற முடியும். மனைவி முரண்டினால் கணவன் மட்டும் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

கணவன் பலசாலியாக இருக்கலாம், மனைவியை அடிக்கலாம், உதைக்கலாம், அடக்கலாம், ஒடுக்கலாம், நிஷ்டூரப்படுத்தலாம். இத்தகைய கொடுமைகளினால் எல்லாம் மனைவியை அடிபணிய வைத்துவிடலாம் என்றுகூட எண்ணலாம். ஆனால் அவளுடைய ஆதரவும், ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியுமா? குடும்பத்தில் நிம்மதி காண முடியுமா? இன்பம் பெற முடியுமா?

இந்த மகத்தான உண்மையைப் பெரும்பான்மை மக்களும் அவர்களுடைய தலைவர்களும் உணராத வரையில் இலங்கையில் அமைதியேற்படும், நிம்மதியேற்படும், ஒழுங்கும் கட்டுப்பாடும் ஏற்படும், ஸ்திரமான நல்லரசாங்கம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதெல்லாம் ஏமாற்றத்திலேயே முடியும் என்பது திண்ணம்.

எத்தனை பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்தால்தான் என்ன? சிங்கள மக்களின் எந்த ஒரு கட்சிதானும் எப்பேர்ப்பட்ட பெரும்பான்மை பலத்தைப் பெற்றுவிட்டால்தான் என்ன? தமிழ் பேசும் மக்கள் ஒருமித்து நின்று தளராது எதிர்ப்பார்களானால் ஸ்திரமான அரசாங்கம் இந்த நாட்டில் ஏற்பட வழியே இல்லை. தமிழ் பேசும் இனம் இந்த அரசியல் சூட்சுமத்தை உணர்ந்துகொண்டால் வெகு விரைவில் விடுதலையின் ஒளிக் கிரணங்களைக் கண்டுவிடலாம்.

# பாராளுமன்றத்தில் டாக்டர் நாகநாதன் முழக்கம்

## எல்லோரும், வாயில் விரல் வைத்து உன்னிப்பாகப் பேச்சைக் கேட்டனர்

## இரும்பு மனிதர் இப்படியும் பேசுகிருரே என்று வியக்காதார் இல்லை

நல்லூர்த் தொகுதிப் பிரதிநிதி, தமிழிரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், இரும்பு மனிதர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுத்து எல்லோர் கவனத்தையும் தம்பால் இழுத்தார்.

பொருள் புதைந்த அருமையான பேச்சை டாக்டர் உணர்ச்சியோடு பேசினார். உள்ளக் குமுறலை அப்படியே கொட்டினார். கேட்போர் வியந்தனர். அவர் பேசும்போது இடையில் குறுக்கிட்டோர் வாங்கிக் கட்டினர் 'டோஸ்'.

மொத்தத்தில் டாக்டர் நாகநாதன் முதன் முதலாகத் தாம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சின் மூலம் தாம் ஓர் சிறந்த 'பார்லிமென்டேரியன் என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றி உணர்த்தினார். டாக்டர் நாகநாதன் பேசிய பேச்சின் முதல் பகுதி இங்கு தரப்படுகிறது மிகுதி அடுத்த வார சுதந்திரனில் தொடர்ந்து வெளியிடப்படும்.

டாக்டர் நாகநாதன் பேசியதாவது:—

எங்கள் கட்சியின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப் பிரேரணையை மாத்திரமல்லாது, எதிர்கட்சிகள் கூட்டாகச் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணையையுமே ஆதரித்து பேசுவதற்கு எழுந்து நிற்கிறேன். எனது கருத்துக்களைத் தெரிவித்துப் பேசும் பொழுது, மிகுந்த பொறுப்புணர்ச்சியில்லாது அவ்வாறு நான் பேசவில்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். எனது கட்சியின் திருத்தப் பிரேரணைக்கு முன், பொதுத் திருத்தப் பிரேரணையை யொட்டிச் சில வார்த்தைகள் பேசலாமென நினைக்கிறேன்.

### பிரதமரின் பொறுப்பு

"அரசாங்கத்தில் இச் சபைக்கு நம்பிக்கை இல்லை" என்று வெறுமனே கூறுவதுடன் நின்று விடுவதால், கூட்டுப் பிரேரணையில் விஷயம் எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது. இச்சபையில் சமர்ப்பிக்கக் கூடிய வேறெந்தப் பிரேரணையிலும் பார்க்க, மிக நிறைந்த கருத்துச் செறிவுள்ள பிரேரணை இதுவே என்பது எனது கருத்து அரசாங்கம் அமைக்கும் பணியைப் பிரதமர் மேற்கொண்ட சமயம் இச் சபையில் தனக்கு பெரும் பான்மை ஆதரவு உண்டா இல்லையா என்பதை கவனித்திருக்க வேண்டியது பிரதமரின் மாபெரும் பொறுப்பு. தன் பக்கம் சாய்ந்து நிற்பவர்களாய் மாத்திரம் அல்லாது தன்னுடன் கூட்டுச் சேரக் கூடியவர்களுண்டா, இச் சபையில், என்பதைப் பிரதமர் கவனித்திருக்க வேண்டும்.

### நப்பாசை

இதற்குப் பதிலாக, தமிழரசுக் கட்சி தன்னை ஆதரிக்கும் என்ற நப்பாசையில் இருந்திருக்கிறார் பிரதமர். இதை நாங்கள் நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறிகிறோம். பிரதமர் இவ்வாறு நம்பி, நம்பிக் காத்திருந்த பொழுதிலும், அவரை ஆதரிப்போம் என்று இம்மியளவு தானும் நாங்கள் காட்டிக் கொண்டதில்லை அவருடைய நம்பிக்கைக்கு உற்சாக மூட்டியதுமில்லை. எனது தலைவராகிய காங்கேசன்துறைத் தொகுதி அங்கத்தவருக்கும் பிரதமருக்குமிடையில் நிகழ்ந்த முதல் சந்திப்பிலேயே எமது நிலைமையைத் தெளிவாக விளக்கியிருந்தோம். அந்த முதல் முதல் சந்திப்பிலேயே பிரதமரின் [illegible] தவிடு பொடியாகி விட்டன.

### கடமையில் தவறினார்

இந்த நிலைமையில் பிரதமரின் கடமை என்ன? நேரே மகாதேசாதிபதியிடம் விரைந்தோடிச் சென்று அவர் கூறியிருக்க வேண்டும், "மகாதேசாதிபதியவர்களே! என்னிடம் நீங்கள் அளித்த தத்துவத்தை இதோ திருப்பித்தருகிறேன். அரசாங்கம் அமைக்கும் பொறுப்பை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதோ! எனது இராஜினாமா!"

டாக்டர் பெரேரா:—கேளுங்கள்! கேளுங்கள்!!

டாக்டர் நாகநாதன்:— இப்படிக் கூறுவதை விட்டுப் பிரதமர், எள்ளளவும் பொறுப்புணர்ச்சியற்ற முறையில் நிரந்தரமான சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டார்.

### கனவுலக சஞ்சாரம்

இதே போன்ற ஒரு சந்தர்ப்பம் பிரிட்டனில் நிகழ்ந்திருக்கிறது. ராம்ஸே மாக்டொனல்ட் தனது மந்திரி சபையை அமைக்கு முன்னர் அஸ்குவித் தன்னை ஆதரிப்பார் என்ற வாக்குறுதியைப் பெற்ற பின்னரே மந்திரி சபை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதை எங்கள் பிரதமரே என்னிடம் ஒத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் இங்கே யாருடைய வாக்குறுதியின் பேரில்பிரதமர் மகாதேசாதிபதியின் கட்டளையை ஏற்றுக் கொண்டார்? தமிழரசுக் கட்சியை ஒருவாறு கைக்குள் போட்டுக் கொள்ளலாம் என்று அவர் நம்பியிருக்கலாம். அல்லது சுதந்திரக் கட்சியிலிருந்து சிலரைப் பிரித்தெடுக்கலாம் என்று அவர் கனவு கண்டிருக்கலாம்.

### சபாநாயகர் தெரிவு

இத்தகைய கனவுலகில் அவர் இருந்திருந்தால், சபாநாயகர் தேர்தலுடன் அவரின் கனவு கலைந்திருக்க

(9-ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தில் திரு. பாலசுந்தரம் சுடச் சுடப் பேசினார்

## யு. என். பி. மீது கடுந் தாக்கு

"கவர்னர் ஜெனரல் இந்தப் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவின் ஆலோசனையை ஏற்று நடவடிக்கை எடுக்கக்கூடாது. காரணம் அரசாங்கம் சரியாக அமைக்கப்படவில்லை பிரதமர் டட்லியின் நேர்மை எந்த அளவில் இருக்கிறது என்பது அவருடைய அரசியல் நடத்தையிலிருந்தே தெரிய வருகிறது"—இவ்வாறு கிண்டலாகப் பேசினார் கோப்பாய்ப் பிரதிநிதி திரு பாலசுந்தரம்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீதான விவாதத்தின்போது திரு பாலசுந்தரம் தமது முதல் பேச்சை நிகழ்த்தினார். இவ்வளவு அழகாகப் பேசுகிறாரே என்று எல்லோரும் வியந்தனர் அரசாங்கக் கட்சியினர் தம்முடைய பேச்சில் குறுக்கிட்டு குழப்பியடிக்கப் பார்த்த சமயங்களிலெல்லாம் நியாயவாதியும் சிறந்த தர்க்கவாதியுமான திரு பாலசுந்தரம் சுடச் சுடப் பதிலளித்து குழப்ப வந்தவர்களுக்கெல்லாம் முகத்தில் அசடு வழியச் செய்தார். தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை அவர் இறுக்கமாகவும் ஆணித்தரமாகவும் எழுப்பினார்.

திரு பாலசுந்தரம் பேசிய தன் சுருக்கம் வருமாறு:—

நேர்மையும், நியாயமுமுள்ளவரென்று கூறப்படும் திரு டட்லி சேனநாயகா தமது கட்சிக்குப் பூரண மெஜாரிட்டி பலம் கிடைத்தால்தான் அரசாங்கத்தை அமைப்பதாகத் தேர்தல் பிரசாரத்தின்போது மக்களுக்குக் கூறி வந்தார். ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் மெஜாரிட்டி பலம் இல்லாத நிலையில் அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்று பிரதமராகியும் விட்டார். இதிலிருந்தே எவ்வளவு நேர்மையிருக்கிறதென்று [illegible]த்துக்கொள்ளலாம்.

"அடுத்த தேர்தலுக்குப் போகத் தாங்கள் தயாராக விருப்பதாகப் பொரளைப் பிரதிநிதி கூறினார். வலதுசாரிகளாக இருப்பவர்களுக்குத் தேர்தலுக்குப் பணம் கிடைக்கிறது கூடிய அங்கத்தவர்களைக்கொண்ட கட்சியை அரசாங்கம் அமைக்குமாறு கோரும் வழக்கம் இலங்கைக்குச் சரிவராது. சபையில் பெரும்பான்மையுடைய கட்சிகள்தான் அரசாங்கத்தை அமைத்தல் வேண்டும்.

"இந்த அரசாங்கம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை. எனவே இந்தப் பிரதமர் கொடுக்கும் ஆலோசனையைக் கவர்னர் ஜெனரல் ஏற்றுக்கொள்ள முடியாது. சபையில் பெரும்பான்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை வழங்கி நீதி செய்ய தயாராயில்லை யு. என். பி. அரசாங்கம்

## அதனுல் அதை ஆதரிக்க முடியாது

## பாராளுமன்றத்தில் தமிழரசுத் தந்தை

"தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரப் பிரச்னைகளில் தமது கொள்கைகளை மாற்றி அவர்களுக்கு நீதி வழங்கத் தயாராக இல்லாத யு என். பியைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்க முடியாது. தமிழ் பேசும் மக்கள் அழிந்து போக நேர்ந்தாலும் இறுதிவரை தமது உரிமைகளுக்காக அவர்கள் போராடியே தீருவார்கள்"—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ் ஜே வி. செல்வநாயகம் கூறினர்.

பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தமிழரசுத் தந்தை பேசினர். தமிழரசுக் கட்சி எதிர்க் கட்சியின் பொதுத் திருத்தப் பிரேரணையை ஆதரித்ததோடு தானும் இரு திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தது.

திரு செல்வநாயகம் பேசியதாவது:-

தமிழரசுக் கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறேம் என்பதை இரு திருத்தப் பிரேரணைகளும் தெளிவாக உணர்த்துகின்றன.

மலைநாட்டில் வசிக்கும் தமிழ் தொழிலாளர்கள் மீது முதலாவது கைவைத்தனர். அவர்களின் பிரஜாவுரிமையை பறித்து, கீழ்நிலைக்கு தாழ்த்தினர். முதலாவது பாராளுமன்றத்தில் 8 பிரதிநிதிகளை வைத்திருந்த அவர்களால் இப்போது ஒரு பிரதிநிதியைத்தானும் அனுப்ப முடியாத நிலை இருக்கிறது. நிரந்தரமாகக் குடியேறி இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள 10 லட்சம் மக்களுக்கு வாக்குரிமை இல்லை! இதனுல் இச்சபையில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைய நேர்ந்தது. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற இதனுல்தான் சாத்தியமாக இருந்தது.

தமிழ்ப் பேசும் பகுதிகளை, சிங்களவர் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளாக்க குடியேற்றத் திட்டத்தை கருவியாகப் பயன் படுத்தக் கூடாது என்ற கொள்கையை காலஞ் சென்ற திரு. பண்டாரநாயகா ஏற்றுக் கொண்டார். ஆனுல் யு. என். பி. இதை முழு மூச்சாக எதிர்த்தது.

தமிழ் பேசும் மக்கள் இறுதியில் அழிந்தொழிந்து போவதாக இருந்தாலும் தங்களின் உரிமைகளுக்காக கடைசி வரையும் போராடுவார்கள்.

### மொழிப் பிரச்னை

இறுதியாக மொழியைப் பறித்தனர். இதை நான் விளக்கத் தேவையில்லை. 30 சதவிகிதமான மக்கள் தமிழ் பேசுவோராக இருக்கும் இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டது முற்றிலும் அநீதியாகும். தமிழுக்கு பிராந்திய அந்தஸ்தாவது கொடுக்க திரு. பண்டாரநாயகா முன் வந்தார். இதையும் யு. என். பி. பலமாக எதிர்த்தது இத்தகைய கட்சி இப்போதாவது தனது கொள்கையை மாற்ற விரும்பவில்லை.

எனவே எதிர்க் கட்சித் தலைவர் பிரேரித்துள்ள பொதுத் திருத்தப் பிரேரணையை நான் ஆதரிப்பதோடு எமது கட்சியின் இரு திருத்தப் பிரேரணைகளையும் வலியுறுத்துகிறேன்.

## பாராளுமன்றம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியில் 45 பேரே உள்ளனர். நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்வதானுல் அதற்கு மொத்தம் 76 பிரதிநிதிகளாவது வேண்டும். இவர்களுக்கு 76 தேறுமா? இதையே கவர்னர் ஜெனரல் உன்னிப்பாக கவனிப்பார். முக்கிய எதிர்க் கட்சிகளான தமிழரசுக் கட்சி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் தலைவர்களை அழைத்து அவர்கள் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கத் தயாரா என்று விசாரிப்பார். சுதந்திரக் கட்சிக்குப் போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் இருப்பதாகக் கண்டால் அக்கட்சியிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பார் கவர்னர் ஜெனரல் என்று விஷயம் அறிந்த அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

## பாராளுமன்றத்தில்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மையினரின் ஆதரவு இல்லை என்பது தெரிந்ததும் பிரதமர் இராஜினுமாச் செய்திருக்க வேண்டும். தேர்தலைப் பற்றிப் பிரதமர் பயமுறுத்துகிருர். தமிழரசுக் கட்சி பெரும் வெற்றி அடையும். ஆனுல் யு. என். பி. கட்சி பாடுதான் கஷ்டம்.

ஜனநாயக ரீதியின்படி வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் மற்றக் கட்சிக்கு அரசாங்கத்தை அமைக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியதுதான். இதைவிடப் பாராளுமன்றத்தைக் கலைத்து மறு தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வது முறையற்றதும், சட்டதிட்டங்களுக்கு விரோதமானதுமாகும்.

### தமிழ் பேசும் மக்கள்

"தமிழ் பேசும் மக்கள் அடிமைகளாக இருக்கப்படலாகாது என்பதுதான் எங்களின் முக்கிய கோரிக்கையாகும் எங்களின் கோரிக்கைகளுக்குத் தவறுன விளக்கம் கொடுக்கப் பார்க்கின்றுர் சனப முதல்வர். இருமொழிகட்கும் சமஅந்தஸ்து என்ற அடிப்படையில் தான் யு. என். பி. ஆரம்பிக்கப்பட்டது.

2000 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்த நாட்டில் வசித்து வந்திருக்கிறேம். 2000 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மொழி பேசப்பட்டு வந்திருக்கிறது. இப்படியான நிலையில் இன்று உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

### யு. என் பி.யின் சேஷ்டை

யார் சிங்களம் மாத்திரம் என்ற கோஷத்தைக் கிளப்பியது? யார் அடிப்படை உரிமைகளை பறித்தது? எல்லாம் யு. என். பி தான். பெரிய சேனநாயகாவின் காலத்திலிருந்தே திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன.

யு. என். பியின் சென்ற கால நடவடிக்கைகள்தான் சமீபத்தில் வகுப்புக் கலவரங்களுக்குக்கூட காரணமாக இருந்ததென்ருல் மிகையாகாது.

சட்டசபையின் காலத்தில் தமிழும், சிங்களமும் இந்த நாட்டின் இரு பாஷைகளாகவிருக்குமென்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு பாஷைக்கு இருக்கும் அதே அந்தஸ்து மற்றப் பாஷைக்குமிருக்க வேண்டுமென்பதுதான் அதன் கருத்து.

பிரதமர்:- சமஅந்தஸ்து இருக்க வேண்டுமென்று அது கூறவில்லை.

திரு பாலசுந்தரம்:- சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் சட்ட நிபுணராக நடித்தார். இப்போது அரசியல் நிபுணராகிவிட்டார். தமிழும் சிங்களமும் இரு பாஷைகளாக இந்நாட்டில் இருந்து வர வேண்டுமென்றிருந்தால் சமஅந்தஸ்தில்லாமல் வேறென்ன.

பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்ததும் யு. என். பி தான் அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக முதலில் அறிக்கை விட்டதும் யு. என். பியைச் சேர்ந்தவரான தற்போதைய பிரதமர்தான். வெட்கம். இந்த நிலையில் வேறு என்னதான் நாம் செய்ய முடியும்.

## பரீட்சை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணப்ப மனுக்கள் விஷயத்திலும் இதே குரங்குச் சேஷ்டையைத்தான் பரீட்சை இலாகா கையாண்டது. தமிழரசு எம். பிக்கள் தலையிட்டுக் குட்டை வெளிப்படுத்திய பின்தான் காரியம் ஒழுங்குக்கு வந்தது.

## யாழ்ப்பாண....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு வாரமாக ஏற்றுமதியை முற்றுக நிறுத்தி விட்டது. கொழும்பில் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் காய் போய்ச் சேருவதற்கு வாய்ப்பாக ஆனை இறவு தடை முகாமில் பாதுகாப்பு தளர்த்தப்பட்டு விட்டது. இதில் தான் அரசாங்கத்தின் வம்புத்தனமான மனப்பான்மை அவ்வளவும் தங்கியிருக்கிறதென்பது இப்போது தெளிவாகி விட்டது.

### தந்திரமாகத் தப்புகிறது

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் தான் விலை பொருட்கள் மூலம் அரசாங்கம் காயைக் கொள்வனவு செய்ய வேண்டும், ஆனையிறவில் தடையின்மையால் வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையில் வெங்காயத்தைக் கொண்டு போய் அங்கு மலிவாக விற்று விடுகிருர்கள்.

மார்க்கெட்டில் மலிவாகக் காய் கிடைப்பதால் அதனிலும் கூடுதலான உத்தரவாத விலைக்கு, அரசாங்கம் விலை பொருட் சங்கங்கள் மூலம் காயை வாங்காமல் தந்திரமாகத் தப்பித்துக் கொள்கிறது. எப்படியும் உத்தரவாத விலைத் திட்டத்தை முறியடித்து யாழ்ப்பாண விவசாயிகளை மட்டந்தட்டிவிட இந்தச் சூழ்ச்சியை இப்போது அரசாங்கம் கையாளத் தொடங்கியிருக்கிறது.

இதனுல் பாதிக்கப் பட்ட யாழ்ப்பாண விவசாயிகள் மிகவும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருக்கிருர்கள்.

## பாராளுமன்றத்தில் டாக்டர்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இதில் அரசாங்கக் கட்சிக்கு 60 வாக்குகளும் எதிர்கட்சிகளுக்குத் 93 வாக்குகளும் விழுந்திருக்கின்றன. இதையறிந்ததும் பிரதமர் உப சபாநாயகர் தேர்தலிலோ, கமிட்டிகளின் அக்கிராசினர் தேர்தலிலோ அரசாங்கக் கட்சியைக் கலந்து கொள்ள விடாது ஒதுங்கி நின்றுவிட்டார். பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட பிரதமர் சென்ற சில தினங்களில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்ட சந்தர்ப்பம் இது ஒன்றேபாகும்! ஆனுல் இதேயளவு பொறுப்புணர்ச்சியுடனும் புத்திக் கூர்மையுடனும் அன்று காலையிலேயே பிரதமர் தனது இராஜினுமாவைச் சமர்ப்பிக்கத் தவறி விட்டார்.

### மந்திரிசபை அமைப்பு

அத்துடன் பிரதமர் நின்று விடவில்லை. ஆறு மந்திரிகளை நியமித்து, மந்திரிசபையையும் அமைத்துக் கொண்டார். சபாநாயகர் தேர்தலுக்குப் பின் பிரதமரின் ஒவ்வொரு செய்கையும் எண்ணமும், வெறுமனே ஒரு டம்பாச்சாரியின் பித்தலாட்டமாகத் திகழ்ந்தது.

### பொறுப்பற்ற பிரசங்கம்

பாராளுமன்றத்தை கூட்டுவித்தார். ஒரு வாக்கெடுப்பில் தானும் உயிர் பிழைக்க முடியாத பிரதமர், பாராளுமன்றத்தைக் கூட்டியதும், சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தியதும் நான் கூறிய டம்பாச்சாரியின் வீண் தனத்தைப் போன்றதல்லாது வேறெதுவுமல்ல. நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கமே பொறுப்பற்ற ஒரு பிரசங்கம். அதில் அவர் கூறியதை நிறைவேற்றிக் காட்ட வேண்டிய சந்தர்ப்பமே அவருக்குக் கிடைக்காது என்பது அவருக்கே தெரியும். ஆகவே, விரும்பிய தெதையும் அவர் கூறியிருக்க முடியும்.

### சீனர்களின் கதை

சீனர்களின் மரணச் சடங்கில் நடப்பதாகக் கூறப்படும் ஒரு கதையை நான் சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கிறேன். காகிதத்தில் செய்யப்பட்ட விலையுயர்ந்த ரோல்ஸ் ரோயிஸ் கார்கள், பிரேத ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும். மறு உலகில்பாவிப்பதற்காக, காசோலைகள், அழகான இள மங்கைகளின் உருவங்கள் ஆகியவை பிரேதத்துடன் போட்டு எரிக்கப்படும். காசோலை எழுதுபவர்கள் கண்களை மூடிக் கொண்டு, எந்தத் தொகைக்கும் எழுதுவார்கள். ஏனெனில் அவைகள் காசாக மாற்றப்பட வங்கிகளுக்கு அனுப்பப்படா என்பது காசோலை எழுதுபவருக்குத் தெரியும். நெருப்பில் பொசுங்கப் போகும் காசோலை [illegible]

இந்த அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கமும் இத்தகைய ஒன்று தான். பொறுப்பற்ற இப்பிரசங்கத்தில் பிரதமர் என்னத்தையும், எதையுமே கூறியிருக்கலாம். அவற்றை நிறைவேற்றி வைக்கும் சந்தர்ப்பம் தமக்குக் கிடையாது என்பது அவருக்குத் தெரியும். ஏனெனில் ஏப்ரல் 22-ந் தேதி இந்த அரசாங்கத்தின் சிதைக்கு நெருப்பு மூட்டப்படும் பொழுது, இந்தப் பிரசங்கமும் அதே நெருப்பில் பொசுங்கிவிடத் தான் போகிறது.

—(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம் சிரித்தது!

சிறுகதை — எழுதியவர்: பா. பாலேஸ்வரி

வழக்கமாகப் பாடசாலைக்குச் செல்லும் பஸ் வண்டியில் இடமில்லாததால் சாரதா வித்தியாலயத்துப் பாலர்வகுப்பு ஆசிரியை சுமதி சற்றுத் தாமதமாகவே வர நேர்ந்தது.

பஸ்ஸில் இருந்து இறங்கி ஓட்டமும் நடையுமாகப் பாடசாலையை நோக்கி நடந்தாள் சுமதி. பாடசாலை வாசலை அடைந்தபோது மூச்சு வாங்கி வியர்த்துக் கொட்டியது அவளுக்கு. கைக் கடிகாரத்திற் கண்ணோட்டஞ் சென்றது. சரியாக முக்கால் மணிநேரம் பிந்திவிட்டது. நிலைமையைச் சமாளிக்க நேராகத் தலைமை ஆசிரியையிடம் சென்று மன்னிப்புக் கோரி வகுப்பறைக்குள் நுழைந்தாள். "வணக்கம் டீச்சர்" என்ற குஞ்சுக் குரல்கள் அவளை ஏகமனதாக வரவேற்றன. அந்த மழலை இன்பத்தில் தன் துன்பத்தை மறந்தாள் அவள். "டீச்சர் வந்திட்டாவே டீச்சர் வந்திட்டாவே" என்று மீண்டும் கீதம் எழுப்பினார்கள் குழந்தைகள்.

"உஸ்! எங்கே எல்லாரும் நல்லபிள்ளைகளாக இருங்கள்" என்று அன்பாகக் கண்டித்த சுமதி கள்ளங்கபடமற்ற அந்தக் கண்ணுடி முகங்களை ஒருமுறை சுற்றிப் பார்த்தாள். மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல அதுவரை சத்தம் போட்டுக் கொண்டிருந்த குழந்தைகளும் மௌனமானார்கள்.

சுரேஷ் இங்கே வா? உன்னை இலக்கம் எழுதி வரும்படி கூறியிருந்தேன். எழுதி வந்தாயா...? முன் வாங்கில் தன் கட்டை விரலைச் சுவைத்துக் கொண்டிருந்த சிறிய பாலகனை நோக்கிக் கேட்டாள் சுமதி. "ஆம் டீச்சர் எங்க அப்பா சொல்லித் தந்தார்" என்று மழலையிற் கூறினான் சுரேஷ். "நல்ல பிள்ளை" என்று அவனது முதுகைத் தட்டிக் கொடுத்த சுமதியின் பார்வை மீண்டும் அந்த வகுப்பறையின் நாலா பக்கமுந் திரிந்து ஈற்றில் முன் வாங்கின் இடது புறத்தில் கண்ணில் இருந்து நீர் தாரையாகப் பெருக உட்கார்ந்திருந்த அப்பெண் குழந்தை மேற் சென்று நின்றது. அது ஒரு புது முகம். வகுப்பிற்கு அன்று தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். சுமதி பிந்தி வர நேர்ந்ததால் தெரியவில்லை. மற்றக் குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் புது முகமாகத் தோன்றிய போதும் சுமதிக்கு அக் குழந்தை, யாரையோ ஞாபகமூட்டியது அதே நீண்ட விழிகள். சிப்புக் கடங்காமல் முன் நெற்றியில் சுருள் சுருளாகப் புரண்டு விழுங் கேசம்! குறும்புப் பார்வை புன்சிரிப்புத் தவழும் கொவ்வை அதரங்கள்.

வைத்த கண் வாங்காமல் குழந்தையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுமதி. தங்கள் ஆசிரியையின் தடுமாற்றத்தை அறிந்தோ என்னமோ முன் வரிசையில் இருந்த குழந்தைகளிற் சிலர் "அவள் காலையிற்தான் வந்தாள். கூட அவங்க அப்பாவும் வந்தார். வந்த நேரந் தொடக்கம் அழுகிறாள். பேசினாலும் பேசமாட்டேன் என்கிறாள் டீச்சர்" என்று தங்கள் பாஷையிற் புரியவைத்தார்கள். சுமதி தன் நிலையை உணர்ந்தாள். அற்பநேர உணர்ச்சி தன்னை எத்தனை தூரம் கடமையில் இருந்து விலக்கிவிட்டது என்பதை நினைத்து வெட்கப்பட்டாள். இருந்தும் குழந்தைகளிடையே தன் நிலையைச் சமாளித்து, 'ஓ...! புது மாணவியா...? ரொம்ப சந்தோஷம். பாவம் குழந்தை அழுகிறாள். இங்கே வா அம்மா", என்று அன்பாகக் கூப்பிட்டாள். குழந்தை இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ஆனால் அதன் விம்மல் மட்டும் இலேசாகக் கேட்டது. சுமதி தன் ஆசனத்தைவிட்டுக் குழந்தையிடம் சென்று அதன் முகத்தை நிமிர்த்தி கரங்களை அன்பாகப் பற்றித் தன் ஆசனத்திற்கு இட்டுச் சென்றாள். குழந்தையின் நெற்றியில் புரண்ட சுருளான கேசத்தைத் தன் கையால் ஒதுக்கியபடியே "உன் பெயர் என்ன" என்று வினவினாள். விம்மல்களுக்கிடையே 'சுமதி' என்ற பிஞ்சுக் குரல் கேட்டது. ஆசிரியை சுமதி ஒரு கணந் திடுக்கிட்டாள். அவளுக்குத் தன் கண்களையும் காதுகளையும் நம்பவே முடியவில்லை. அணைந்து போயிருந்த இதயத் தீ ஜுவாலை விட்டெரியத் தொடங்கியது. அவள் மனதிலே பெரிய போராட்டம். மீண்டும் அக் குழந்தையின் பட்டுக் கன்னத்தை வருடியபடி "உன் அப்பா பெயர் என்ன"? என்று நாசுக்காக வினவினாள். ஓரளவு பயந்தெளிந்த குழந்தை சுமதியின் முகத்தைப் பார்த்து 'அப்பா' என்று பெரிய சத்தமாகக் கூறினாள்.

"என்ன சுமதி, மணியடித்தது கூடத் தெரியாமல் அக் குழந்தையுடன் நின்றுவிட என்ன விஷேசங் கண்டு விட்டாய்"? அடுத்த பாடத்திற்காக வந்து நின்ற சக ஆசிரியை பத்மாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்ட சுமதி "மன்னித்துக்கொள் பத்மா, புதுக் குழந்தை அன்பாகப் பழகினால் தான் அடுத்துப் பாடசாலைக்கு வருவாள் என்று நினைத்துப் பேசினேன். அந்த மழலை இன்பத்தில் நேரம் போனதே தெரியவில்லை" என்று கூறி வகுப்பை விட்டு வெளியேறினாள்.

என்னத்தைச் செய்த போதும் அன்று மட்டும் சுமதியின் மூளை வேலை செய்ய அறவே மறுத்தது. அவளால் படிப்பிக்க முடியவில்லை. தன் சிந்தனைக் குதிரையைக் கட்டிப்போட எவ்வளவோ பிரயாசைப் பட்டாள். ஆனால் அது கட்டுத்தறியையும் பிய்த்துக் கொண்டு மிகவும் வேகமாக ஓடத் தொடங்கியது.

★

அப்போது அவள் சிறு பெண். ஏழையுங் கூட. மகேந்திரன் அவள் எதிர் வீட்டுப் பையன் சீமான் வீட்டுப் பிள்ளை சிறுவயது முதற்கொண்டே இருவரும் இணை பிரியாத தோழர்கள். பிஞ்சு உள்ளங்கள் ஏற்றத் தாழ்வை உணராமலே அன்பு என்னும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு மனிதனின் அதிர்ஷ்டத்திற்குள் ஒளிந்திருக்கும் எதிர்காலத்தையிட்டுக் கவலைப் படாமலே வளர்ந்தார்கள். பருவமும் காலமும் இதையெல்லாம் அக்கறை செய்யாமல் தம் கடமையைச் செய்தன. சுமதி மங்கையானாள். பையனைப் பெற்றவர்கள் பணக்காரர்கள் அல்லவா? கவலைப்பட்டார்கள். சுமதியின் தாயாருக்கு ஏற்பட வேண்டிய கவலை மகேந்திரனின் பெற்றாருக்கு ஏற்பட்டது தங்கள் செல்வப் புதல்வன் ஒரு ஏழைப் பெண்ணுடன் உறவாடுவதை எந்தப் பணக்காரப் பெற்றார் தான் விரும்புவார்கள்?

பிள்ளைக்குப்புத்தி கூறினார்கள். அவன் கேட்டாற் தானே? பயம் நயம் யாவும் பயனற்றன. மகேந்திரன் வழமைபோல் சுமதியின் வீட்டுக்குப் போய் வந்தான். அவளும் மகேன்! மகேன்!! என்று அவனிடம் உயிரையே வைத்திருந்தாள். தன் பிள்ளையின் குறையை நீக்கத் தவறிய மகேனின் தாய் ஒரு நாள்.

"ஏன் செல்வம்! உன் பெண்ணிற்குத்தான் புத்தியில்லை என்றால் உனக்கும் புத்தியில்லையா? ஒரு வயது வந்த பெண்ணை அடக்கமாக வளர்க்கத் தெரியவில்லை...? என்னவாக இருந்தாலும் கைம்பெண்ணின் வளர்ப்புத் தானே"? வாயில் வந்ததை முன்பின் யோசியாமல் பொரிந்து தள்ளி விட்டாள். சுமதியின் தாயாரின் இதயத்தில் இவ்வார்த்தைகள் 'சுரீர்' என்று உறைத்தன. ஆத்தி[illegible] இரண்டு முறை அறைந்து இன்றுடன் மகேனின் உறவை விட்டுவிடு என்று ஆவேசம் வந்தவள் போற் கத்தினாள்.

சுமதிக்கு ஒன்றுமே புரியவில்லை. எதிர்பாராத இத் தாக்குதல் கண்ணீராகப் பிரதிபலித்தது அன்று சாயந்தரம் சுமதியின் வீட்டிற்குள் காலடி வைத்த மகேனை "தம்பி! நீ சீமான் வீட்டுப் பிள்ளை நாங்கள் அன்றாடச் சோற்றுக்கே அரோகராப் போடும் அநாதைகள். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். நீ இனி இங்கு வரப்படாது. சுமதியை மறந்துவிடு" என்ற சுமதியின் அன்னையின் குரல் தடுத்து நிறுத்தியது. "மாமி! நான் சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்தது என் குற்றமல்ல. சுமதி ஏழையாகப் பிறந்ததும் அவள் குற்றமல்ல. என் உடலில் உயிர் உள்ளளவும் அவளை என்னால் மறக்க முடியாது. நீங்கள் இனி என்னை இங்கு வரக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டீர்கள். அதை நான் சிரமேற் கொள்வேன். ஆனால் சுமதி எனக்காகவே பிறந்தவள் என்பதை மட்டும் மறக்க வேண்டாம்" நிதானமாகப் பதில் அளித்து பதிலுக்குக் காத்திராமல் 'விர்' என நடந்து சென்றான்.

காலச்சக்கரஞ் சுழன்றது. மகேனுக்குப் பல இடங்களில் இருந்தும் பெண் பேசி வந்தார்கள். தாயாருக்கு எப்படியாவது தன் மகனைக் கல்யாணஞ் செய்து வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் மகேனுடைய மனதை மாற்றுவது பகீரதப் பிரயத்தனமாய் விட்டது இந்தப் பிரச்சனையை ஒரேயொரு வழியிற்தான் தீர்க்க முடியும் என்பதை உணர்ந்த அவனுடைய தாய் ஒரு நாள் 'சுமதி' என்று அன்பொழுக அழைத்துக்கொண்டு சுமதியின் வீட்டையடைந்தாள். சுமதியின் தாயார் கோவிலுக்குச் சென்றிருந்தபடியால் "யார் மாமியா வாருங்கள்" என்று வரவேற்றாள் சுமதி.

"அம்மா வெளியே சென்றுள்ளார் இன்னும் சிறிது நேரத்தில் திரும்பி விடுவார்" எப்படியோ துணிவுடன் கூறி முடித்த சுமதியின் மார்பகம் பூரிப்பால் விம்மியது. இதயம் என்னவென்று அறியாத மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தது. "பரவாயில்லை இப்படி உட்கார். உன்னோடு தான் நான் ஒரு விடயம் பேச வந்தேன்." தேனொழுகப் பேசினாள் மகேனின் தாயார்.

சிந்தித்தாள் சுமதி! ஒருவேளை மகேன் என்னையே மணப்பேன் என்று பிடிவாதஞ் செய்திருக்கலாம். மாமி என்னிடம் ஒரு வார்த்தை கேட்கலாம் என்று வந்திருப்பாள் அவள் மனம் இல்லாததைக் கற்பனை செய்தது. 'சுமதி! நீ எனக்கு ஒரு பெரிய உதவி செய்ய வேண்டும். நீ மட்டும் மனம் வைத்தால்............!" "இதென்ன மாமி பெரிய காரியமா...? உங்கள் மகனை நான் மணம் புரியஎனக்குப் பூரண சம்மதம்" இப்படிக் கூறிவிடு என்று அவளது பேதை மனம் உந்தித்தள்ளியது. ஆனால் வார்த்தைகள் ஏனோ வெளிவரவில்லை. "என்னால் முடிக்கக் கூடிய காரியமாக இருந்தால் எப்படியாவது செய்து முடிப்பேன்" பதட்டத்துடன் கூறி முடித்தாள் சுமதி. "முடியுமானால் என்ன...? கட்டாயம் உன்னால் முடிய வேண்டிய காரியம் எங்கே எனக்கு வாக்குறுதியளி!" "வாக்குறுதியா...?" துணுக்குற்றாள் சுமதி.

"ஏன் பயப்படுகிறாய் சுமதி? உனக்கு மகேன்மேல் அன்பில்லையா? அவனது நல்வாழ்க்கையில் உனக்கக்கறையில்லையா...?" "நிறைய உண்டு! அவருக்காக என் உயிரை வேண்டுமானாலுந் தருவேன். அவர்மீது ஆணை. உங்களுக்கு என்ன வேண்டும் மாமி...?"

"மகேனை நீ மறந்து விட வேண்டும்"

திடுக்கிட்டாள் சுமதி! "யார்யாரைமறப்பது? நான் மகேனை மறப்பதா...! முடியாது! என்னால் முடியவே முடியாது!! மன்னித்துவிடுங்கள் மாமி!" நிதானமாக ஆவேசத்துடன் பதிலளித்தாள் சுமதி.

"உன் வாகுறுதி...? இவ்வளவு தான் நீ மகேன் மேற் காட்டும் அன்பா?"

"ஆசை காட்டி மோசஞ் செய்து விட்டீர்கள் மாமி! கொஞ்சிக் குலாவி வஞ்சித்து விட்டீர்கள். சரி நான் மறந்ததாக வைத்துக்கொள்ளுங்கள் அவரும் என்னை மறந்தாக வேண்டும்...?" "அதையும் நீ தான் செய்து முடிக்க வேண்டும்"

"அன்பை வன்பாக்க வேண்டும் என்கிறீர்களா?" "இல்லை... அப்படி நடித்துவிடு" சுமதியின் உள்ளங் குமுறியது. கண்கள் நீரைக் கக்கின. உடல் பதறியது. ரோசத்துடன் ஒரு கர்வமான அலட்சியமுங் கலந்து கொண்டது. "சரி! கட்டாயம் இவ்வுதவியை செய்வேன்" என்று கூறிய சுமதி ஓடிச்சென்று படுக்கையிற் புரண்டழுதாள். மனப்பாரம் குறையுமட்டும் கதறிக்கதறி அழுதாள். ஒரு காகிதமும் பென்சிலும் எடுத்துச் சில வார்த்தைகள் கிறுக்கித்தள்ளிய அவள் மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்டது. கோயிலுக்குச் சென்று திரும்பிய தாயார் தன்மகளின் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டவளாய் "ஏன் அழுதாயா? முகம் எல்லாம் வீங்கியிருக்கே" என்று பரிவுடன் வினவினாள்.

"ஆமாம்! அழுது கொண்டு தான் இருந்தேன். இனிமேலும் எனக்கிந்த ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை. சென்ற வாரம் என் தோழி பத்மா எழுதியபடி அந்த ஆசிரியத் தொழிலை ஏற்க மேட்டுப்பாளையம் செல்லத் தீர்மானித்து விட்டேன்.

"பத்மா எழுதிய அன்றே போகலாம் என்று நான் எவ்வளவோ கூறினேன். நீ மறுத்தாய். இன்று நீயாக விரும்புகிறாய். எனக்கென்னம்மா ஆட்சேபனை?"

அன்று இரவுப் புகையிரதம் இருவரையும் 'மறைந்திடல்' என்ற கிராமத்திற்குக் கொண்டு சென்றது. வேலையற்ற இரண்டாம் மாதமே விதி மீண்டும் அவள் வாழ்க்கையோடு விளையாடியது ஆம்! அவளுக்கு ஒரே துணையாக இருந்த தாயார் அந்த ஊரில் வாடைக்காற்றுப் போலப் பரவிவந்த சளிச்சுரத்திற்குப் பலியானாள். சுமதி மட்டும் தைரியத்தைக் கைவிடவில்லை.

இந்நிலையில் மகேன் சுமதியின் கடிதங்கண்டு ஆச்சரியப்பட்டான். அவள் கையெழுத்தாக இருக்கவே அவசரமாகக் கிழித்தான். கடிதத்தைப் படித்த அவன் தலை சுற்றியது ஏன்? உலகமே சுற்றியது மீண்டும் ஒரு முறை வாய் விட்டுப் படித்தான்

அன்பு மகேன்,

உங்களுக்கு இக்கடிதம் எவ்வளவு வேடிக்கையாக இருக்

(15-ம் பக்கம் பார்க்க)


## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**

**( Spermatone Compound )**

**ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்** மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25

வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

**'மோடர்ன் கிளினிக்'**

(MODERN CLINIC)

255, காலி ரோட், கொழும்பு-4.

பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்



Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலத் தொழில் செய்வதில் என்ன வசை இருக்கிறது

## குழந்தைகளை படிப்பிப்பதோடு தொழிலும் சொல்லித்தர வேண்டும்

### மீன்பிடித் தொழிலாளி இராசையா பேட்டி

[பேட்டி கண்டவர்: "மாலதி"]



மகளைப் படிக்க வைத்ததோடு தொழிலும் பழக்கியிருக்கிறேன்; எனக்கு உதவுகிறாள்.

"உங்களைப் பேட்டி காண விரும்புகிறேன்" என்றேன் நான். "பத்திரிகைக்கா? சுதந்திரன் பத்திரிகைக்கா?... நான் என்ன சொல்ல வேண்டும்"? என்று மகிழ்ச்சியுடன் முன் வந்தார் அவர்.

அவர் ஒரு மீன்பிடித் தொழிலாளி. நாவற்குடா விலே அவரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அது தான் அவருடைய சொந்த ஊர். வயது சுமார் ஐம்பது இருக்கும். 'மீன் பிடித் தொழிலை எவ்வளவு காலமாகச் செய்கிறீர்கள்'? என்றேன் நான்.

"என்ன கேள்வி இது! அதுதான் எனது பரம்பரைத் தொழிலாயிற்றே!... பாட்டன்... பூட்டன்... என்று அடுக்கிக் கொண்டு போகும்போது பார்த்தேனே அவரது முகத்தை! அப்பப்பா! அதிலே தான் எத்தனை பொலிவு! எத்தனை பெருமிதம்! இனி இதோ மீன்பிடித் தொழிலாளி திரு. க. இராசையா அவர்களை உங்கள் முன்னிலைக்கே அழைத்து விடுகிறேன். அவர் சொல்வதைக் கேளுங்கள்:...

#### சொந்த விஷயம்


"நான் எதைச் சொல்ல! சொல்ல ஒன்றுமில்லை என்று தான் எண்ணினேன், சொல்லப் போனால் நிறையச் சொல்லிக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறது. எனது குடும்பம் அவ்வளவு பெரிதல்ல. ஏழு குழந்தைகள், நான்; அவர்களின் தாய். அவ்வளவே தான். எனக்கு ஒரு தலைப்பட்ட மகன். தமிழ் ஆசிரியனாகப் பயிற்றப்பட்டு வீட்டிலேயே இருக்கிறான். என்னைப்பற்றிக் கூறிக்கொண்டு போகிறேனே. என் தொழிலைப் பற்றித்தானே நீங்கள் கேட்கிறீர்கள்?

#### கூடு வைத்து மீன் பிடித்தல்

"மீன் பிடிப்பதிலே பல முறைகள். நான் கூடு வைத்துத்தான் மீன் பிடிக்கிறேன். சில நேரங்களில் வலை வீசியும் பிடிக்கிறேன். கூடென்றால் என்ன என்று கேட்கிறீர்களா? மீன்களைத் தந்திரமாகப் பிடிக்கும் ஒரு பொறி அது. மீன்கள் கூட்டினுள் செல்ல முடியும். ஆனால் வர முடியாது. கூட்டின் வாசல் அப்படி அமைந்திருக்கும். இந்தக் கூடுகளை மூங்கில் பிரம்பு, ஈச்சமட்டை ஆகியவைகளினால் நாங்களே ஆக்கிக் கொள்வோம்.

"பிரம்பால் ஒரு பெரிய கூட்டை ஒரே நாளில் செய்து முடிக்கலாம். அதே கூட்டை மூங்கிலால் செய்வதானால் இரண்டு நாட்களாகும். மூங்கிற் கூடுதான் பெரிய மீன்களுக்கு உகந்தது. அவை கூட்டைப் பிய்த்தெறிந்து விடுவதும் உண்டு. கொத்துக் குத்திய ஆழமான இடங்களிலும், கண்ணா ஓரங்களிலும் கூட்டை வைப்போம். ஒட்டி, ஓரா, சள்ளல் ஆகிய மீன்களுக்கு கூட்டினுள் 'சல்லுப்' (பாசி) போட்டு வைப்போம். பறட்டைக்கு (ஒரு வகை ஒட்டி)

"என்னிடம் சொந்தத் தோணியிருக்கிறது. பெரிய ஓராக்கள் தொடக்கம், சிறிய பறட்டைவரை எல்லா மீன்களுமே கூட்டில் பிடிபடுகின்றன. அதிகமாக நான் தொழிலுக்குப் போவது பகலில் தான். கண்ணா ஓரங்களில் வைக்கும் கூடுகளில் வேறு யாராவது விளையாடி விடுவதுமுண்டு. அதனாலேயே இரவில் செல்ல வேண்டியிருக்கும். அதிக மீன் படும் நாட்களிலே நாற்பது—ஐம்பது...ஏன், நூறு ரூபாவுக்குமே வியாபாரம் நடக்கும். சில தடவைகளில் மொத்தமாக வியாபாரிக்கே கொடுத்து விடுவேன். ஏன் மட்டக்களப்புச் சந்தைக்குக் கூட கொண்டு வருவேன்.



வலை வீசிக் கூட மீன் பிடிக்கிறேன்

சொறிக் கட்டி போட்டு வைப்போம். கூடு வைக்கக் கூடிய இடங்களும் மீன்கள் சரியும் காலமும் எங்களுக்குத் தெரியும்.

#### வருமானம்

"மட்டக்களப்பு வாவியிலே, நான் கூடுவையாத இடமேயில்லை. பங்குடா வெளி தொடக்கம் பட்டிருப்பு வரை, தோணியிலே நான் செல்வேன். தூரங்களுக்குச் செல்லும் போது துணைக்கு ஒருவரை அழைத்துச் செல்வேன்.

#### சந்தோஷமாக வாழ்கிறோம்

"இத்தொழிலால் திட்டமாக ஒரு நாளைக்கு இவ்வளவு தான் உழைக்க முடியும் என்று கூற முடியாது. ஆனால் பஞ்சமில்லாமல் வாழ்க்கையை ஒட்ட முடிகிறது. தொழில் வீழ்ச்சியடையும் காலச் சீவியத்தைச் சமன் படுத்துகிறது. மழை காலத்தில் தொழில் குன்றியேவிடும்.

"எனது குடும்பத்துக்கு நாளொன்றுக்கு ஆறு ரூபாய் வரை செலவாகிறது. கறிக்குக்காக தேவையில்லை. வேறு பொருட்களெல்லாம் காசுக்குத்தானே வாங்க வேண்டும். எப்படியோ, எனது குடும்பம் சந்தோஷமாகவே வாழ்கிறது. அது போதும் எனக்கு. வேறென்ன கேட்கப் போகிறீர்கள்?"

#### வெள்ளம் வந்தது

"முன்பு ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உங்கள் தொழிலுக்கு இடையூறுகள் ஏற்படவில்லையா?"

"அப்பப்பா! அதை ஏன் கேட்கிறீர்கள். அவ்வளவு காலமும் தொழிலேயில்லை. நல்ல காலம் எனது வீட்டுப் படியுடனேயே வெள்ளம் வந்து தலையை நீட்டி விட்டுத் திரும்பியது. என்னிடமாவது வீட்டதா? அதன் பிறகு செய்த உதவிகள் இவை!

#### மீன் பிடி சங்கங்கள்

'இங்கே மீன் பிடித் தொழிலாளர் சங்கங்கள் இல்லையா?"

"ஏன் இல்லை! இருக்கிறது. ஆனால் நான் அதிலே பங்கு கொள்வதில்லை. கடன் எடுப்பதுமில்லை. ஆண்டவன் தரக் கூடிய அளவு தருகிறான், வீணாக ஏன் கடன் எடுக்க வேண்டும்? இங்கே ஐக்கிய நாணய சங்கம் கூட ஒன்றிருக்கிறது. அதன் மூலமும் கடன் பெறலாம்."

#### புதிய முறை

"மீன் பிடிப்பதிலே புதிய முறைகளை நீங்கள் கையாள்வதில்லையா?... தொழில் செய்யும் காலத்தில் விபத்துக்கள் ஏதாவது நேர்ந்திருக்கிறதா?"

"என்ன புதிய முறை வேண்டிக்கிடக்கிறது. புதிய முறை பெருகுவதோடு வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகுகிறது. இலாம்பு, கொளுத்துவதற்குப் பதிலாக இப்போது 'பெற்றோ மெக்ஸ்' கொளுத்தி மீன் பிடிக்கிறார்கள். நல்ல பலன் கிட்டுகிறது. எனது அனுபவத்தில் அப்படி விபத்துக்கள் எதுவுமே நேரவில்லை."

"இதோடு வேறு தொழில்களையும் செய்தால் என்ன?"

அது சாத்தியப்படாது; செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை. ஒரு முறை வேளாண்மை செய்யலாமென்று யோசித்தேன். விதைப்பு; அறுவடை காலங்களிலே தான் மீன் பிடிப்பு உச்ச நிலையடையும். ஆகவே அது இரு தோணியில் கால் வைப்பது போலாகி விடுமல்லவா?"

#### உத்தியோகம் கூடாது

"அது சாத்தியப்படாது தான். உங்கள் மகளைப் படிக்கவைத்தீர்களே! அதன் நோக்கமென்ன? அவரும் உங்களுக்கு உதவி செய்கிறாரா?

"எல்லோரும் படிக்கவைக்கிறார்களே! ஏன் என் மகளும் படிக்கக்கூடாது என்ற ஆசைதான் இப்போது அவரையும் கூடத்தான் தொழி

(13-ம் பக்கம் பார்க்க)

#### மூலதனமும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறை செய்வதற்காக கிராமத்தார் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய கட்டம் ஏற்படலாம். இப்படியான கருமங்களைப் பூர்த்தி செய்வதற்காகவே கிராமக் கூட்டுறவு பலநோக்கு சங்கங்கள் நிறுவப்படுகின்றன. இச் சங்கங்களின் வாயிலாக கிராம மக்கள் தமக்கு வேண்டியனவற்றைப் பெற்று வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும். தனிப்பட்ட கிராம வாசியின் வாழ்க்கை நிலை உயரும் போது, முழுக் கிராமத்தின் பொருளாதாரமும் வளர்ந்தோங்கும் என்பதற்குத் தடையேது?


★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்;

குண்டன்மால்ஸ்

26, கெய்சர் வீதி, கொழும்பு.




மட்டக்களப்பு வாவியில் நான் கூடை வைக்காத இடமே இல்லை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்:

# டயல் 'எம்' போர் மேர்டர்

கொழும்பு புதுமை அரங்கினர் பொரளை வை. எம். பி. ஏ. மண்டபத்தில் சுடந்த ஞாயிற்றுக்கிழமை நடித்துக் காட்டிய "டயல் 'எம்' போர் மேர்டர்" என்ற துப்பறியும் தமிழ் நாடகத்தைப் பார்த்தோம். உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு, நன்றி கலந்த உணர்வோடு திரும்ப முடிந்தது. புதுமை அரங்கினர் புதுமை செய்து விட்டார்கள். சந்தேகம் இல்லை.

## நாடகம் வந்த விதம்

பிரெட்ரிக் நோட் என்பவர் எழுதிய துப்பறியும் நாடகம் டயல் 'எம்' போர் மேர்டர். அல்பிரெட் ஹிச்கொக் அதை அருமையான தோர் திரைப்பட மாக்கி வெற்றி கண்டார். நமது எழுத்தாளர் மக்கீன் அதை நம் நாட்டுச் சூழ் நிலைக்கு ஏற்ப அழகு தமிழில் மொழி பெயர்த்து மேடை யேற்றி நல்ல பெயர் வாங்கிக் கொண்டார். பாராட்ட வேண்டும் அவரை.

## நல்ல நடிப்பு

நாடகத்தின் சிறப்புக்கு நடிகர்களும் நடிகையும் மிக மிகத் துணை புரிந்தார்கள். குறிப்பாக கதாநாயகன் எஸ். எம். ஏ. ஜபார் எத்தனை லாகவமாக நடித்தார். அவருடைய பேச்சு, நடை, பார்வை, செயல் ஒவ்வொன்றும் பாத்திரத்துக்கு உயிரும், பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு உணர்வும் ஊட்டியதை நினைக்கும் போது அவரை சாதாரண பயில் முறை நடிகர் என்று மட்டும் சொல்லிக் கொள்ள மனம் இடந்தரவில்லை.

எழுத்தாளர் பாகமேற்று நடித்த வீ. பீ. எம். காசிமும் நெஞ்சை விட்டு அகல மாட்டார். கணீர் என்ற பேச்சு; சலசலப்பு இல்லாத அமைதியான நடிப்பு. அது அழகு தான்.

## கதாநாயகி கலாராணி

கதாநாயகி கலாராணியை "இன்பக் கனவு" என்ற நாடகத்தில் முன்னர் பார்த்தபோது அவர் திறமைசாலி —முன்னுக்கு வரக்கூடியவர் என்றவாறு அபிப்பிராயம் தெரிவித்தோம். அதைஅப்படியே மெய்ப்பித்து விட்டார் கலாராணி. கச்சிதமான நடிப்பு அவருடையது. கலங்கும் கட்டங்களில் அவர் அதிகம் துலங்குகிறார். அவருடைய குரல் அதற்குப் பெரிதும் துணை புரிகிறது.

கதாநாயகியைக் கொலை செய்ய வந்து தாமே கொலையுண்டு போன பாலசிங்கமாக வந்த திரு கே. துரைசிங்கம் அவ்வளவாக சோபிக்க வில்லை.

## 'குட் கோயிங்'

இன்ஸ்பெக்டர் பாகமேற்று நடித்த பி. எம். முஸ்தபா அடிக்கடி 'குட் கோயிங்' போட்டார். ஆனால் திறமை உள்ளவராக இருந்த போதிலும் அவருடைய நடிப்பு அன்று 'குட் கோயிங்'காக அமையவில்லை. அதற்கு அவரை முழுக்க முழுக்க குறை சொல்வதற்கும் இல்லை. காரணம் நாடகத் தயாரிப்பாளர்களால அவர் அந்த நிலைக்கு ஆளாக்கப் பட்டார்.

## சிறு குறைபாடு

துப்பறியும் நாடகத்திலே இன்ஸ்பெக்டர் தப்புத் துலக்கக் குறுக்கிட்டதோடு விறுவிறுப்பிலே 'இடி' விழுந்து விட்டது. முதலாவதாக, கொலை சம்பந்தமாக

(13-ம் பக்கம் பார்க்க)







இலங்கை வானொலி தமிழ்ப் பகுதியினர், தமிழ்ப் புதுவருட தினத்தை யொட்டி நடாத்திய, "கோலாகலம்" என்ற விசேட சிறுவர் போட்டி நிகழ்ச்சியில், நடிப்புப் போட்டியில், வீரபாண்டிய கட்டபொம்மனாக நடித்து முதற் பரிசு பெற்ற செல்வன். ரவீந்திரநாதன் சொக்கநாதன் இங்கு தாம் பெற்ற பரிசுடன் காணப்படுகிறார்.

—படம்: சொ. விமலநாதன்

நாடக விமர்சனம்:

# யார் குற்றம்?

கொழும்பு ஸ்ரேயல் கல்லூரி நாடக சங்கத்தினரின் இவ்வாண்டுத் தமிழ் நாடகம் "யார் குற்றம்?" கடந்த 8-ந் தேதி நடித்துக் காட்டினார்கள்.

பழக்கியவர் அதாவது நட்டுவாங்கம் செய்தவர் நாடகத் துறையில் பழுத்த பிரமுகர் திரு. சண்முகநாதன் என்றாலும் நடித்தவர்கள் கல்லூரி மாணவர்கள் ஆகையால தொழில் முறை நடிகர்களிடம் எதிர்பார்ப்பதையெல்லாம் இவர்களிடம் எதிர்பார்க்க நியாயமில்லை. கல்லூரி நாடகம் நல்ல படியாக நடந்தது என்று சொல்லாம்.

## நாடக உருவம்

பிரிந்து வாழும் பெற்றோரால் பிளவுபடும் ஒரு குடும்பம்; அக் குடும்பத்தில் மேலும் குழப்பத்தை ஏற்படுததுகிறன் வம்பளந்து வயிறு வளர்க்கும் முத்தையன்; இதன் விளைவு கொலை முயற்சி; இது யார் குற்றம்? —இதன் விளக்கம் தான் நாடகம். மதிநகையானின் கருத்து, கதை, வசனம். இன்றைய சமூகத்துக்கு வேண்டிய நல்ல கருத்து, அருமையான கதையாகப் பின்னப்பட்டு சோர்வு தட்டாத வசனங்களில் சுவைபடச் சொல்லப்பட்டது.

## நல்ல நடிப்பு

நடிப்பு என்று சொல்லும் போது எல்லோருந் தான் நடித்தார்கள். ஆனால் வம்பளக்கும் முத்தையனாக வந்த மதிநகையான் மட்டுமே எது வித இடர்ப்பாடும் இல்லாமல், நடிக்கிறோம் என்ற எண்ணமே அற்றவராய் இயற்கையாக நடித்தார். கைதேர்ந்த தொழில் முறை நடிகர்களுக்கு உரிய திறமை தமக்கு இப்போதே உண்டு என்பதை அவர் தமது நடிப்பால் உணர்த்தினார்.

## குழறல்

இன்ஸ்பெக்டர் ஜெயகுமார் முதலிருந்து கடைசி வரை குழறினார்; கொதித்தார். எவ்வளவு தான் நெஞ்சில் வைராக்கியம் இருந்தாலும் ஒரு விநாடியாவது மனுஷன் சாந்தமாக இருக்க மாட்டாரா, அமைதியாகப் பேசமாட்டாரா என்று அங்கலாய்த்தவர்களுக்கு ஏமாற்றம்.

ஏனைய பாத்திரங்களும் பேச்சுக்களை ஒப்பிப்பதற்குப் பதிலாக இயற்கையாகப் பேசியிருந்தாலோ என்ற எண்ணம் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்லூரி நாடகம் கல்லூரி நாடகந் தான். ஆனால் ஒன்று. கொழும்பு ஸ்ரேயல் கல்லூரி நாடக சங்க மாணவர்கள் அசாத்திய திறமை உள்ளவர்கள் என்பது தெரிகிறது. அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

—கே. கே. ஆர்.

நாடக விமர்சனம்:

# கண்ணா! நீ என் அண்ணா!

செங்குந்த இந்துக் கல்லூரி மாணவ மன்றத்தின் 'சுடரொளி' பத்திரிகை வெளியீட்டு விழாவின் போது "கண்ணா! நீ என் அண்ணா!" என்ற நாடகம் நடைபெற்றது. அரிய கருத்துக்களை அழகாக நடித்துக் காட்டினர் மாணவர்!

## கதை

சண்முகம்பிள்ளை; மைத்துனனின் பொருளை அபகரித்தாலும் அவருடைய மகன் கண்ணனை வளர்த்துப்படிக்க வைக்கின்றார். அவருடைய மகள் சாந்தா, சமூக சேவா சங்கத்தில் 'சங்கிலி' அரசனாக நடித்த சந்திரன்மேல் காதல் கொண்டதை யறிந்த பிறகே கண்ணன் சாந்தா மேல் தனக்கிருந்த காதலை வெளிப்படுத்தாத குற்றத்தை உணர்கின்றான். அவனுக்குச் சந்திரன்மேல் ஏற்பட்ட பொறாமை பகைமையாக வளர்கிறது. இதற்கிடையில் சண்முகம்பிள்ளை தற்கொலை செய்துகொள்ள சந்திரனாலேயே கொல்லப் பட்டார் என்று சந்திரன் மேல் குற்றம் சாட்டப்படுகின்றது. ஈற்றில் கண்ணன் தாமே குற்றத்தை ஏற்று சந்திரனையும் சாந்தாவையும் இணைத்து வைக்கின்றான். வாழ வாழ்த்துகின்றான்.

## நடிப்பு


சந்திரன், மலையே எதிர்ந்தாலும் மாறுபட்டமடையாது எதையும் நிதானத்துடன் செய்கின்றார். இப்பாகத்தில் தோன்றிய செல்வன் பத்மநாதன் சங்கிலி அரசனாக நடிக்கும்பொழுது அந்நியரிடம் கொண்ட அருவருப்பை அறுத்துப் பேசி அம்பலப்படுத்துகின்றார். பின் பொய்க் குற்றம் சுமத்தப்பட்டபொழுது பதறாமல் முகபாவத்தாலேயே எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார்.

கண்ணனாக நடித்த செல்வன் பரராஜசிங்கம் ஒரு கணம் பொறாமைக்கிடம் கொடுத்தாலும் இறுதியில் திருந்தி தான் வாழாவிட்டாலும் பிறர் வாழப் பயன் பெறுவான் தமிழன் என எடுத்துக்காட்டுகின்றார் இரு வாலிபர்களுடைய அன்பினிடையே அவஸ்தைப் படும் சாந்தா (செல்வன் வைத்திலிங்கம்) அன்பின் தத்துவத்தை உணர்த்துகின்றார்.

## சிரிப்பு

செல்வன் தம்பித்துரை செவிட்டுச் சண்முகம்பிள்ளையாகவும், செல்வன் மனோகரன் பணியாள் பழனியாகவும் தோன்றி யாவரையும் சிரிக்க வைத்தனர். இன்னும் அருள் யார்க்கத்தைப் போதித்த அடிகள் அருட்பெருஞ்சோதியும், குற்றவாளியை கண்டுபிடிக்க [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)



பட விமர்சனம்:

# அல்லி பெற்ற பிள்ளை

நல்லவளான அல்லி (பண்டரிபாய்) பெற்ற பிள்ளை (எஸ். எஸ். ராஜேந்திரன்) சகவாச தோஷத்தால் கெட்டவனாகி விடுகிறான். குடி அவன் கண்களை மறைக்கிறது. பெண் வேட்டையில் ஆரம்பித்துவிடுகிறான். தயவு தாட்சண்யமின்றித் தாய் அவனைத் தண்டித்து நல்வழிப்படுத்துகிறாள். இதுதான் "அல்லி பெற்ற பிள்ளை" படம். கிட்டத்தட்ட இந்தியில் வெளி வந்த "மதர் இந்தியா" என்ற படத்தைப் போன்றது. கருத்தால் அப்படியே தவிரச் வேறு வகையில் அல்ல.

சகஸ்ரநாமமும், பண்டரி பாயும், ராஜேந்திரனும் [illegible] மியும் கருணாநிதியும் ஜோடிகளாக நடிக்கிறார்கள். சாரங்கபாணி பணத்தாசை பிடித்த அப்பாவாக வருகிறார். சாயிராம், ஏழுமலை, குண்டு கருப்பையா முதலான நகைச்சுவை நடிகர்களும் தலையைக் காட்டுகிறார்கள். டி. என் சிவதானுவும் வண்டிக்காரனாக வருகிறார்

படத்திலே கருத்துச் சிறப்பும், நட்சத்திரக் குவியலும் இருந்தும் எதிர்பார்க்கும் அளவு விறுவிறுப்பு இல்லாமல்போனது ஒரு குறை தான். ஆயினும் அதை இனிமையான பாடல்கள் வந்து ஒருவாறு மறைக்கின்றன. பத்மினி பிரியதரிசினி நெளிந்து ஆடி எல்லோரையும் ஆசுவாசப்படுத்த முயல்கிறார்.

கொழும்பு செல்வமஹால் தியேட்டரில் இப்படம்காண்பிக்கப்படுகிறது.

# எம். என். எம். புரொடக்ஷன்ஸ் கலை விழா

எம். என். எம். புரொடக்ஷன்ஸாரின் கலை விழா கடந்த வாரம் கமலா மோடி மண்டபத்தில் நடைபெற்றது. நாடகத்தில் பல முறை நடித்து அனுபவம் பெற்ற பல நடிகர்கள் கலை விழா நாடகத்திலும் தோன்றினார்கள். ஆனால் நினைவிலே நிற்கும் அளவுக்கு அவர்கள் 'வேலை' போடவில்லை. நாட்டிய நிகழ்ச்சிகள் இடையிடையே நடைபெற்றன. தமுக்கு மினுக்கு நடனந்தான் என்றாலும் பார்க்க அலுக்கவில்லை. நிகழ்ச்சிகளை முழுமையாக நின்று கவனிக்கத்தான் முடியவில்லை. காரணம் கமலா மோடி மண்டபத்தின் அமைப்பு அப்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தா கதம்ப நிகழ்ச்சி





கொழும்பு விவேகானந்த வித்தியாலயப் பெற்ருேர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் சமீபத்தில் நடைபெற்றன. மேற்படி விழாக்களில் நாடகம், நாட்டியம், பாட்டு முதலான கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சியையும் செல்வி சொக்கநாதன் நடனமாடுவதையும் மேலே யுள்ள படங்களில் காணலாம்.

—படம்: சொ. விமலநாதன்.

## குலத் தொழில்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குக் கூட்டிச் செல்கிறேன். நமது குலத் தொழில் செய்வதில் என்ன வசை? குழந்தைகளைக் கட்டாயம் படிக்க வைக்க வேண்டும். ஆனல் ஏதாவதொரு கைத் தொழிலையாவது அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். எதிர்காலத்தில் உத்தியோகத்தை எதிர் பார்ப்பது இலவுகாத்த கிளிபோலாகிவிடும். கைத்தொழிலுக்கு நிகர் வேறென்ன இருக்கிறது? உத்தியோகமா? அதுதான் சுத்த அடிமைத் தொழில். போடா வெளியே என்ருல் தம்பி மொட்டையைத் தடவிக் கொண்டு வெளியே வர வேண்டியதுதான்."

### இது அநியாயம்

"மட்டக்களப்பிலே மீன் தட்டுப்பாடு சில வேளைகளில் ஏற்படுகிறதே, அதைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?"

"என்ன கூற இருக்கிறது! ஐஸ் போட்டு அனுப்புகிறவர்கள் செய்யும் அநியாயம் தான். இங்கே உள்ள தேவையைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை! நம் நாட்டுத் தேவைபோக மீதியை அனுப்பவாம்தானே! இப்படியான செயல்களால்தான் வாழ்க்கைச் செலவு கட்டுக் கடங்காமல் போகிறது. அரசாங்கமும் அதே மாதிரி. யாரைக் குறை சொல்வது!"

## கண்ணு! நீ என்..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய வழக்கறிஞர்களும் தங்கள் பாகங்களைச் சிறப்பாகவே நடித்தனர்.

கதை, வசனம், பாடல்கள்: சிற்பி.

நட்டுவாங்கம் (டைரக்ஷன்): ம. சண்முகலிங்கம் பி. ஏ.

மேடை அலங்காரம் காட்சி ஜோடனைகள் நன்ருக இருந்தன. நிழற் காட்சி மூலம் கனவுக் காட்சியைக் காட்டியதும் மெச்சத்தக்கது.

—பத்மா

## திருமலை செய்திக் குறிப்புகள்

"வைத்தியத் தொழிலிலும் ஆசிரியத் தொழிலிலும் தான் ஓர் சமூகத்தின் முன்னேற்றம் தங்கியுள்ளது" எனப் பண்டிதர் ஐ. சரவணமுத்து தம்பலகமப் பகுதி வைத்திய அதிகாரி சு. கனகரத்தினத்துக்கு அளித்த பிரிவுபசாரத் திற்குத் தலைமை வகித்து பேசுகையில் கூறினர்.

★

திருகோணமலை 10-ம் வட்டாரத்திலுள்ள கல்வியறிவில்லா மக்களுக்கு கல்வி புகட்டுமுகமாகவும், குழந்தைகளின் கல்வி அறிவினை விருத்தி செய்யும் முகமாகவும் அவ்வட்டாரத்திலுள்ள பெருமக்களின் முயற்சியிலுண்டான விவேகானந்த கழகத்தினர் ஓர் இரவுப் பாடசாலையினை சமீபத்தில் தொடங்கியுள்ளனர்.



பாலசுந்தரம்—பத்மாவதி

வீரகேசரி நிருபர் திரு. பாலசுந்தரம் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த செல்வி பத்மாவதியை அணிமையில் திருமணம் செய்து கொண்டார். வாழ்க மணமக்கள் வாழ்க நீடூழி.

## [ப]டியல் 'எம்'...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தவர்களுக்கு திரும்பத் திரும்ப அவற்றை மீட்டுக் கொண்டு இருந்தால் என்ன ஆகும்? அலுப்பு வருமா? ரஸிப்பு வருமா? அதுமட்டுமல்ல; குறுக்கு விசாரணைக் கட்டங்களும் அளவுக்கு அதிகமாகி விட்டன கொலை நடந்ததை மர்மமாகவைத்துக்கொண்டு குறுக்கு விசாரணையில் நீட்டி முழக்கினல் அவ்வளவு தூரம் ரஸனை பாழடிக்கப் படமாட்டாது. இங்கு நிலைமை அப்படியில்லையே!

### பலே ஜோர்

இந்தக் குறைபாடு ஒன்றைத் தவிர நாடகம் பலே ஜோர். ஒரே காட்சியமைப்பில் எல்லா நிகழ்சிகளும் குறிப்பிடத்தக்க அளவு இடையீடு இல்லாமல் நடந்து முடிகின்றன. புதுமை அரங்கினரின் புது முயற்சி ஈழத்து நாடகத் துறை வளர்ச்சிக்கு நல்ல 'படி' அமைத்த மாதிரி என்று துணிந்து கூறலாம்;

—கே. கே. ஆர்.


5-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ஜெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) றீகல் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)

நெல்ஸன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை) இம்பீரியல் (மட்டக்களப்பு)

ஆகிய திரைகளில்

சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா-வசுந்தராதேவி

வனஜா-எஸ். வி. சுப்பையா-சரோஜாதேவி-கே. ஏ. தங்கவேலு நடிக்கும்

இரும்புத் திரை

5-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கெயிட்டி (பண்டாரவளை) றேயல் (நீர்கொழும்பு) அசோக்கமாலா (மாத்தளை) தாஜ்மஹால் (இரத்தினபுரி) இம்பீரியல் சந்திரலோக (கம்பளை) மிட்லண்ட் (நாவலப்பிட்டி)

ஆகிய தியேட்டர்களில்

கல்யாணிக்குக் கல்யாணம்

ராஜேந்திரன்-ராஜம்-தங்கவேலு-மைனுவதி-பாலையா நடித்தது






மகத்தான 4-வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது

கூனன் நிமிர வேண்டும்!

குருடன் பார்வை பெறவேண்டும்!

கோழை வீரனுக வேண்டும்!

இந்தக் கொள்கை முழங்க

சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)

நடிப்புக்கோர் திலகமெனத் திகழ்கின்ற செம்மல் நாடெங்கும் கலைத்திறத்தால் புகழ் மணக்கும் பொற் பாவையுடனே பேராற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும் பாராட்டு பெறுகின்ற பான்மையிலே நடித்து.........தமிழ் கொழிக்கும் எழுத்தாலே தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே பட அமைப்பு முறை—படப்பிடிப்புமுறை நனிசிறக்க மேன்மைமிகு மேகலா தருகின்ற திரை விருந்து.

குறவஞ்சி

கதை வசனம்: மு. கருணுநிதி

டைரக்ஷன் : காசிலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எழுத்து எழுதிப் பழகவேண்டிய முறை

## மாணவருக்கு ஒரு வார்த்தை

வாசிக்கக் கற்றுக்கொள்வது போன்று எழுதக் கற்றுக் கொள்வதும் கல்வியின் குறிக்கோள் ஆகிறது. மாணவன் ஒருவன் முதலில் சிலேட்டின் மீது எழுதிப் பழகுகின்றான். அடுத்தப் படியாகக் காகிதத்தில் பென்சிலைக் கொண்டு எழுதிப் பழகுகிறான். மூன்றும் படித்தரத்தில் அவன் காகிதத்தின் மீது பேனாவைக் கொண்டு எழுதிப் பழகுகிறான். தனக்கு வசதியான ஏதேனும் ஒரு முறையில் எழுத்தை வரைந்து விட்டால் போதாது. எப்படி உட்கார்ந்திருப்பது? சிலேட்டை அல்லது காகிதத்தை எப்படி அமைப்பது? எழுதுகோலைக் கையில் எப்படிப் பிடிப்பது? முகத்துக்கும் எழுதும் காகிதத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்—ஆகிய விஷயங்களையெல்லாம் மாணுக்கன் அறிந்திருக்க வேண்டும்.

அறிந்து கொண்டதிற்கேற்றபடி அவன் எழுதிப் பழக வேண்டும் ஐந்து விரல்களுள் சுண்டு விரலும் மோதிர விரலும் சிலேட்டின் மீதோ காகிதத்தின் மீதோ மடங்கிப் பதிந்திருக்க வேண்டும். எழுகோலைக் கட்டைவிரல், சுட்டு விரல், நடுவிரல் ஆகியவைகளுக்கிடையில் பற்றிப் பிடித்திருக்க வேண்டும். இந்த மூன்று விரல்களும் முக்கோணமாயமைந்த கோபுரம் போன்று முன்னுக்கு நீட்டிக்கொண்டிருக்க வேண்டும். அவைகள் காகிதத்தின் மீது முட்டாதிருப்பதால் முன்னுக்கும் பின்னுக்கும் நீட்டுதற்கும் குறுக்குதற்கும் இயலுகிறது. பேனாவைப் பற்றிப் பிடிப்பதில் சிரமம் ஒன்றும் இருக்கலாகாது. சுட்டு விரலை வில் போன்று வளைத்து பேனாவை அழுத்திப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை.

சில மாணுக்கர்கள் செய்வது போன்று சுட்டு விரலைத் தனியாகப் பிரித்து கட்டைவிரலின் அடிப்பக்கத்துக்கு அருகில் கொண்டு வர வேண்டியதற்கும் அவசியமில்லை. மூன்று விரல்களின் நகங்களும் ஒரு புஷ்பத்தின் இதழ்கள் போன்று பக்கம் பக்கமே இருக்க வேண்டும். புஷ்பத்தின் மகரந்தக் காம்பு இதழ்களுக்கிடையில் வெளியே நீட்டிக்கொண்டிருப்பது போன்று பேனாவானது மூன்று நகங்களுக்கும் வெளியில் காகிதத்தைத் தொடும் அளவுக்கு நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். இது சரியாய் அமையுங்கால் பேனாவை எப்பக்கத்தில் வேண்டுமாலும் காகிதத்தின் மீது விளம்பி எழுத்தை வேண்டியவாறு அமைக்கலாம்.

மாணுக்கர்கள் நெடுநாளைக்கு ஊற்றுப் பேனாவை உபயோகப் படுத்தலாகாது. எழுத்து முறையாக அமைவதற்கு ஊற்றுப் பேனா உதவாது. எந்த மொழியில் எந்த எழுத்தை எழுதினாலும் மேல் நோக்கிப் போகிற கோடு மெல்லியதாகவும் கீழ் நோக்கி வருகிற கோடு தடித்ததாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதே எழுத்தின் வடிவம் பொருத்தமானதாகிறது. கட்டைப் பேனாவில் எஃகு முனை (nib) செருகி மையை அப்போதைக்கப்போது தோய்த்து எடுத்து எழுதிப் பழகுவதே முறை. எழுத்தமைப்புக்கும் மன அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஒரு மனிதனுடைய எழுத்தைப் பார்த்து அவனுடைய மனப்பான்மையைக் கண்டறிந்து கொள்ளுவதற்கான கலைஞானம் ஒன்று உண்டு. ஆனால் ஊற்றுப்பேனா எழுத்து அத்தகைய ஆராய்ச்சிக்கு உதவாது இன்றைக்கு ஊற்றுப் பேனாவைக் கொண்டு எழுதுகிற பழக்கம் மாணுக்கர்களுக்கிடையில் பெரிதும் இருந்து வருகிறது. கல்லூரிப் படிப்புக்குப் போகும் வரையில் ஊற்றுப் பேனாவை உடயோகப்படுத்தாதிருப்பதே நல்ல பயிற்சி. பம்பாய் அரசாங்கம் அத்தகைய சட்டத்தையே பள்ளிக்கூடங்களுக்குக்கிடையில் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கின்றது. தன் இயல்புக்கேற்ப எழுத்தை நன்றாக எழுதிப் பழக விரும்புகிற மாணுக்கன் நெடுநாளைக்கு ஊற்றுப் பேனாவை உபயோகப்படுத்தாது இருந்து பழகுவானாக.

மாணுக்கர்களில் பலபேர் மேஜை அல்லது சாய்வு மேஜையின் மீது சாய்ந்துக் கொண்டு எழுதுவதுண்டு. தங்கள் உடலின் பாரத்தை ஒரு பகுதி மேஜையின் மீது வைப்பது அவர்களுடைய வழக்கம். அது பொருந்தாத வழக்கமாகும். எழுதும் பொழுதெல்லாம் நிமிர்ந்தே உட்கார்ந்திருக்க வேண்டும். உடலின் பாரம் முழுதையும் முதுகெலும்பே தாங்கிக் கொண்டிருக்க வேண்டும். உறுதியான மனிதன் ஒருவனுக்குத் தன் உடல் பாரத்தைத் தானே தாங்கும் சக்தி இருக்கிறது. உறுதியற்ற மனிதனுக்கோ பற்றுக் கோடு ஒன்று இல்லாது உட்காரவோ நிற்கவோ இயலுவதில்லை நிமிர்ந்து தன் முதுகெலும்பையே சார்ந்து உட்கார்ந்திருக்க மாணுக்கன் கற்றுக்கொள்வானாக.

எழுதும் காகிதத்தை மேஜையின் மீது கீழும் மேலுமாகச் சாய்ந்து வைத்துக்கொண்டு வரிகளை எழுதும் பொழுது இடது கைப் பக்கம் கீழே துவக்கி வலது கைப்பக்கம் வரி இலேசாக மேல் நோக்கிப் போய்க் கொண்டிருக்கும். மாணுக்கர்களில் பெரும்பாலோர் செய்கிற தவறுதல் இது. காகிதத்தைத் தனக்கெதிரே கொஞ்சம் வலது கைப்பக்கம் நகர்த்தி சம கட்டமாக வைத்திருக்க வேண்டும். எழுதும் வரி கீழிருந்து மேல் நோக்கிப் போவதற்கு மாறாக ஒரே மட்டத்தில் இடது கைப்பக்கத்திலிருந்து வலது கைப்பக்கத்திற்கு வந்து கொண்டிருக்க வேண்டும். வீடு கட்டுதலில் சுவர்களை சம கோணத்தில் அமைப்பது போன்று காகிதமும் மேஜையின் மீது சமகோணத்தில் அமைந்திருக்க வேண்டும். மேஜையின் மீது உடல் தோயாது மாணுக்கன் மேஜைக்குச் சம கோணத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும். இப்படிப் பழகும் பயிற்சியே சரியான பயிற்சியாகிறது.

ஹாக்கி அல்லது கிரிக்கட் ஆடுகிற பொழுது அவ்விளையாட்டுக்குரிய குச்சியையோ, துடுப்பையோ தோன்றியவாறெல்லாம் கையாளுபவன் விளையாடத் தெரிந்தவன் அல்லன். விளையாடத் தகுதியற்றவனென்று அவனை விளையாட்டுக்கலை அறிந்தவர்கள் நீக்கிவிடுவார்கள். பேனாவைப் பயன்படுத்தி முறையாக எழுதிப் பழகுவது மாணுக்கனுக்கு அதை விட முக்கியமானதாகிறது. பேனாவையும் காகிதத்தையும் தன் உடலையும் சரியாக அமைத்து வைத்து எழுதிப் பழகாதவன் முறையாகக் கல்வி கல்லாதவன் ஆகிறான்.

எழுதிக் கொண்டிருக்கும் பொழுது தலையை இப்பக்கம் அல்லது அப்பக்கம் சாய்த்துக் கொண்டிருப்பதும் உதட்டைப் பொருந்தாத பலகோணல் வடிவங்களில் சுருட்டுதலும் பொருந்தாது. புகைப்படம் எடுப்பதற்கும் மாணுக்கன் இயல்பாக அமர்ந்திருந்து பழக வேண்டும். பல பள்ளிக்கூடங்களில் இது விஷயத்தில் கருத்தைச் செலுத்தாது இருந்துவிடுகின்றனர். முறையான கல்வியில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் எழுதும் பயிற்சியிலும் முழு கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். இம்முறைகளையெல்லாம் மாணுக்கர் ஓர்ந்து நன்றாக எண்ணிப் பார்த்து சரியான முறையில் எழுதிப் பழகுவார்களாக.

—தர்ம சக்கரம்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்.............................................

பாடசாலை.............................................

விலாசம்.............................................

.............................................

............................................. .............................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

வள்ளுவர் குரல் : 20

## தானமும் தவமும்

அறநெறியிலே பொருளீட்டி, அதனைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல், தமிழர் பண்பாகும்; இதைத் தானம் என்பர். இன்னொரு பண்பு தவம்; மனம், பொறிவழி சென்று கெடாது காத்தற் பொருட்டுச் செய்யும் நோன்பு முதலாயின.

தம்மைத் தூய்மை செய்தற்காக மேற் கொள்ளப்படும் தவமும், பிறர் துயர் தீர்க்கும் தானமும் ஆகிய இரண்டும் நல்ல பண்புகள். இவ்விரண்டு பண்புகளும் மக்களிடையே செழித்து வளர்வதற்கு உதவியாக இருப்பதூஉம் மழையே.

"தானம் தவம் இரண்டும்
தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்"

இவ்வுலகம் வியன் உலகமாக—பெரிய உலகமாக—இருப்பதனால் மட்டும், மக்கள் தானமும் தவமும் செய்துவிட மாட்டார்கள். அதற்கு, வானம் வழங்க வேண்டும். வானம் வழங்காதெனின்?—மழை பெய்யாது விடுமாயின்?—நிலமும் கடலும் வளங் குன்றுவதைக் கண்டிருக்கிறோம்; அஃதோடு மக்கள் மனத்தின் வளம் சுருங்குவதையும் காணலாம். வானம் வழங்காது நிலம் வறண்டு குளங்காய்ந்துபயிர் விளையாத போது, தானம் செய்வதெங்ஙனம்? தவந்தான் இயற்றுவதெப்படி? மக்கள், தம் உயர்ந்த பண்பைக் காப்பது தான் ஒல்லுமா?

மக்கள் பண்பிழந்து விட்டார்களே என்று அவர்களைப் பழிப்பதிற் பயனில்லை; மழை வளம் பொழிந்து, பொருள் வளம் நிறைந்து, மக்கள் மனவளம் அடையவில்லையே என்று தான் வருந்த வேண்டும்.

—பா. ஆறுமுகம்

## அவள் யார்?

மாலை நேரம். மணி நாலரையிருக்கும். சாலையோரமாக வெகு விசையாக நடந்து கொண்டிருந்தேன். வாலைப் பருவமானவள். அன்று காலையிலேயே எங்கோ என்னை விட்டுப் பிரிந்து விட்டாள். எனக்குப் பிடித்த அளவில் அழகானவள். உடலுறுதியுள்ளவள். பொன் நகை வேண்டிய இடங்களில் அணிந்துகொண்டிருப்பாள். என் நேரமும் புன்நகை புரிந்த வண்ணமேயிருந்தாள். ஆகா! அவளழகுருவம் அப்படியே என் மனக்கண் முன்னே நிற்கிறது.

அவளது உருவம் முக்கியமில்லை. அவள் என்னிடமிருந்து ஆற்றிய சேவையே பெரிது. ஐந்து வருடங்கள் என்னுடனிருந்து கடமையாற்றியிருக்கிறாள். சா! எத்தனை குணநலம். சிலர் இவ்வினத்தைச் சேர்ந்தோர் தாங்கள் கடமையாற்றும் போது வாந்தியெடுப்பார்கள். நீரழிவு நோயிருக்கும். ஆனால் இவளிடமோ இம்மாதிரி வருத்தங்கள் ஒன்றும் வருவதில்லை.

இவளது இனம் நல்ல பண்புடைய இனம்: இவளது குண நலம் இவளைப் பாவிப்பவர்களின் பாலதே. சில கெட்டவர்கள் இவளைப் பாவித்துச் சில கெட்ட விடயங்களைச் செய்கிறார்கள். நல்லவர்கள் இவள் மூலம் நாடு நலம் பெறக் கூடிய—முன்னேற்றக் கூடிய செயல்களைப் புரிகிறார்கள். இப்படிப்பட்ட சேவைச் செல்வியாயிருந்தாளே! அவள் யார் தெரியுமா? என் அன்புப் பேனாவதியம்மாள். பேனாவதியே நீ வாழ்க! உன் சேவை வளர்க!

—ச. தவராசா
ஈச்சந்தீவு

# கல்வியின் பெருமை

கல்வியானது வாழ்க்கையை செவ்வனே நடத்த துருவ நட்சத்திரம் போன்றிருக்கிறது. அறிவைத் தேட வேண்டுமென்றாலும் கல்வி அச்சாணி போன்றிருக்கிறது. ஆகவே நாங்கள் "கல்வியே கருந்தனம்" என்று நினைத்து நாம் கற்றல் வேண்டும். "பிச்சைபுக் காயினும் கற்கை நன்றே" என்று பொன்மொழி கூட கல்வியின் பெருமையைப் பற்றிச் செப்புகிறது.

கல்வியை நாம் இளமையிலேயே நன்றாய் கற்க வேண்டும். "இளமையிற் கல்" என்று ஔவையாரே கூறிப் போந்தார் நாம் இளமையில் கல்வியிற் கூடிய கவனம் எடுக்கா விட்டால் "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பொன்மொழிக் கிணங்க, பின்பு கல்வி கசப்பாகத் தோன்றும்.

கல்வியை நாங்கள் படித்தாலும், அதன்படி ஒழுகுபவர்கள் மிகச் சிலர். "படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோவில்" என்ற பொன் மொழிக் கிணங்க, நாம் கல்வியைக் கற்றாலும் அதன்படி ஒழுகுவதில்லை. "கற்கக் கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்று பொய்யா மொழியாரும் கூறுகிறார். மாணவர்களே நாங்கள் கற்ற கல்விக்கேற்றபடி நடந்தால் எங்கள் வாழ்க்கை "கடலில் காற்றுடன் செல்லும் ஓடம் போன்று" முன்னேறிக் கொண்டு வரும்.

கல்வி என்றால் புத்தகப் படிப்பன்று. அறிஞரின் அறிவு நூல்களும், பத்திரிகைகளும் படிக்க வேண்டும். அப்போது தான் கல்வியின் ஒருபடி தாண்டி விட்டோம் என்று எண்ணலாம். புத்தகப்படிப்பாளர் கல்வி கற்காதவருக்கு ஒப்பாவார். ஆகவே நாங்கள் கல்வி கற்க பத்திரிகை, நூல்கள் படிக்க வேண்டும்.

கல்விக்கோ எவ்வளவு பெருமையுண்டு. கல்வியானது இரு விழிகள் போன்றது. தாய் தந்தையர் போன்றது. துணைவன் போன்றது. தோழன் போன்றது. முதுசம் போன்றது. இன்பம் போன்றது என்று தங்கத் தாத்தாவாகிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

"கல்வியே இரு விழி
கல்வியே இரு நிதி
கல்வியே துணைவன்
கல்வியே தோழன்
கல்வியே முதுசொம்
கல்வியே இன்பம்
கல்வியே சிறப்பு
கல்வியே காவல்"

என்ற இந்தப் பாட்டினால் கூறுகிறார். "கல்லாத மாந்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமேல் மாகாண தமிழாசிரியர் சங்கம்

வடமேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் ஆருவது வருடாந்த மகாநாடு கடந்த 9—4—60-ல் சலாபம் அர்ச் மரிய நாயகி தமிழ் ஆண்பாடசாலை மண்டபத்தில் தலைவர் சங். சகோதரர் டப்ளியு. எஸ். பீரிஸ் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் டப்ளியு. வியாண்டாலோவ் தமிழ் மொழி வாழ்த்துக்கீதம் பாடியபின்; தலைவர் தம் முன்னுரையில் "ஆண்டவனுல் அருளப்பட்ட ஆசிரியர் பணியைத் தங்களிடம் நம்பியொப்படைக்கப்பட்ட குழந்தைகட்கு சிறந்த அறிவு ஒழுக்கங்களை யூட்டித் தூய்மைப்படுத்துவதுடன், பாடசாலைகளிலே மாணவர் தொகையைக் கூட்டி வருங்கால ஆசிரியர்கட்குத் தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் ஆசிரியர்கள் முயலவேண்டுமெனக்" குறிப்பிட்டார்.

# கழகச் செய்திகள்

அடுத்துக் கௌரவ செயலாளர் ஆசிரியர் திரு. வி. எஸ். பிள்ளையவர்கள் தம் வரவேற்புரையில் "தனிச் சிங்களச் சட்டத்தால் கடந்த காலங்களில் தமிழினம் தமிழ் மொழி, கலை, கலாச்சாரங்கள் தாழ்த்தப்பட்டுத் தன்மானம் இழந்திருந்த சந்தர்ப்பத்திலும், தமிழாசிரிய சமுதாயம் தனது தொழிற் சங்கங்களின் மூலம் தலைநிமிர்ந்து நின்று உரிமைக் குரலொழுப்பி ஆட்சியாளருடன் போராடிய காரணத்திஞலேயே தொழிற் சங்க உரிமைகளும், வேதன உயர்ச்சியும், வேறுசலுகைகளும் கிடைக்கப் பெற்றதோடு; பாடசாலை மாணவரின் கல்வி வசதிகளும் ஓரளவு அபிவிருத்தியடைந்துமிருக்கின்றன. ஆட்சி மன்றத்தில் தமிழர் சமுதாயத்திற்கு நல்ல தோர் எதிர்காலம் வந்து கொண்டிருக்கின்ற இச் சந்தர்ப்பத்திலே தமிழாசிரியர்கள் தம் உரிமைகள், சலுகைகளைப் பெற்றுக் கௌரவத்தோடு வாழ்வதற்கு முன்னரிலும் அதிதீவிரமாக நின்று ஊக்கத்தோடும், ஒற்றுமையோடும் உழைக்க முன்வர வேண்டுமெனக்" குறிப்பிட்டார்.

பின்னர் புலவர் வித்துவான் திரு. இ. சி. சோதிநாதன் நிகழ்த்திய சொற்பொழிவில் "ஆசிரியர்கள் வெறும் பாடங்களைப் படிப்பிப்பதுடன் மட்டும் நின்றுவிடலாகாது. மாணவர்க்குச் சன்மார்க்கக் கல்வியையும் அன்பு சமத்துவ உணர்ச்சிகளையும் ஊட்டல் அவசியம். அப்பொழுதுதான் நாட்டின் எதிர்கால நற்பிரசைகளை ஆக்கிய பெருமை நம்மைச் சாரும். ஆசிரியர்களின் பணி மகத்தான விலை மதிக்க முடியாதது. அறிவையும் ஒழுக்கத்தையும் குழந்தைகளிடையே அபிவிருத்தி செய்வதும் தாய்மொழியை அரியாசனம் ஏற்ற ஆவன செய்வதும் அவர்கள் தம் பெருங் கடமையாகும்" எனக் குறிப்பிட்டார்.

பின், செயலாளரால் கடந்த வருடப் பொதுக் கூட்ட அறிக்கையும், ஆண்டு நிர்வாக அறிக்கையும் தனதிகாரியவர்களால் வரவு செலவு அறிக்கையும் வாசித்துக் காட்டி அங்கீகரிக்கப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற புதுவருட உத்தியோகஸ்தர் தேர்தலில் சங். சகோதரர் டப்ளியு. எஸ். பீரிஸ் தலைவராகவும், திரு. எம் ரேமல் பெர்னேண்டு, செல்வி அணிரெட்றிக்கு உபதலைவராகவும், திரு. வீ. எஸ். பிள்ளை செயலாளராகவும், திரு டப்ளியு. என். வியாண்டர்லோவ் உபகாரியதரிசியாகவும், திரு. ஜே. அந்தோனிக்குறூஸ் கணக்குப் பரிசோதகராகவும், திருவாளர்களான: எஸ். அந்தோனிப்பிள்ளை, ஜே. சிப்பிரியான் குறூஸ், தமியாண்டபரரா, எஸ். அன்றனி பெர்ணேண்டு, ஸ்ரீமதி ஏ. றீட்டா பெர்ணேண்டு ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்வரும் முக்கிய தீர்மானங்கள் உட்படப் பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறின.

(1) சர்வகலாசாலைக்கு தமிழ் மாணவரைச் சேர்க்கும் விஷயமாக மேல்—வடமேல் மாகாணங்களிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மாணவர்க்கு விசேஷ சலுகைகாட்டும்படி கனம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுதல்.

(2) தமிழாசிரிய கலாசாலைகட்கு மாணவரைச் சேர்க்கும் விஷயத்தில் மேல்—வடமேல் மாகாணங்களிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களில் 30 வீதத்தினராவது தேர்ந்தெடுக்கப்பட விசேஷ சலுகை காட்டும்படி கனம்கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுதல்.

(3) மேல், வடமேல் மாகாணச் சிறுபான்மைத் தமிழ் மாணவரின் பயிற்சி வசதிக்காக முன்னர் நீர்கொழும்பு போளவளாவையிலிருந்த தமிழ் ஆசிரிய கலாசாலையை மீண்டுந் திறக்க ஏற்பாடு செய்யும்படி கனம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுதல்.

—

## ஆனந்தா இளைஞர் சங்கம்

தாவடி ஆனந்தா இளைஞர் சங்கத்தாரால் சங்க மண்டபத்தில் புது வருடம் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இணுவில் சைவ மகாஜன வாசிகசாலை ஆசிரியர் திரு. க. கந்தசாமி பிரதம பேச்சாளராகவும் திரு. சி. சின்னத்துரை பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர் திரு. த. கந்தையா ஆசிரியர் கூட்டத்திற்கு தலைமை தாங்கினுர்.

—

## மாவணர்தேர்ச்சிச் சங்கம்

கொழும்பு முகத்துவாரம் கதிட்றல் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் தேர்ச்சிச் சங்க மாதாந்தரப் பொதுக் கூட்டமொன்று கடந்த 7-4-60ல் சங்கத் தலைவர் திரு. நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவிகள் பாடிய பாடசாலைக் கீதத்திற்குப் பின் மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியை திருமதி ஏ. எட்வேட்ஸ் "விடுமுறை நாட்களும் மாணவரும்" என்னும் பொருள்பற்றிப் பேசிய பின்னர் ஒவ்வொரு வகுப்பிலும் முதலாம், இரண்டாம், மூன்றும் பிள்ளைகளது அறிக்கைப் பத்திரத்தை வழங்கினுர்.

அடுத்து, சங்க மாணவ மாணவிகளால் இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செல்வன் பாலகிருஷ்ணனும், செல்வி கனகம்மாவினதும் நடனம் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து செல்வன் எச். அசன் சரீப், செல்வன் எம். பிச்சைக்கண்ணி ஆகியோரது குறிப்புரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

—

## விபுலாநந்த மகளிர் மாநாடு

திருமலை விபுலாநந்த மகளிர் மாநாடு அணிமையில் சிவன் கோவில் முன்றலில் அமைந்த சிவன் அரங்கில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

செல்வி கமலாதேவி மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசினுர்.

திரு பா. நேமிநாதன், திருமலை நகராண்மைக் கழகத் தலைவர், வரவேற்புரை நல்கினுர்.

திருமலை பாராளுமன்றப் பிரதிநிதி திரு என். ஆர். இராஜவரோதயம் தமிழ்ச் சமூகத்திற்கு, பெண்களின் சேவை மிகவும் முக்கியம் எனக் குறிப்பிட்டார்.

மூதூர் முதலாவது பிரதிநிதி திரு த. ஏகாம்பரம் பேசுகையில், ஓர் இனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு பெண்களுக்குண்டு எனவும் வலியுறுத்திக் கூறினுர்.

ஸ்ரீ சண்முக வித்தியாலய ஆசிரியை செல்வி பத்மலோசனி முத்துக்குமாரவும் சொற்பெருக்காற்றினுர்.

திரு. முத்துலிங்கம் இன்னிசையுடனும் மாணவிகளின் நாட்டியத்துடனும் மாநாடு இனிது முடிந்தது; முடிவில் செயலாளர் திரு. இ. சோமசுந்தரம் நன்றியுரை நல்கினுர்.

—

## பகுத்தறிவு சொற்பயிற்சி மன்றம்

அகில இலங்கை சொற்பயிற்சிக் கூட்டம் கடந்த 10-4-60ல் கொக்குவில் சனசமூக படிப்பகத்தில் திரு க. சீவகாருண்யம் தலைமையில் நடைபெற்றது

தலைவர் உரைக்குப் பின் திரு. கனகதுரைராசன் "பெரியார் ஒருவர் தானே" என்ற தலைப்பில் பேசுகையில் கூறியதாவது:-

பகுத்தறிவுக் கொள்கைகளையும் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் மேல்நாடுகளில் பரப்பி அதில் வெற்றி கண்டவர்கள் கலிலீயோ, இங்கர்சால், வில்லியம் ஆர். வி, நியூட்டன், டார்வின், ரூசோ, வால்டேர் சாக்கிரடீஸ், பிளேட்டோ, கார்ல் மாக்ஸ், மாட்டீன் லூதர் போன்ருேர்; அவர்களின் முயற்சியின் பயனுகத்தான் இன்று மேல் நாடுகளில் மக்கள் புதுமைக் கருத்துக்களை அறிந்து ஆராய்ச்சி செய்து பிரமிக்கத்தக்க விஞ்ஞான அம்சங்களை கண்டுபிடித்து முன்னேறிக் கொண்டு வருகிருர்கள். அதே போன்று தான் இந்த இருபதாம் நூற்ருண்டில் தமிழகத்திலும் ஒரு பெரியார் தோன்றி சமுதாயத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களையும் பகுத்தறிவுக் கொவ்வாத சில வைதீக சடங்கு சம்பிரதாயங்களையும் முறியடித்து மக்களுக்கு புத்துணர்வை ஏற்படுத்தி வருகிருர். அவரது கொள்கையின் பயனுகத்தான் இன்று இப்படியான பகுத்தறிவு இயக்கங்கள் ஒவ்வொரு நகரங்களிலும் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஆகையால் நாங்களும் அக்கருத்துக்களை மனதில் வைத்து பகுத்தறிந்து பணி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக திரு. ச. யோகேந்திர ராசாவும் சொற்பொழிவு நிகழ்த்தினுர்;

# கடிதம் சிரித்தது!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் என்பதை நான் உணர்கிறேன். ஆயினும் எழுத வேண்டியிருக்கிறது. இதற்காக என்னை மன்னியுங்கள்.

மகேன்...! என்னை நீங்கள் மறந்து விட வேண்டும். இது தான் இவ்வபலைக்குத் தாங்கள் அளிக்கும் கடைசி அன்புப் பரிசு. துரோகி என்று என்று என்னை ஏசுவீர்கள். நன்ருக ஏசுங்கள்.

மகேன், பால் உப்பு இரண்டும் நல்லவை என்ருலும் இரண்டும் சேர முடியாது என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். நாங்கள் இருவரும் நல்லவர்கள். மிகவும் நல்லவர்கள். இருந்தும் உங்கள் அந்தஸ்திற்கும் கௌரவத்திற்கும் நான் ஏற்றவளல்ல.

வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம். அதில் காதல் தான் உருட்டுக்காய். ஆடியவர்கள் நாங்கள். தோற்றுவிட்டோம். அதற்காகக் கவலைப் பட முடியுமா...? உங்களிடம் ஒரு கடைசி வேண்டுகோள். நீங்கள் கண்டிப்பாக ஒரு பெண்ணை மணந்து கொள்ள வேண்டும். தியாகத்தின் சின்னமாக உங்கள் பூங்காவில் மலரும் முதற் பூ பெண்ணுக இருந்தால் எம உறவின் ஞாபகமாகச் சுமதி என்றழையுங்கள்.

அன்பின் சுமதி.

அமைதியின்றி வாடிய மகேன் சிறிது காலத்தால் தன் பெற்ருர் விருப்பப்படி ஒரு பெண்ணை மணஞ்செய்து கொண்டான்.

டாங்! டாங்!! டாங்!!! என்று ஒலித்த பாடசாலை மணி சுமதியின் சிந்தனைக்கு முற்றுப் புள்ளியிட்டது. அன்று எப்படியாவது அக்குழந்தையின் தந்தையைப் பார்த்துவிட வேண்டும் என்று துடித்தாள் சுமதி.

நேரே மேல் மாடிக்குச் சென்று பாடசாலை வெளிப்புறக்கதவில் தன் கண்ணேட்டத்தைச் செலுத்திஞள். பல குழந்தைகளின் பெற்ருர் வருவதும் போவதுமாக இருந்தார்கள். கடைசியாக சுமதி வழிமேல் விழிவைத்திருந்த குழந்தையின் தந்தையும் வந்தார்; அவளுக்கு ஒரு நிமிடம் தன் கண்களையே நம்ப முடியவில்லை; மூன்ருண்டுகளுக்குப் பின்னரும் ஒரு வித மாற்றமும் இன்றி அன்று பார்த்த மகேந்தரின் போலவே காட்சியளித்தான் அவன். வந்தவன் குழந்தையை வாரியணைத்து முத்தமிட்டபடியே சென்ருன்.

சுமதியின் கண்களை நீர் திரையிட்டது. எனக்கும் அவருக்கும் பிறந்திருக்க வேண்டிய குழந்தை...... அவளால் அதை கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. யாரும் பார்க்காதபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நாட்கள் ஓடின. மகேந்திரன் அறியாத நிலையில் சுமதி நாள்தோறும் அவனைத் தரிசித்து வந்தாள் அதில் அவளுக்கு ஒரு தனி இன்பம். அன்றும் வழக்கம் போல சுமதி பாடம் படிப்பித்துக் கொண்டிருந்தாள். ஏதோ அவசர ஜோலியாக வீட்டுக்குப் போக அரைமணி முன்னரே அலுவலகத்தை விட்டகன்ற மகேந்திரன் வழியிற் தன் குழந்தையையும் கூட்டிப்போக வகுப்பிற்குள் நுழைந்தான். எதிர்பாராத சந்திப்பில் இருவருமே சூழ்நிலையை மறந்து செய்வதறியாது திகைத்தனர். மகேந்திரனுக்கு ஏதோ அதிகம் பேச வேண்டும் போல இருந்தது. ஆனல் மனதில் உதித்தவை நாவில் வர மறுத்தன. எப்படியோ சமாளித்து "சுமதி! என்னைத் தெரியவில்லையா...?" என்றுகேட்டே விட்டான்.

"தெரியாமல் என்ன...? வகுப்பறை என்னத்தைதப் பேசுவ...து? சாயந்திரமாக வந்தால்......" அவள் முடிக்கவில்லை.

மாலையில் உன்னை எங்கே சந்திக்க முடியும் சுமதி? பெருமிதத்துடன் வினவினுன் மகேந்திரன்.

"பாடசாலை விடுதியில்" அமைதியாகப் பதிலளித்தாள் அவள்.

பிரிய மனமில்லாமற் பிரிந்தான் மகேன்.

அவன் போவதையே உற்று நோக்கிக் கொண்டிருந்த சுமதி தலைமை ஆசிரியைக்குத் துண்டு மூலம் அறிவித்து விட்டு நேரே விடுதிக்குச் சென்று தன் படுக்கையிற் 'தொப்' என்று விழுந்தாள்.

பிறவிக்குருடன் திடீர் என்று கண் திறந்தால் எத்தனை ஆச்சரியப் படுவானே, அவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தான் மகேன். அந்திப் பொழுதை ஆவலோடு எதிர்பார்த்த அவனுக்கு அன்றையப் பொழுது கழிவதே கஷ்டமாக இருந்தது. சில வேளைகளில் நேரங்கூட எவ்வளவு நீண்டு விடுகிறது? எப்படியோ மாலைப் பொழுதும் வந்தது. மகேன் வேகமாகப் பாடசாலையை நோக்கி நடந்தான். அதை விட வேகமாகச் சென்றது அவன் மனம். பாடசாலை வாயிலில் குழுமி நின்ற ஆசிரியகுழாம் இவனைக் கண்டதும் பிரிந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சென்றனர். அவனுடைய கண்கள் ஆவலோடு அவளைத் தேடியது. நேராகச் சென்று தலைமை ஆசிரியையிடம் விசாரித்தான். அதுவரை அவள் கையில் இருந்த கடிதம் அவனது கைக்குப் பரிமாறியது.

ஆசை உந்தித்தள்ள ஏதோ பயம் ஒன்று பின்னல் நின்று பிடித்திழுக்க ஆவேசமாக பிரித்துப் படித்தான். ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அவன் தலையில் அடித்திருந்தாலும் அவன் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டான். பெறற்கரிய கண்பார்வையைப் பெற்றிழந்தவன் போலாகியது அவன் நிலை. "சுமதி பட்டுப்போன என் வாழ்க்கைச்செடி உன் தரிசனத்தால் மீண்டும் துளிர் விடும் என எண்ணியிருந்தேன். ஆனல் பட்டுப்போன என் வாழ்க்கைச் செடி என்றுமே பட்டமரமாக வேண்டுமென்பதா உன் ஆசை...? தாயற்ற என் சுமதிக்குத் தாய் கிடைத்து விட்டாள் என்று இறுமாந்தேன். மனைவியை இழந்த எனக்கு நீ அன்பு மனைவியாவாய் எனக்கனவு கண்டேன். பாலைவனமான என் வாழ்க்கை பசும்புற்தரையாகலாம் என்று கற்பனை செய்தேன். ஆனல் நீ ஒன்றையும் பொருட்படுத்தாமல் என்னை விட்டுப் பிரிந்து விட்டாயே சுமதி!. என்னை இப்படி ஏமாற்றுவாய் என்பது அப்பொழுதே தெரிந்திருந்தால் உன்னைச் சந்தித்த பொழுதே என் வரலாற்றைக் கூறியிருப்பேன்? வாழ்க்கை ஒரு சூதாட்டந்தான் சுமதி. அதில் நாம் இருவருமே தோற்றுவிட்டோம்" நடைப்பிணம்போல் நடந்துகொண்டிருந்தான் மகேன். அவனைப் பார்த்துச் சிரிப்பது போல காற்றில் படபடத்து அவன் [illegible] ராஜிநாமாக் கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான 3-வது வாரம்!

## குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கும் குதூகலமான ஹாஸ்யக் கதை!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை) **நியூசினிமா** (குருணாகல்) **விஜிதா** (மஸ்கெலியா) **தீவொளி** (நுவரெலியா)

ஆகிய திரைகளில்



## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

நடிகர்கள்: **ஜெமினி கணேசன், பாலையா, ரங்கராவ், தங்கவேலு, சாரங்கபாணி**
டி. ஆர். ராமச்சந்திரன், கருணாநிதி
நடிகைகள்: **சாவித்திரி, ஜமுனா, ஈ. வி. சரோஜா, முத்துலட்சுமி**
ஆகியோர் நடித்த

**விஜயாவின்**

# கடன் வாங்கி கல்யாணம்



பின்னணி பாடியவர்கள்:
எ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், எஸ். சி. கிருஷ்ணன், லீலா, சுசீலா, ரத்னமாலா

டைரக்ஷன்:
**பிரசாத்**

ஸ்டுடியோ:
**வாஹினி**


இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்தை, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஏப்ரல் 24-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org